# சிறகு வைத்த கதைகள்

சிறுவர் இலக்கியம்



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு வைத்த கதைகள்

## சிறுவர் இலக்கியம்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எந்தையும் தாயும் இருந்து குலாவி, இனியன பேசி என்னைக் கருவில் உருவாக்கி, ஈன்றெடுத்து, எடுத்தடி வைத்து நடந்து, வளர்த்து ஆளாக்கிய ஆலங்கேணிக் கிராமத்தின் எழுச்சிக்காகச் சிறுவர்களை மதித்து என்னோடு இணைந்து கல்விச் சேவை செய்வதில் ஈடுபட்டுழைத்த என்னுயிர் நண்பரான அமரர் கல்விப் பணிப்பாளர் க.தங்கராஜா(ஆலையூரன்) தம்பி திரு.சோ. கேசவராஜா.(அதிபர்) அமரர் திரு. வீ.நாகேந்திரம். (முன்னாள் தபால் சேவையாளர்) முன்னாள் அதிபர்களான திரு.சி.சின்னத்தம்பி, திரு.ம. ஸ்ரனிஸ்லாஸ், திரு .க. வெற்றிவேல், எனது தம்பி க.விஜயகுமார் ஆசிரியர், புலம்பெயர்ந்து வாழும் ஆசிரியர் தம்பி ம. மகாலிங்கம், விநாயகர் மகாவித்தியாலயமாகப் பெயர்மாற்றம் செய்து அளப்பெரிய சேவை செய்த மைத்துனன் அதிபர் கு.கோணாமலை, இக்கட்டான காலகட்டத்தில் அதிபர் பதவியை ஏற்று இன்றைய நிலைக்கும் தரத்திற்கும் கொண்டுவரப் பாடுபட்டுழைத்த அதிபர் திரு.சோ.சச்சிதானந்தம் அவர்களுக்கும், கிண்ணியா கிராம சபையில் ஆலங்கேணியைப் பிரதிநிதிப் படுத்திய அமரர்களான ஆறுமுகம், க. தாமோதரம்பிள்ளை, கா.முத்துக்குமார், க.கணபதிப்பிள்ளை, ஆலங்கேணி கிராம சபையின் முதலாவது தலைவர் திரு. கோ.செல்லத்தம்பி ஆகியோருக்கும், மகாவித்தியாலயமாகத் தரமுயரவும், க.பொ.த (உ / த) வகுப்பு அனுமதி பெறவும் உழைத்த மூதூர் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அ.தங்கத்துரை அவர்களுக்கும், ஆலங்கேணி மகாவித்தியாலயத்தில் இருந்து முதன்முதலாகப் பல்கலைக் கழகம் செல்வதற்கு அயராது உழைத்த ஆசிரியர் திரு.எஸ்.நவரத்தினம் (உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் அதிபர்) அவர்களுக்கும் இன்று அதிபர் பொறுப்பினை ஏற்று வழிகாட்டி வருபவரும், முதன்முதலாக எமது பாடசாலையூடாகப் பல்கலைக்கழகம் சென்றவர்களுள் ஒருவரான திரு.க. ரவிதாஸ் அவர்களுக்கும், இந்நூலைச் சமர்ப்பணம் செய்கின்றேன். இதுதான் நான் உயிரோடு இருக்கும்போது என்னால் செய்யக்கூடிய நன்றியறிதலாகும்.

ஆசிரியர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : சிறகு வைத்த கதைகள்.

வகை : சிறுவர் இலக்கியம்.

ஆசிரியர் : ச.அருளானந்தம் (கேணிப்பித்தன்)

உரிமை : ஆசிரியருக்கு.

முதற்பதிப்பு : 15 - 07 - 2008

அட்டைப்படமும்
படங்களும் : ச.அ.அருள்பாஸ்கரன்.

வெளியீடு : அருள் வெளியீடு
37/7, மத்திய வீதி
உவர்மலை, திருகோணமலை.
தொ.பே.இல. 026-2221507

ISBN : 955-98211-6-4

பதிப்பகம் : நிஷான் பிரின்டர்ஸ்

கிடைக்குமிடம் : லங்கா புத்தகசாலை
F.L-1, 14, டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர
கொழும்பு -12.

விலை : ரூபாய் 150/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

கதைகள் கேட்பதில் அனைவருக்கும் ஆர்வம் உண்டு. கதைகள் வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டவல்லன. கதைப்புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை வளர்க்க உதவும். பிறமொழிகளில் நல்ல அருமையான கதைகள் உள்ளன. நான் படித்துச் சுவைத்தவற்றை நமது சிறார்கள் படித்துச் சுவைக்க வேண்டும் என்பது எனது பேரவாவாகும்.. அதனால் படித்தவற்றில் சிலவற்றை தமிழில் இலகுவான நடையில் எழுதியுள்ளேன். பிற மொழிகளில் உள்ள கதைகள் சுவாரஸ்யமானவை. சிறுவனாக இருந்தபோது எனது ஆச்சி சொன்ன கதைகளும். எனது அக்கா திருமதி. தில்லையம்மா கணபதிப்பிள்ளை சொன்ன கதைகளும் என்னைச் சிந்திக்க வைத்தன. 'ஆமைக்குஞ்சு ராசன் கதை, விக்கிரமாதித்தன் கதை, ராஜா தேசிங்கு கதை, மகாபாரதக் கதைகள், இராமாயணக்கதைகள், அபிமன்யு கதை' இன்னும் பல கதைகளை ரசனையோடு எனது அக்கா உறங்கும்வரை சொல்லுவார். நான் கற்பனையில் மிதப்பேன். எனது கற்பனையை ஆங்கிலக் கதைகள் வளர்த்து விட்டன. பெயாரி ரேல்ஸ் (Fairy tales), ஜூலிசிஸ், றொபின்கூட், ஸேக்ஸ்பியரின் கதைகள், சார்ள்ஸ் டிக்கன்ஸ், ஹான்ஸ் அண்டர்சன்ஸ், மற்றும் பல ஆங்கிலக் கதைகள் என்னை ஈர்த்தன. படிக்கும்போது எனது மனத்திரை விரிந்து அற்புதமான உலகில் வலம் வரும். இந்த உணர்வுகளை நமது சிறார்களும் அனுபவிக்க வேண்டும் என்ற பேரவா மனதைக் குடைந்து கொண்டே இருக்கும். இவற்றை எல்லாம் மொழிமாற்றம் செய்து சிறார்களுக்கு அளித்தால் என்ன? என்ற வினாக்களின் பிரதிபலிப்பே இந்நூல். ஆங்கில மொழி மூலமான கருக்களை நமது தமிழ் மொழிக்கேற்ற வாறு, நமது பண்பாடுகளுக்கேற்ற வகையில் உருமாற்றம் செய்து எழுதியுள்ளேன். இக்கதைகளை எழுதுமுன் எனது பேரக்குழந்தை களுக்குக் கூறிக்காட்டுவேன். அவர்களது முகங்களை நோட்டம் விடுவேன். அவர்களது முகத்தில் மகிழ்ச்சி தென்படும்போது ஆனந்தமடைவேன். படங்களை வரைந்துதவிய மகன் அருள்பாஸ்கரன், அழகாக அச்சாக்கம் செய்த நிசான் நிறுவனத்தினர்களுக்கும், பலவழிகளில் உதவிய லங்கா புத்தகசாலையினர் அனைவருக்கும் எனது நன்றி. இந்த நூலைப் படிக்கும் நீங்களும் மகிழ்வீர்கள் என்ற எண்ணத்தில் உங்களிடம் ஒப்படைக்கிறேன். படித்துப் பயனடையுங்கள். உங்களுக்குத் தோன்றும் கதைகளை நீங்களும் எழுதிப் பாருங்கள். ஒரு காலத்தில் நீங்களும் எழுதுவதில் வல்லவராக ஆகுவீர்கள். ஆகவேண்டும் என்பதே எனது ஆசை. இந்நூல் உருவாக உறுதுணையாக நின்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாபூஷணம் – கேணிப்பித்தன். ச.அருளானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.....

1. விழியழகி
2. இவள்தான் இளவரசி
3. சுட்டிப் பையன் நந்து.
4. தம்பைநிலா.
5. சௌந்தர்யாவும் ஏழு குள்ளர்களும்.
6. கடல் இளவரசி.
7. அவரைக் கொடி.
8. பூனைக் குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியழகி

தீனேரிபுரம் அழகிய நகரம். அது தம்பை நாட்டின் தலைநகராக விளங்கியது. அந்த நகரைத் தேனேரி எனவும் அழைப்பார்கள். தீனேரி மகாவலி நதியின் வலது கரையில் இருந்தது. மகாவலி நீரால் வளம் பெற்றது. செல்வச் சிறப்பு மிக்கது. மகாநாயகன் அந்நாட்டின் அரசன். மக்களைக் குறைவில்லாது ஆண்டுவந்தான். கடவுள் பக்தி நிறைந்தவன். தேவதைகளின் அருட்பார்வை அவனுக்கிருந்தது. மக்கள் அரசனை மதித்தனர். மழை தவறாது பெய்தது. பயிர் செழித்து விளைந்தது. மக்கள் கவலை இல்லாது வாழ்ந்தனர். அவனது மனைவி மகாதேவி. அன்பும் அழகும் உடையவள். நாட்டு மக்களை நேசிப்பவள். அவர்களது புகழ் உலகெங்கும் பரவியது. தேவர்களும் மகிழ்ந்து வந்து போற்றினார்கள். ஆனால் அவனுக்கு ஒரு குறையிருந்தது. அது குழந்தை இல்லையே என்ற குறைதான். அந்த ஏக்கம் வாட்டியது.

அரசன் தேவர்களை நினைந்து போற்றினான். அரசியோடு கோயில்களை வலம் வந்தான். பக்கத்து ஊர் மாகாமம் அங்கு பெரிய குளமிருந்தது. குளத்தையண்டி மூர்க்கமாதா கோயில் இருந்தது. மூர்க்கமாதா பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்ற குலதெய்வம். அந்தத் தெய்வத்தை நோக்கிப் பிரார்த்தனை செய்தான். மக்களும் அரசனுக்காகப் பிரார்த்தனை செய்தனர். அவர்களது பிரார்த்தனை வீண் போகவில்லை. மகாதேவி தாய்மை அடைந்தாள். அரசன் மகிழ்ந்தான். மக்கள் சந்தோசப் பட்டனர். தேவர்கள் வந்து வாழ்த்திச் சென்றனர். பல நாட்டு அரசர்களும் வாழ்த்தினர். நாட்கள் மாதங்களாகிக் கழிந்தன.

அரண்மனை சந்தோசத்தால் பொங்கியது. அரண்மனையில் அழகிய குழந்தை பிறந்தது. நாடு விழாக் கோலம் பூண்டது. அரசன் வீறுநடை போட்டு நடந்தான். குழந்தையை எடுத்து முத்தமிட்டான். அது அழகான பெண்குழந்தை. ஒளிவீசும் கண்களைப் பார்த்தான். பிஞ்சுக்கால்களை வருடினான். தக்காளிக் கன்னங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவினான். மெய்மறந்து நின்றான். அரசியை வாழ்த்தினான். மக்கள் திரண்டு வந்து பார்த்தனர். அழகிய தேவதைகள் வானிறங்கி வந்தனர். சிரிப்பொலி காற்றில் பரவியது. மலர்தூவி வாழ்த்தினர். மெல்லிய சிறகுகளை அசைத்துச் சென்றனர். மக்கள் பார்த்துப் பிரமித்தனர். மகிழ்ந்து ஆரவாரித்தனர்.

மகளைத் தொட்டிலில் இடவேண்டும். பெயர் சூட்டவேண்டும். என்ன செய்யலாம்?. அமைச்சர்களோடு ஆலோசித்தான். நாள் குறிக்கப் பட்டது. அழைப்புக்கள் தயாரிக்கப் பட்டன. ''தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் அனுப்பவேண்டும். அரசர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்க வேண்டும். யாரையும் தவறவிடக் கூடாது.'' அரசன் கட்டளை பிறப்பித்தான். அழைப்பிதழ்களை அரசன் பார்வையிட்டான். அழைப்பிதழ்கள் பறந்தன. அரசன் அமைதியடைந்தான். மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தான். மக்கள் நகரை அலங்கரித்தனர். ஆடிப்பாடிக் குதூகலித்தனர். நகரம் விழாக் கோலம் பூண்டது.

குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. மண்டபத்தில் தங்கத் தொட்டில் அசைந்தது. மக்கள் திரண்டிருந்தனர். தேவதைகள் தமது சிறகுகளை விரித்தனர். வானில் இருந்து இசையோடு வந்தனர். மண்டபம் நிறைந்திருந்தது. அரசர்கள் வாழ்த்தினர். மகாநாயகன் மண்டபத்தினுள் வந்தான். மண்டபம் கலகலத்தது. அரசன் குழந்தையை வாரியெடுத்தான். உயரத்தில் தூக்கிப் பிடித்தான். "விழியழகி", "விழியழகி" என்றான். "விழியழகி" என மக்கள் சத்தமிட்டனர். குழந்தையைத் தொட்டிலில் இட்டான். தனது கைகளால் ஆட்டிவிட்டான். ''விழியழகி வாழ்க'' என மண்டபம் அதிர்ந்தது. அந்த ஒலி வானைப் பிளந்தது.

அரசர்கள் வரிசையில் நின்று வாழ்த்தினர். பொதுமக்கள் ஒவ்வொருவராக வந்து வாழ்த்தினர். தேவதைகள் குழந்தையை வலம் வந்தனர். வாழ்த்தினர். தூரத்தே இன்னிசை கேட்டது. அனைவரது விழிகளும் திரும்பின. பன்னிரெண்டு தேவதைகள் வரிசையாக வந்திறங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது சிரிப்பொலி மாளிகையை நிரப்பியது. திறந்த வாய் மூடாது அனைவரும் பார்த்தனர். தேவதைகள் குழந்தையைச் சுற்றி வந்தனர். வாழ்த்திப் பாடினர். ஒவ்வொருவராக வாழ்த்தி வரமளித்தனர். முதலாவது தேவதை வந்தாள். குழந்தையை வாழ்த்தினாள். ''உனது முகம் என்றும் அழகாக இருக்கட்டும்.'' என்று வாழ்த்திச் சென்றாள். மற்றத் தேவதை வந்தாள். ''மென்மையும் அன்பும் உன்னோடு இருக்கட்டும்.'' வாழ்த்திச் சென்றாள். இவ்வாறு பதினொரு தேவதைகளும் வாழ்த்தினர்.

கதவுப் பக்கம் பெரிய இரைச்சல் கேட்டது. அந்த இரைச்சலுக்குச் சொந்தக்காரி யார்.? அது ஒரு தேவதையின் குரல்தான். எல்லோரினது கவனமும் அங்கே திரும்பியது. அங்கே வயதுமுதிர்ந்த காடேறி கோபாவேசத்தோடு நின்றாள். அவளது கண்கள் சிவந்திருந்தன. அவள் கோபமாகச் சத்தமிட்டாள். அனைவரது செவிகளும் அவளது குரலைக் கேட்டன. அவள் பேசினாள். அரசன் பயந்து நடுங்கினான். ''எனக்கு வயது போய்விட்டது. என்ன? நான் இருப்பதையே மறந்து விட்டீர்கள். இல்லையா.? சரி..சரி.. நான் யாரென்று காட்டுகிறேன். உங்களுக்கு நல்ல பாடம் புகட்டுகிறேன்.'' கூறிக்கொண்டு தொட்டில் பக்கம் சென்றாள். குழந்தையை உற்றுப் பார்த்தாள். ஆவேசமாகச் சத்தமிட்டாள்.

அரசன் தடுமாறினான். ''எப்படி இந்தத் தேவதையை மறந்தேன். என்ன நடக்குமோ? எப்படிச் சாந்தப் படுத்துவது?'' தனது மனதுள் நொந்து கொண்டான். அவனால் அந்தத் தேவதையைத் தடுக்கமுடிய வில்லை. பின்னால் ஓடினான். அதற்குள் காடேறி முந்திவிட்டாள். ''இந்தக் குழந்தைக்குப் பதினைந்தாவது பிறந்தநாள் வரும். அவள் விரலில் ஊசியொன்று குத்தும். உடனே அவள் இறந்து விடுவாள்.'' உரத்த குரலில் சத்தமிட்டாள். அவளது குரல் கோபத்தால் நடுங்கியது. சத்தமிட்டவாறே வெளியே சென்றுவிட்டாள். அரசன் அவளைப் பின்தொடர்ந்தான். ஆனால் அவள் விரைவாகச் சென்றுவிட்டாள். அரசன் தலையில் அடித்துக் கொண்டான். அழுது புலம்பினான். அரசி மயங்கி விழுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசமான நேரத்தில் இப்படி ஆகிவிட்டதே. தேவர்களும் செய்வதறியாது தவித்தனர். அப்பொழுது பன்னிரெண்டாவது தேவதை வந்தாள். அவள்தான் மூர்க்கமாதா. கவலையோடு குழந்தையை உற்றுப் பார்த்தாள். அந்தக் குழந்தையின் காதருகே குனிந்தாள். மெல்ல ஏதோ முணு முணுத்தாள். பின் அரசன் பக்கம் சென்றாள். அரசனைத் தேற்றினாள். ''கவலையை விடுங்கள். எல்லாம் விதிப் பயன். நடப்பது நடந்தே தீரும். என்னால் சிறுஉதவி மட்டும் செய்ய முடியும். அந்தக் காடேறித் தேவதையின் சாபத்தை முற்றாக விலக்கமுடியாது. ஆனால் குறைக்க முடியும். அதைச் செய்துள்ளேன். எப்படியும் ஊசியினால் கண்டம் உண்டாகும். ஊசி குத்தியதும் அவள் இறக்கமாட்டாள். ஆனால் அவள் உறங்கிவிடுவாள். ஆழ்ந்த உறக்கம் ஆட்கொண்டு விடும். நூறு ஆண்டுகள் உறக்கத்தில் இருப்பாள். அனைத்துமே உறக்கத்தில் ஆழ்ந்து விடும். அவ்வளவுதான் என்னால் செய்யமுடியும்'' கூறிவிட்டு அகன்றாள். தேவதைகள் வந்தவழியே வானில் சென்று மறைந்தனர். அனைவரும் மூர்க்கமாதாவை நன்றியோடு பார்த்தனர்.

நாட்கள் நகர்ந்தன. ஆண்டுகள் புரண்டன. விழியழகி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள். அவள் அனைவரினதும் செல்லப் பிள்ளை. எல்லோரும் பாசத்தைப் பொழிந்தனர். அந்த நாட்டின் அழகியாகத் திகழ்ந்தாள். அழகிய கருநாவற் கண்கள். அப்பிள் பழங்களைப் போல் கன்னங்கள். முத்துச்சம்பாப் பல்வரிசை. முத்துதிரும் சிரிப்பு. கண்டாரைக் கவரும் புன்னகை. இனியன பேசும் சுபாவம். எல்லோருடனும் கனிவாகப் பேசும் பண்பு. அதனால் விழியழகி மேல் அனைவருக்கும் பிரியம்.

''ஊசிகள் அனைத்தும் அழிக்கப் படவேண்டும். ஊசி போன்ற அனைத்தும் தடைசெய்யப் படுகிறது'' அரசனின் ஆணை பிறந்தது. ஊசிவகை கொண்டு செய்யும் தொழில்களும் நின்றன. தையற் கலை ஓடியொழிந்தது. எனினும் பின்னற்கலை முற்றாக அழியவில்லை. வீடுகளில் வயதானவர்களுக்கு வேலை வேண்டுமே?. விழியழகிக்குத் தீங்குபயக்கும் பொருட்கள் ஓடிமறைந்தன. அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக்கவனமாகப் பாதுகாத்தனர். விழியழகியின் சாபத்தையே மக்கள் மறந்துவிட்டனர். ஆண்டுகள் ஓடிமறைந்தன.

பூரிப்போடு விழியழகி வளர்ந்தாள். அவளைச் சுற்றிப் பாதுகாப்பு இருந்தது. மாளிகைக்கு உள்ளேயே உலகம் இருந்தது. எல்லா வசதிகளும் இருந்தன. பட்டாம்பூச்சியாகப் பறந்து திரிந்தாள். அரண்மனையைச் சுற்றி வலம்வந்தாள். அரண்மனை அழகாகக் காட்சி தந்தது. அரசனும் அரசியும் மகளைக் கண்காணித்தனர். மக்களும் அவளுக்காகப் பிரார்த்தினர். விழியழகி சிட்டாக வலம் வந்தாள். சிரிபொலி சிந்த ஓடித்திரிந்தாள். அவள் சுதந்திரமாகப் பறந்து திரிந்தாள். பதினைந்தாவது பிறந்த நாளும் வந்தது. அதனைப் பற்றி யாரும் சிந்திக்க வில்லை.

விழியழகி மனம்போன போக்கில் நடந்தாள். அரண் மனையின் மேல்மாடியில் உலா வந்தாள். துள்ளிப் பாய்ந்து திரிந்தாள். தூரத்தே கதவு தெரிந்தது. கதவு திறந்தே கிடந்தது. மெல்ல நடந்தாள். கதவூடாக எட்டிப் பார்த்தாள். அங்கே பாட்டி நெசவில் ஈடுபட்டிருந்தாள். அவளது கைகளில் பின்னல் ஊசிகள் இருந்தன. ''பாட்டி என்ன செய்கிறீர்கள்.'' கணீரென்ற குரல் வந்தது. பாட்டி திரும்பிப் பார்த்தாள். விழியழகியைக் கண்டதும் துள்ளி எழுந்தாள். அவளது அழகில் மயங்கிவிட்டாள். அவளைப் பார்த்துக் கொண்டே நின்றாள். ''என்ன பாட்டி அப்படிப் பார்க்கிறீர்கள். நான்தான் விழியழகி.'' கிளிமொழியில் பதிலளித்தாள். பாட்டிக்கு மனம்நிறைந்த மகிழ்ச்சி. தன்னைத் தேடிவந்த தேவதை என்றே நினைத்தாள்.

''நான் இந்தத் துணியை நெய்கிறேன்.'' என்றாள். துணியைத் தொட்டுப் பார்த்தாள். மிகவும் அழகானது. நீங்களா செய்தீர்கள்.? எப்படிச் செய்தீர்கள்.? இந்த ஊசிகளாலா செய்தீர்கள்?. அழகாக இருக்கிறது.'' கூறிக்கொண்டு ஊசிகளைத் தொட்டுப் பார்த்தாள். இவைகள் எப்படி வேலை செய்கின்றன.? வியப்போடு நின்றாள். அவள் தனக்கு வரவிருக்கும் ஆபத்தை உணரவில்லை. சாபத்தைப் பற்றி நினைக்கவில்லை. அவளுக்கு ஞாபகம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசிகளைப் பாட்டியிடமிருந்து வாங்கினாள். விழியழகியின் கைகளில் ஊசிகள் இருந்தன. "எப்படிச் செய்வது?" கேட்டாள். பாட்டி ஊசிகளை விழியழகியிடம் இருந்து வாங்கினாள். "இப்படித்தான் செய்வது." என்று பாட்டி செய்து காட்டினாள். உடனே விழியழகி ஊசிகளைப் பறித்தெடுத்தாள். பின்னலைத் தொடர்ந்தாள்.

பின்னும்போது ஊசி விரலைத் தாக்கிவிட்டது. இரத்தம் கசிந்தது. பாட்டி அட்டகாசமாகச் சிரித்தாள். உடனேயே உறக்கம் ஆட்கொண்டு விட்டது. உறங்கி விட்டாள். கட்டிலில் கிடத்தப் பட்டாள். தொடர்ந்து அரண்மனை வாசிகள் அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டனர். காவலாளிகள் நின்றபடியே உறங்கினர். அரசனும் அரசியும் சிம்மாசனத்திலேயே உறங்கினர். தாதியர்கள் அனைவரும் உறங்கிவிட்டனர். அரண்மனையை அமைதி ஆட்கொண்டு விட்டது.

வருடங்கள் உருண்டோடின. அரண்மனை முட்காடாகியது. மாளிகையைச் சுற்றிக் காடுகள். செடிகொடிகள் ஊடாக மாளிகை தெரிந்தது. நாடும் நகரமும் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டது. நாடு உறக்கத்தில் இருக்கும் வரலாறு பரவியது. அவளைத் துயிலில் இருந்து மீட்கப் பலர் புறப்பட்டனர். மகாவலிக் கரையோரம் வந்தார்கள். தீனேரிபுரம் அடைந்தார்கள். ஆனாலும் அவர்களால் மாளிகையினுள் போகமுடிய வில்லை. முட்புதர்களும் செடிகளும் இடர்கொடுத்தன. அடர்ந்த கொடிகளும் தடையாயின. இது கட்டுக் கதையென்றாகி விட்டது. பலர் மறந்திருந்தனர். ஆனால் தீனேரிபுரத்து மக்கள் மறக்கவில்லை. நூறு வருடங்கள் மெல்லக் கழிந்தன. துயிலும் அழகியின் கதை பரவிக் கொண்டுதான் இருந்தது.

தீனேரிபுரத்தின் வீதியில் புழுதி பறந்தது. குதிரையின் குளம்பொலி அதிர்ந்தது. வீரம் செறிந்த இளவரசன் குதிரையில் அமர்ந்திருந்தான். அவன் கற்சுனை நாட்டின் இளவரசன். வடிவழகன் அவனது பெயர். கற்சுனைநாடு மகாவலியின் இடது கரையில் அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலியைக் கடந்து வந்திருந்தான். அவனது கம்பீரம் எடுப்பாக இருந்தது. அவனது அழகு பலரையும் கவர்ந்தது. அவனது வீரவாள் சூரிய ஒளியில் மின்னியது. அரும்பு மீசை புன்னகைக்கு அழகூட்டியது. குதிரை அவ்வழியால் சென்றது. பலபக்கமும் பார்த்தவாறே சென்றான். அங்கே குழுமி இருந்தவர்களிடம் இளவரசியைப் பற்றி விசாரித்தான். அரண்மனைக்குச் செல்லும் வழியைக் கேட்டான். இளவரசியின் கதையைக் கூறினார்கள். ''இளவரசியைக் காண்பேன். அவளது உறக்கத்தை நீக்குவேன். அவளைக் காப்பாற்றுவேன்''. என்றான். குதிரையை பக்குவகமாகத் தட்டிவிட்டான். குதிரை அவனது எண்ணத்தைப் புரிந்துகொண்டது. மாளிகையை நோக்கி விரைந்தது.

மாளிகையைக் கண்டு கொண்டான். மரஞ்செடி கொடிகளால் சூழப்பட்டிருந்தது. காற்று வீசும்போது மரங்கள் அசையும். அப்போது அரண்மனை தெரியும். புதர்களை அகற்றிச் சென்றான். அரண்மனை வாசலை அடைந்து விட்டான். குதிரையை விட்டு இறங்கினான். வாளை உருவி முட்செடிகளை வெட்ட முனைந்தான். வாளை ஓங்கி வீசினான். வெட்டு விழுந்தது. அவனுக்கு ஒரே அதிர்ச்சி. அங்கே முட்செடிகளைக் காணவில்லை. பதிலாக ரோஜாச் செடிகள் தெரிந்தன. செடிகளில் ரோஜா மலர்கள் குலுங்கின. அரண்மனை வாசல் தானாகவே திறந்து கொண்டது. கதவுகள் அனைத்தும் திறந்து வழிவிட்டன. மெதுவாக நடந்தான். அவனுக்கு ஆச்சரியம். அமைச்சர்கள், பிரதானிகள் உறக்கத்தில் இருந்தனர். காவலாளிகள் நின்றபடியே உறங்கிருந்தனர். தாதிகள் கடமையில் இருந்தவாறே துயின்றனர். அரசனும் அரசியும் சிம்மாசனத்தில் உறக்கத்தில் இருந்தனர். எல்லாவற்றையும் பார்த்தவாறே சென்றான்.

அரண்மனை பழையநிலைக்குத் திரும்பிக் கொண்டு இருந்தது. அரண்மனைக்குள் இளவரசியைத் தேடிச் சென்றான். அறைகளைச் சல்லடை போட்டுத் தேடினான். மாடிக்குச் சென்றான். அறையொன்றில் கட்டில் தெரிந்தது. மெல்ல கட்டிலருகே சென்றான். அழகே உருவாக இளவரசி உறக்கத்தில் இருந்தாள். உற்றுப் பார்த்தான். அழகெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டுஉருவாகிப் படுத்திருந்தது. அவளது அழகில் மதிமயங்கினான். ''நீ விழித்துக் கொண்டால் எனது நாட்டையே தருவேன். உன்னை மணந்து கொள்வேன்.'' மனதுக்குள் கூறிக் கொண்டான். மெல்லக் குனிந்து நெற்றியில் கைவைத்தான். உடலில் சூடு தெரிந்தது. அவனது உள்ளம் குளிர்ந்தது. மெதுவாக நெற்றியில் முத்தமிட்டான்.

என்ன அதிசயம். இளவரசியின் உடல் அசைந்தது. இமைகள் திறந்து படபடத்தன. அவளது கண்கள் வடிவழகன் கண்களில் மொய்த்தன. உறக்கத்தில் இருந்த அழகு விழித்துக் கொண்டது. முன்னால் நிற்பவன் யார்.? அவளை அறியாமலேயே புன்னகைத்தாள். வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது. கண்களை மெதுவாகக் கசக்கினாள். கைகளை உயர்த்தி உதறினாள். மெல்ல எழுந்தாள். அதேசமயம் அரண்மனையும் விழித்துக் கொண்டது. அனைவரும் உறக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டனர். எங்கும் ஆரவாரம் எழுந்தது. விழியழகிக்குச் சாபவிமோசனம் கிடைத்து விட்டது.

அரசன் மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடினான். புத்துயிர் பெற்ற அரசு ஆட்சிபீடம் ஏறியது. மகாநாயகன் அமைச்சர்களை அழைத்தான். ''விழியழகியை மீட்டெடுத்தவனுக்கு என்ன பரிசு கொடுக்கலாம்.''? மகாநாயகன் கேட்டான். அவர்களுக்கு அரசனின் மனநிலை தெரியும். அனைவரும் ஏகமனதாகப் பதிலிறுத்தனர். ''வடிவழகனுக்குப் பரிசு விழியழகிதான்'' என்றனர். திருமண ஏற்பாடு தடபுடலாக நடந்தது. இம்முறை அனைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. எவரும் விடுபடவில்லை. கற்சுனை நாட்டு மக்கள் திரண்டு வந்திருந்தனர். கற்சுனை நாட்டின் அரசன் திசைநாயகன். மகாராணி மறைநாயகியுடன் வந்திருந்தான். பலநாட்டு மன்னர்களும் கூடியிருந்தனர். தேவர்கள் சிவனொளிபாத மலையிலிருந்து வந்திருந்தனர். தேவதைகள் இன்னிசையோடு வந்தனர். காடேறி மூதாட்டித் தேவதையும் வந்திருந்து வாழ்த்தினாள். திருமணம் சிறப்பாக நடந்தேறியது. வடிவழகன் விழியழகியோடு மகாவலிக் கரையோரம் மகிழ்ந்திருந்தான். மரங்கள் மலர் தூவி வாழ்த்தின. தேவர்கள் மலர்களைத் தூவினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவள்தான் இளவரசி

ஆனந்தபுரி அழகான நாடு. மகாவலி பாய்ந்து வளமூட்டும் திருநாடு. மகாவலி கடலோடு சங்கமித்துக் கொண்டிருந்தது. எங்கும் பசுமை போர்த்தி இருந்தது. பயிர்கள் செழித்துப் பயன் கொடுத்தன. மகுடாபதியின் நல்லாட்சியில் மக்கள் மகிழ்ந்தனர். மன்னுயிரையும் தன்னுயிர்போல் நேசித்தான். அரசி ஆனந்தவல்லி அரசனுக்குத் திருமதியாக விளங்கினாள். திருமதி என்பவள் தனது கணவனுக்கு அறிவுரை கூறுபவள். திருவாட்டி என்பவள் கணவனை ஆட்டிப் படைப்பவள். வேண்டியபோது ஆனந்தவல்லி அறிவுரை வழங்கினார். அவரது அறிவுரைகள் பிழைத்ததில்லை. நாட்டு மக்கள் ஆனந்தவல்லியைப் போற்றினார்கள். மக்கள் அரசியின்மேல் பெருமதிப்பு வைத்திருந்தனர். அவர்களுக்கு அறிவழகன் என்றொரு மகன். அவன் அறிவிலும் ஆற்றலிலும் வல்லவன். குதிரைச் சவாரியில் கெட்டிக்காரன். தோழர்களோடு குதிரைச் சவாரி செய்வான். மாலைநேரம் மலையடி வாரத்தில் ஆடிப் பாடுவார்கள். இன்பமாகப் பொழுது கழிந்தது. அறிவழகன் ஒரு கிளியை வளர்த்தான். அதன் பெயர் குயிலி. அது அவனது தோளில் குந்தியிருக்கும். அது அவனது நண்பனாகவும் தூதுவனாகவும் விளங்கியது. செல்லும் இடமெல்லாம் கிளியும் செல்லும். கைகளில் ஏந்திப் பறக்க விடுவான். சீட்டி அடித்ததும் பறந்து வரும். அவன் கைகளை நீட்டுவான். கைகளில் வந்து இருக்கும்.

அரசன் தனிமையில் இருந்தான். ஆனந்தவல்லி மன்னனிடம் வந்தாள். ''அறிவழகனுக்கு வயது வந்து விட்டது. அவனுக்குத் திருமணம் செய்வது நல்லது. ஆட்சிப் பொறுப்பையும் கொடுத்து விடலாம்தானே''?. என்றாள். ''நல்ல நேரத்தில் கூறினாய். நானும் உன்னிடம் அதுபற்றிக் கூறவிருந்தேன். அவனுக்கேற்ற இளவரசியைத் தேட வேண்டும். மணப்பெண் உண்மையான இளவரசியாக இருக்கவேண்டும். எல்லாவற்றிலும் அது முக்கியமானது. அறிவழகனோடு உரையாடிப் பார்த்தால் என்ன.?'' மன்னன் அறிவுறுத்தினான். தூரத்தில் அறிவழகன் வந்துகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தான். பெற்றாரைக் கண்டதும் அருகில் வந்தான். ''வா அறிவழகா. உன்னைப் பற்றித்தான் கதைத்தோம்.'' மன்னன் மெதுவாகத் தொடங்கினார்.

''அறிவழகா! நீ திருமணம் செய்துகொள்ள வேண்டும். உனது விருப்பத்தைச் சொல். அதன்படி செய்வோம்.'' மகாராணி கூறினாள். ''அம்மா! உங்கள் விருப்பம்தான் எனது விருப்பம். ஆனால் அவள் அரசகுடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும். உண்மையான இளவரசியாக இருக்க வேண்டும். அப்படிப் பட்டவளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.'' இளவரசன் பதிலளித்தான். அரசதம்பதியருக்குச் சந்தோசம் பிறந்து விட்டது. ''சரி உன்விருப்பப் படியே செய்''. என்றனர்.

''அப்பா! நான் பல நாடுகளுக்கும் செல்லவிருக்கிறேன். அரசகுடும்பங்களைச் சந்தித்துப் பேசப்போகிறேன். நான் தேடும் இளவரசியைத் தேர்ந்தெடுத்துக் கூறுகிறேன். அதுவரை எனக்கு அவகாசம் தாருங்கள்.'' இளவரசன் கூறி நின்றான். ''சரி உன்விருப்பம் போல் செய்'' என்றனர். இளவரசன் குதிரையில் ஏறினான். அவனது தோளில் குயிலி வந்திருந்தது. குதிரை வேகமாக விரைந்தது. குயிலி முன்னால் பறக்கும். பின் போனவேகத்தில் திரும்பி வரும். கிளி போகும் திசையில் குதிரை தாவிப்பறக்கும். பல நாடுகளுக்கு விரைந்தான். பல அரண்மனைகளைப் பார்த்தான். அரண்மனையைக் கண்டதும் குயில் பறந்து போகும். பின்னால் அறிவழகன் விரைவான். பல அழகிய பெண்களைக் கண்டான். ஆனால் அவன் தேடும் இளவரசியைக் காணவில்லை. பல மாடமாளிகைகளைப் பார்த்தாகி விட்டது. இதுவரைத் தான்தேடும் இளவரசியைக் காணவில்லை.

''உண்மையான இளவரசி தனிப்பண்பைக் கொண்டு இருப்பாள். அவளிடம் விஷேடமான தன்மை இருக்கும். ஒரு தனித்துவம் இருக்கும். ஆயிரத்தில் ஒருத்திதான் அப்படி இருக்க முடியும்.'' மனதினிலே எண்ணம் சுழன்றடித்தது. தனிமையில் வெறுங்கைகளுடன் சென்றான். அவனுக்குக் கவலையாக இருந்தது. தனது கவலையைத் தாயிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிட்டான். ''பயப்படாதே உனக்குரியவள் வருவாள். தைரியமாக இரு.'' மகாராணியார் தைரியம் ஊட்டினார்.

ஒருநாள் கடும்மழை பெய்துகொண்டு இருந்தது. பலத்த காற்றுச் சுழன்றடித்தது. இடி இடித்தது. மின்னல் வெட்டி முழங்கியது. மரஞ்செடிகள் அசைந்தாடின. மழைச்சாரல் அரண்மனைச் சுவர்களில் மோதியடித்தது. எங்கும் மழைநீர் வார்ந்தோடியது. அரண்மனையில் பெற்றாரோடு அறிவழகன் இருந்தான். அவர்கள் நாட்டு நடப்புகளை ஆராய்ந்தனர். காவலர்கள் குளிரில் ஒதுங்கி இருந்தனர். இருள் சூழ்ந்து விட்டது. அரண்மனையில் விளக்குகள் ஒளிபாய்ச்சின. பெரும் அமைதி நிலவியது. வெளியில் மழையின் அட்டகாசம். காற்றின் தீராத விளையாட்டு. மின்னலின் பாய்ச்சல். முழக்கத்தின் பயமுறுத்தல். அதுமிகப் பயங்கரமான நேரம். இருளில் ஒரு உருவம் நெளிந்து ஓடுகிறது. அரண்மனை வாசலை அடைகிறது. மழைநீர் சொட்டுச் சொட்டாக விழுகிறது. அரண்மனைக் கதவு தட்டப்படுகிறது. இடிமுழக்கத்தின் பயங்கர சத்தம். காவலாளிகள் பயந்து நடுங்கினார்கள். கதவின் சத்தம் உரத்துக் கேட்டது. அரசனே எழுந்தார். இந்தப் பயங்கர நேரத்தில் யார் தட்டுகிறார்கள்? அரசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தனது வாளை ஒரு கையில் ஏந்தினார். அடுத்த கையில் விளக்கை எடுத்தார். தானே கதவருகே சென்றார். மெல்லக் கதவைத் திறந்தார்.

அரசருக்கு அதிசயமாக இருந்தது. அங்கே அழகிய இளம் பெண் நின்றாள். மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். ''யாரம்மா நீ ?. தொப்பாய் நனைந்து விட்டாய். உள்ளே வா மகளே.'' கூறிக்கொண்டே அழைத்தார். நடுக்கத்துடன் அவள் உள்ளே நுழைந்தாள். தலையில் இருந்து மழைநீர் அருவி. சொட்டுச் சொட்டாய் மழைநீர் வடிந்தது. கதவைத் தாழிட்டார். அவர் முன்னால் நடந்தார். அவள் பின்தொடர்ந்தாள். மகாராணி பதறியடித்து வந்தார். மழைநீரில் அவளது அழகு மின்னியது. பதுமைபோல் இருந்தாள். அவளது அழகு மகாராணியைக் கவர்ந்தது. ''மகளே நீ யாரம்மா''? என்று அன்போடு வரவேற்றார். இளவரசன் பார்த்ததும் பரவசமானான். ''மேன்மைதங்கிய தங்களுக்கு எனது வணக்கங்கள். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இளவரசி. நான் அரசகுடும்பத்தில் பிறந்தவள். வழியைத் தவறவிட்டு விட்டேன். மழையிருளில் அகப்பட்டு விட்டேன். வழிதெரியவில்லை. இப்படி வந்து விட்டேன்." என்று அடக்கமாகப் பதில் சொன்னாள். மகாராணி பரீட்சையில் இறங்கிவிட்டார். இளவரசனுக்கு அவள்மேல் அன்பு பிறந்துவிட்டது. அவன் உள்ளம் சந்தோசத்தில் துள்ளியது. மகாராணியின் கட்டளை பிறந்தது. ஏவற்பெண்களை அழைத்தார். அவர்கள் விரைந்து வந்தார்கள்.

''மகளே இவர்களோடு செல்லுங்கள். உடைகளை மாற்றுங்கள். உணவை உண்ணுங்கள். அதற்குள் படுக்கை தயாராகி விடும். அதன்பிறகு களைப்புத் தீர உறங்குங்கள்." விடிந்ததும் பேசுவோம். நான் வருகிறேன்." மகாராணி அந்தப் பெண்ணிடம் கூறினார். ''மறந்து விட்டேன். மகளின் பெயரென்ன"?. வெகு பக்குவமாக மகாராணி கேட்டார். ''எனது பெயர் அன்பழகி. நான் கங்கைவேலி நாட்டின் இளவரசி. மகாவலி எங்கள் நாட்டின் ஊடாகப் பாய்கிறது . அகத்தியர் பல்கலைக்கழகம் அங்குதான் உள்ளது. வளம் மிகுந்த நாடு. கல்வியில் சிறந்தது எங்கள் நாடு." மிக அடக்கமாகக் கூறினாள். ''எப்படி எங்கள் நாட்டுக்குள் வந்தீர்கள்.?" மகாராணி மீண்டும் வினாவினார். ''குதிரையில் சவாரி வந்தேன். மழை கொட்டியது. வழி தெரியவில்லை. இங்கு வந்து சேர்ந்தேன்." அன்பழகி மெதுவாகச் சொன்னாள். ''மிகவும் நல்லது. நீங்கள் செல்லுங்கள்." மகாராணி விடைகொடுத்தார். ஏவற்பெண்கள் அன்பழகியை அழைத்தார்கள். பின்னால் அன்பழகி சென்றாள். மகாராணி வேறு பணிப் பெண்களை அழைத்தார். ''அன்பழகி உறங்க வேண்டும். மெத்தைகளைக் கொண்டு வாருங்கள்." என்றாள். பணிப்பெண்கள் வெளியில் சென்றார்கள்.

''இந்தப் பெண் நல்லவளாகப் படுகிறது. எதற்கும் பரீட்சை வைத்துப் பார்ப்போம்." மகாராணி மனதினுள் எண்ணினார். அவரது கையில் ஒரு புளியம் விதை இருந்தது. மெத்தைகள் வந்தன. முதலாவது மெத்தைக்கு அடியில் விதையை வைத்தார். யாரும் அதனைப் பார்க்கவில்லை. அதன்மேல் மற்ற மெத்தைகள் அடுக்கப் பட்டன. மெத்தைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டில் உயரமாக இருந்தது. பதினைந்து மெத்தைகள் அடுக்கப் பட்டன. கட்டிலில் ஏறுவதற்கு ஏணி தயாராயிருந்தது. மகாராணியே எல்லா ஏற்பாடுகளையும் கவனித்தார்.

அன்பழகிக்கு வேண்டிய அனைத்தும் கிடைத்தன. அன்பழகி உடையினை மாற்றினாள். உணவினை உட்கொண்டாள். களைப்பாக இருந்தது. மகாராணி மெதுவாக வந்தாள். ''மகளே களைத்துப் போய் விட்டீர்கள். கட்டில் தயார். நன்றாக ஓய்வெடுங்கள். காலையில் நான் வந்து பார்க்கிறேன்." கூறிக் கட்டிலைக் காட்டினார். அன்பழகி வியந்தாள். கட்டில் இவ்வளவு உயரமா?. மனதில் நினைத்தாள். ''விருந்தினர்களைக் கௌரவிப்பது எங்கள் கடமை. சுகமாக இருக்க வேண்டும். இது இந்த நாட்டின் வழக்கம்." மகாராணி கூறினாள். அன்பழகி நன்றி கூறினாள். ஏணியில் ஏறிப் படுக்கையை அடைந்தாள். மகாராணி வணக்கம் கூறிச் சென்று விட்டார். பணிப் பெண்களும் ஓய்வெடுக்கச் சென்றனர்.

பொழுது புலர்ந்தது. பணிப் பெண்கள் தமது கடமையில் ஈடுபட்டனர். மகாராணி மெதுவாக அறையினுள் நுழைந்தார். அன்பழகியை அழைத்தார். அவள் கட்டிலை விட்டு இறங்கவில்லை. முழங்கால்களில் தலையைப் புதைத்தபடி இருந்தாள். ''வணக்கம் மகளே. இரவு நன்றாக உறங்கினீர்களா?" கேட்டுக் கொண்டே ஏணியில் ஏறினார். அன்பழகி சத்தம் கேட்டுத் திடுக்கிட்டாள். மகாராணி உள்ளே வந்ததை அவள் அறியவில்லை. தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். வணக்கம் கூறினாள். அதற்குள் மகாராணி பக்கத்தில் வந்து விட்டார்.

மீண்டும் மகாராணி ''மகளே இரவு நன்றாக உறங்கினீர்களா"? என்று கேட்டார். அன்பழகி தலையை நிமிர்த்தினாள். அவளது கண்கள் சிவந்திருந்தன. களைத்திருந்தாள். ''எப்படி உறங்குவேன். எப்படி என்னால் உறங்க முடியும்"? என்று பதில் தந்தாள். ''ஏன் மகளே? என்ன நடந்தது."? மகாராணி ஒன்றும் அறியாதவர்போல் க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். ‘‘இங்கே பாருங்கள் எனது உடம்பை. கறுத்துத் தடித்துள்ளது. ஏதோ ஒன்று மெத்தையின் கீழ் இருக்கவேண்டும். அது என்னை உறங்க விடவில்லை. உடலில் வலியைத் தந்தது. இங்கே பாருங்கள்.’’ கூறிக்கொண்டே தடித்த இடங்களைக் காட்டினாள். அன்பழகியின் உடலில் தழும்புகள் தெரிந்தன. மகாராணிக்குப் பெருமையாக இருந்தது.

அவரது உள்ளம் துள்ளியது. ‘‘உண்மையான இளவரசியின் உடல் மிருதுவாக இருக்கும். எத்தனை மெத்தைகள் அடுக்கினால் என்ன?. அவளால் ஒரு புளியம்விதையை உணரமுடியும். எனவே இவள் உண்மையான இளவரசி தான்.’’ மகாராணி முடிவெடுத்தார். செய்தி மகாநாயகனுக்குத் தெரிவிக்கப் பட்டது. அரசனோடு அறிவழகனும் வந்தான். இருவரையும் ஒதுக்குப் புறமாக அழைத்தார். மகாராணி தனது பரீட்சையை விளக்கினார். மன்னன் மனம் மகிழ்ந்தது. அறிவழகன் இளவரசியிடம் சென்றான். மகிழ்ச்சியால் சந்தோசமாக இருந்தான்.‘‘இறைவன் உன்னை என்னிடம் சேர்ப்பித்தார். நீ எனது மனைவியாக வருவாயா?. தயவுசெய்து என்னை ஏற்றுக்கொள்.’’ என்றான். அன்பழகியின் கன்னங்கள் நாணத்தால் சிவந்தன. ‘‘ஆம்’’ என்றாள். அறிவழகன் சந்தோசத்தால் துள்ளினான்.

கங்கைவேலி நாட்டின் மன்னன் பாலராஜன். அவனுக்குச் செய்தி அறிவிக்கப்பட்டது. மன்னன் நாட்டு மக்கள் புடைசூழ வந்தான். ஆனந்தபுரியும் கங்கைவேலியும் சேர்ந்து கொண்டன. அறிவழகனுக்கும் அன்பழகிக்கும் திருமணம் நடந்தது. மக்கள் வாழ்த்தி மகிழ்ந்தனர். புளியம் விதை அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டது. இன்றும் பலநாட்டு மக்களும் அதனைப் பார்க்க வருகிறார்கள். ‘‘எங்கள் இளவரசி உண்மையான இளவரசிதான். அவரிடம் தனிப் பண்பு உண்டு. அவர் தனித்தன்மை வாய்ந்தவர்தான். வாழ்க இளவரசி.’’ என்று இன்றும் வாழ்த்துகிறார்கள். இப்போதும் அந்த நாட்டு மக்கள் பெருமைப் படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டிப்பையன் நந்து

பூவரசன்குளம் அழகிய கிராமம். கிராமத்தின் இதயமாகக் குளம் இருந்தது. நிறைந்த குளத்தில் தாமரைகள் ஆடும். மலர்களில் தேன் சுரந்து வழியும். வண்டுகள் பறந்து ரீங்காரம் இசைக்கும். பறவைகளின் கொண்டாட்டம். பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டும். குளம் தொட்டு வளம் பெருகும் கிராமம். குளத்தின் கரை எப்போதும் கலகலக்கும். கரையில் சிறுவர்களின் கொண்டாட்டம். காற்றில் சிறிய அலைகள் சலசலக்கும். அந்த அலைகளில் அடையல்கள் மிதந்தாடும். அணையிலிருந்து தண்ணீர் பாய்ந்த வண்ணம் இருக்கும். வயல்கள் செழித்து விளையும். காடுகள் பசுமை போர்த்துச் சிரிக்கும். மயில்களின் அகவல் காடுகளில் ஒலிக்கும். அதன் கரை கலகலப்பாக இருக்கும். சேனைச் செய்கையில் பலர் ஈடுபட்டனர். சிலர் நீர்ப்பாசனத்தினால் பயிர் செய்தனர். சிலர் காடுகளில் விறகு வெட்டினர். அந்த வருவாயில் வாழ்க்கையை நடத்தினர். கிராம மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர்.

நந்தன் குடும்பம் அங்குதான் வாழ்ந்தது. நந்தன் விறகு வெட்டி வாழ்ந்தான். அவனது மனைவி நந்தினி. மிகவும் அழகானவள். அவர்கள் சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள். நந்தன் காலையில் காட்டுக்குள் போவான். விறகு வெட்டுவான். வண்டியில் ஏற்றுவான். மாலையானதும் வீடு வந்துவிடுவான். கிராமத்து மக்கள் வந்து விறகை வாங்கிக் கொள்வார்கள். வாழ்க்கை இனித்தது. சந்தோசமாக வாழ்ந்தார்கள். எனினும் அவர்களுக்கு ஒரு குறை இருந்தது. ஒரு குழந்தை இல்லாததுதான் அக்குறை. ஒரு குழந்தை இருந்தால் நல்லதல்லவா.? நந்தனுக்கு உதவியாக இருப்பான். இருவரும் கவலையில் மூழ்கினார்கள். நந்தினி கணவனின் தோளில் சாய்ந்தாள். அவனது கைகளைப் பற்றினாள். அவனது விரல்களைப் தடவினாள். அவனது பெரு விரலைப் பிடித்தாள். ''ஒரு சின்னப் பையன் வேண்டும். இந்தப் பெருவிரல் அளவு பிள்ளை என்றாலும் பரவாயில்லை. நமக்கு வேண்டியது ஒரு மகன்.'' பெருமூச்செறிந்தாள். ''கவலைப் படாதே. நமக்கு ஒரு மகன் பிறப்பான். நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகளைத் தீர்த்து . வைப்பான். நம்பிக்கையோடு இருப்போம். நந்தன் அவளுக்கு ஆறுதல் கூறினான்.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. நாட்கள் விரைந்தோடின. நந்தினி தாய்மை அடைந்தாள். அவர்களுக்குச் சந்தோசம். கிராமத்து மக்களும் வாழ்த்தினார்கள். ஒருநாள் நந்தினி குழந்தையைப் பிரசவித்தாள். அது ஒரு அழகான ஆண்குழந்தை. குழந்தையை நந்து என்றழைத்தார்கள். நாட்கள் நகர்ந்தன. வாரங்கள் உருண்டோடின. நந்து ஓடியாடி விளையாடி வளர்ந்தான். அவனது குறும்பில் மகிழ்ந்தனர். ஆனாலும் அவர்கள் மனதில் ஆறுதல் இல்லை. அவன் உடலில் மாற்றம் இல்லை. நந்து ஒரு பெருவிரல் அளவிலேயே இருந்தான். அவர்களது மனம் வாடியது. எனினும் நந்துவின் சிரிப்பில் உள்ளம் பூரித்தனர். நந்து வீட்டில் உள்ள எலிகளோடு விளையாடுவான். அவற்றை மடக்கிப் பிடித்துக் குதிரையோட்டுவான். அவற்றின் முதுகில் ஏறி உலா வருவான்.

நந்தனின் விறகு வெட்டும் தொழில் சுமாராக இருந்தது. முதல்நாள் காட்டுக் செல்வான். விறகுகளை வெட்டிக் குவிப்பான். அடுத்தநாள் ஏற்றிச் வருவான். இது அவனுக்குச் சிரமமாக இருந்தது. தனது மனைவியிடம் இதனைக் கூறினான். ‘‘நந்தினி! நமது மகன் சின்னவன். பெரியவனாக இருந்தால் எவ்வளவு துணையாக இருக்கும். நந்து பாவம். அவன் எப்படி எனக்கு உதவுவான். அவன் எங்கே நித்திரையா? சரி நான் காட்டுக்குப் போகிறேன். அவனைக் கவனித்துக் கொள். நான் வாறன்.” நந்தன் வழமைபோல் காட்டுக்குச் சென்றான். வெறகுகளை வெட்டினான். ஒன்று சேர்த்துக் குவிப்பதில் ஈடுபட்டான். நந்தினி வீட்டு வேலைகளைக் கவனித்தாள். நந்து அம்மாவிடம் வந்தான். ‘‘அம்மா என்னால் அப்பாவுக்கு உதவமுடியும். நான் நமது வண்டியை ஓட்டிச் செல்கிறேன்”. என்றான். நந்தினிக்கு ஆச்சரியம். சிரித்தாள். ‘‘நீ சின்னவன். உன்னால் எப்படி முடியும்.”? கேட்டாள்.

‘‘அம்மா நான் சொல்வதுபோல் செய்வீர்களா?” என்றான். ‘‘செய்கிறேன். சொல்.” அம்மா கூறினாள். ‘‘அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது காளை மாடுகளை வண்டியில் பூட்டுங்கள். என்னை காளையின் காதோரம் விடுங்கள். அவை நான் சொல்வதைக் கேட்கும். நான் அப்பாவிடம் செல்வேன்". நந்து கூறிக் கொண்டிருந்தான். அம்மா கேட்டுக் கொண்டிருந்தாள். இவனாவது வண்டியைக் கொண்டு செல்வதாவது? அவள் மனதில் எண்ணிக் கொண்டாள். நந்து உறுதியாக இருந்தான். ''அம்மா நான் சொல்வதுபோல் செய்யுங்கள்.'' பிடிவாதமாக மன்றாடினான். தனியே அவனை எப்படி அனுப்புவது.? அனுப்ப மனம் ஒப்பவில்லை. யோசித்தாள்.

''அம்மா நான் சொல்வது விளங்கவில்லையா? என்மேல் நம்பிக்கை இல்லையா"? அவன் பிடிவாதமாக இருந்தான். வேறு வழியில்லை. காளைமாடுகளை வண்டியில் பிணைத்தாள். மூக்கணாங் கயிறுகளை சுண்டி எடுத்தாள். அவற்றைக் கவனமாக வண்டிக் கொட்டில் கட்டினாள். நந்துவைத் தூக்கினாள். அவன் கூறியதுபோல் காளையின் காதோரத்தில் விட்டாள். நந்து காளையின் காதினைப் பிடித்தான். காளைமாடு சந்தோசித்தது. ''அம்மா போய்வருகிறேன். டாட்டா" என்றான். ''கவனமாகப் போய் வா." அம்மாவின் அனுமதி கிடைத்தது. சந்தோசப்பட்டான். காளையின் காதில் ஏதோ கூறினான். காளை மற்றக்காளைக்குச் சைகை செய்தது. வண்டி காற்றாய்ப் பறந்தது. வழியில் மக்கள் கூட்டம் பார்த்தது. வண்டியில் ஆளைக் காணவில்லை. காளைகள் வண்டியை இழுத்துச் சென்றன. அவர்களுக்கு ஆச்சரியம். ''வண்டி ஆளில்லாது செல்கிறது." சத்தமிட்டார்கள். வண்டி காட்டை நோக்கி விரைந்தது.

பார்ப்பவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். இரண்டு மனிதர்கள் இதனைக் கண்டார்கள். அவர்களுக்கும் ஆச்சரியம். இதனை அறியவேண்டும். பின்தொடர்ந்து சென்றார்கள். வண்டி காட்டினுள் சென்றது. அவர்களும் சென்றார்கள். வண்டி நந்தனின் மரக்காலைக்குள் சென்றது. நந்தன் பக்கம் வண்டி நின்றது. ''அப்பா நான் நந்து. இங்கே இருக்கிறேன். என்னை இறக்கி விடுங்கள்". நந்து சத்தமிட்டான். நந்தனுக்கு ஒருபுறம் ஆச்சரியம். மறுபுறம் மகிழ்ச்சி. நந்துவை மெதுவாக இறக்கித் தூக்கினான். அவனைக் கட்டி முத்தமிட்டான். நந்துவும் மகிழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனான். ''என் நந்துக் குஞ்சு. எப்படி வந்தாய்? இது ஆபத்தல்லவா''? நந்தன் நொந்து கொண்டான். ''அப்பா உங்களுக்கு உதவி செய்யவேண்டாமா? அதுதான் வந்தேன்''. நந்து பளீரென விடையளித்தான்.

இவற்றை அந்த மனிதர்கள் அவதானித்தனர். தமக்குள் கதைத்துக் கொண்டனர். ''இவனை நாம் கைப்பற்ற வேண்டும். இவன் நமக்குக் கிடைக்க வேண்டும். இவனைப் பட்டண மக்களுக்குக் காட்டலாம். இவனை வைத்துப் பணம் சம்பாதிக்கலாம். நாம் பணக்காரர் ஆகலாம். சரி போய் பார்க்கலாம்.'' சென்றார்கள்.

''ஏய்.. யார் இந்தச் சின்னப் பையன்''? விசாரித்தார்கள்.

''என் செல்ல மகன். தோம்பன். நந்து அவனது செல்லப் பெயர்'' நந்தன் விளக்கினான்.

''இவனை எங்களுக்குத் தருவாயா''?

''இவன் என் மகன். இவனை எப்படி உங்களுக்குத் தரமுடியும். தரமாட்டேன்.'' நந்தன் பதில் சொன்னான். ''இங்கே பார். உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறோம்.'' என்றார்கள். நந்தன் மறுத்து விட்டான். நந்து அப்பாவின் கையைப் பிடித்தான். சற்றுத் தூரத்துக்குக் கூட்டிச் சென்றான். ''அப்பா கூடிய தொகையை கேளுங்கள். நான் புதிய அதிசயமான அனுபவங்களைப் பெறவேண்டும். உங்களிடம் விரைவில் வந்து விடுவேன். என்னை நம்புங்கள். நாம் சந்தோசமாக வாழலாம். பணத்தைக் கேளுங்கள். உங்கள் சந்தோசம்தான் முக்கியம். ஒரு நிபந்தனையையும் முன் வையுங்கள்'' என்றான். ''அது என்ன முன்நிபந்தனை.''

''எவ்வளவு காலமானாலும் என்பிள்ளையை என்னிடம் ஒப்படைக்க வேண்டும். இவனுக்குத் துன்பம் கொடுக்கக் கூடாது. இவனைத் தொலைக்கக் கூடாது. தொலைத்தால் உங்களுக்குத் தண்டனை கிடைக்கும். இவன் இல்லாமல் இந்தப் பக்கம் தலைகாட்டக் கூடாது. இவைதான் நிபந்தனைகள்.'' என்றான். அந்த மனிதர்களிடம் வந்தார்கள். என்ன முடிவு என்றனர். ''தரமுடியாது. அதுதான் முடிவு.'' என்று நந்தன் கூறினான். ''இங்கே பார் தம்பி. உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறோம். தயவு செய்து இவனை எங்களுக்குத் தந்து விடு.'' கெஞ்சினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘சரி. இவ்வளவு வற்புறுத்திக் கேட்கிறீர்கள். இதற்குரிய தொகை ..” அவன் முடிக்கவில்லை. அந்த மனிதர்கள் தங்கள் கைப் பெட்டியைத் திறந்தார்கள். பெட்டி நிறையப் பணம் எட்டிப் பார்த்தது. நந்தன் தன் வாழ்நாட்களில் இவ்வளவு தொகைப் பணத்தைக் காணவில்லை. எனினும் அதனை அவன் காட்டிக் கொள்ளவில்லை. ‘‘இதோ பாருங்கள். நீங்கள் வற்புறுத்திக் கேட்பதால் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.” ‘‘என்ன நிபந்தனைகள் என்றாலும் எங்களுக்குச் சம்மதம். பையனை தந்துவிடு. மீண்டும் கெஞ்சினார்கள். நந்தன் நிபந்தனைகளைக் கூறினான்.” ‘‘அட அவ்வளவுதானே. இதோ பெட்டியைப் பிடி. அவனை ஒப்படை. தம்பி வா..வா..” அழைத்தார்கள்.

‘‘நந்து இந்த ஐயாமாரோடு செல். அவர்களது மனம் கோணாது நடந்து கொள்.” என்றான். நந்துவுக்குச் சரியான சந்தோசம். அவன் தனது அப்பாவைக் கட்டிப் பிடித்தான். முத்தமிட்டான். ‘‘பயப்பட வேண்டாம். விரைவில் வந்து விடுவேன். அம்மாவிடம் எனது அன்பைக் கூறுங்கள்.” நந்தனின் காதோரம் மெதுவாகக் கூறினான். ‘‘ஐயாமாரே புறப்படுவோமா?” என்றான். நந்துவைத் தூக்கினார்கள். உள்ளங் கையில் வைத்துப் பார்த்தார்கள். “உன்னால் பெரிய பணக்காரர் ஆகப்போகிறோம்.“ மனதுக்குள் சொல்லிக் கொண்டார்கள். ஒருவன் தனது சட்டைப் பையினுள் நந்துவை வைத்தான். நந்து சட்டைப் பைக்குள் நின்றான். அதற்குள் நின்று எட்டிப் பார்த்தான். ‘‘அப்பா நான் போய் வருகிறேன்”. சத்தமிட்டான். கையசைத்து விடை பெற்றான். நந்தன் கண்ணீரோடு நின்றான்.

‘‘ஏய் சின்னப் பையா! உனது பெயர் என்ன”? அவர்கள் நடந்து கொண்டே கேட்டார்கள். ‘‘என் பெயரா? நந்து.” என்றான். அவர்கள் ஏதோவெல்லாம் கதைத்தார்கள். வெகுதூரம் வரை வந்து விட்டார்கள். நந்து சட்டைப் பைக்குள் இருந்தான். எழுந்து நின்றான். இரு கைகளாலும் பிடித்து எட்டிப் பார்த்தான். பறவைகளைப் பார்த்தான். பூக்களையும் பூச்சிகளையும் பார்த்தான். புதினங்களை ரசித்தான். ஒரே குதூகலமாக இருந்தது. நேரம் விரைவாக ஓடியது. வழியில் இருந்த கடையில் தேநீர் அருந்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்துவுக்கும் கொடுத்தார்கள். கடையில் இருந்தவர்கள் அதிசயமாகப் பார்த்தார்கள். பின் புறப்பட்டார்கள்.

புதர்கள் அடர்ந்த வழியால் சென்றார்கள். நந்து சட்டைப் பைக்குள் இருந்து தட்டினான். சத்தமிட்டான். ‘‘ஐயா! என்னைக் கொஞ்சம் வெளியில் எடுங்கள். சிறுநீர் கழிக்க வேண்டும். அவசரமாக இருக்கிறது. கெதியாக இறக்கி விடுங்கள். இல்லையென்றால் உங்கள் சட்டைப் பை நனையும்'' அவசரப் படுத்தினான். ‘‘சரி..சரி. கொஞ்சம் பொறு. அந்தப் புதர்ப் பக்கம் செல்வோம்.'' கூறி நடந்தார்கள். அவனை இறக்கி விட்டார்கள். நந்து அப்படியே நின்றான். சிறுநீர் கழித்தான். கைகால்களை அசைத்தான். நடந்து ஓடியாடித் திரிந்தான். அவர்கள் பார்த்துச் சிரித்தார்கள். புதருள் மறைந்து சிறுநீர் கழித்து வந்தார்கள். நந்துவைப் பார்த்தார்கள். அவனைக் காணவில்லை. நந்துவைத் தேடினார்கள்.

‘‘நந்து..நந்து.''அழைத்தார்கள். புதர்களுக்குள் விரைந்து தேடினார்கள். ஆனால் அவன் கண்ணில் படவில்லை. புதருக்குள் மறைந்து கொண்டான். எங்கு தேடியும் நந்துவைக் காணவில்லை. மாலையாகி இருள் படர்ந்தது. நந்து எங்கே போனான்.? கவலையில் மூழ்கித் தேடினார்கள். அவன் ஓடி ஒழிந்து கொண்டான். எட்டிப் பார்த்தான். அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். மெதுவாக வெளியில் வந்தான். கால் போன போக்கில் நடந்தான். எங்கே இரவைக் கழிப்பது.? பெரியதொரு நத்தை ஓடு கண்களில் பட்டது. அதனை வலம் வந்து பார்த்தான். உள்ளே புகுந்து சோதனை இட்டான். இதற்குள் பாதுகாப்பாக இருக்கலாம். மனம் திருப்தியடைந்தது. கால்களை உள்ளே புகுத்தி வசதியாகப் புகுந்து கொண்டான். குளிராக இருந்தது. உறக்கம் வரும்வரை காத்திருந்தான்.

புதரின் மறுபக்கம் வெளிச்சம் தெரிந்தது. இரண்டு மனிதர்கள் தீ மூட்டிக் குளிர்காய்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் உரையாடுவதைக் கவனித்தான். காது கொடுத்துக் கேட்டான். உறக்கம் கலைந்துவிட்டது. அவர்கள் திருடர்கள் என்பதை உறுதிசெய்தான். அவர்களில் ஒருவன் பேசினான். ‘‘அந்த வீட்டில் நிறையவே பணம் இருக்கிறது. நடுச்சாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவோம். வீட்டுக்காரர்கள் நித்திரையில் இருப்பார்கள். அப்போது மெல்ல நுழைவோம்". "நீ சொல்வது சரி. ஆனால் எப்படி நுழைவது.? யார் நுழைவது?" மற்றவன் சொன்னான். நந்து மெதுவாக நத்தை ஓட்டிலிருந்து வெளியே வந்தான். புதரில் மறைந்தவாறே சத்தமிட்டான். "ஐயா என்னைக் கூட்டிப் போங்கள். என்னைத் தூக்கி விடுங்கள். நான் உள்ளே போய்க் கதவைத் திறந்துவிடுகிறேன்". என்றான். திருடர்கள் இதனை எதிர்பார்க்கவே இல்லை. சத்தம் எங்கிருந்து வந்தது. சுற்றிவரப் பார்த்தார்கள். "ஏய்.. யாரது?" தடித்த குரலில் சத்தமிட்டார்கள். அவர்கள் முன் நந்து நின்றான். "ஐயா என்னையும் கூட்டிச் செல்லுங்கள். உங்களுக்கு உதவியாக இருக்கும்." நந்து உறுதியாகச் சொன்னான். அவனை ஏறெடுத்துப் பார்த்தார்கள். அவர்களுக்கு அவனைப் பிடித்துக் கொண்டது "சரி எங்களோடு வா. இதைச் சாப்பிடு". சாப்பிடக் கொடுத்தார்கள். பின் அழைத்துக் கொண்டு சென்றார்கள்.

குறிப்பிட்ட வீட்டை அடைந்தார்கள். சுற்றிவரப் பார்த்தார்கள். ஒருபுறச்சுவரில் யன்னல் திறந்திருந்தது. அதனூடாக நந்து நுழைய முடியும். "அதோ யன்னல் தெரிகிறது. அதனூடாகச் சென்று பணத்தினை எடுத்து எறிவேன். உங்களுக்குச் சம்மதமா"? என்றான். "பரவாயில்லையே. பையன் கெட்டிக்காரன்தான்." ஒருவன் ஒத்துக் கொண்டான். "சரி என்னை யன்னலில் ஏற்றி விடுங்கள். நான் போய் பணத்தை எடுத்து மாடத்திலிருந்து வீசுவேன். சரிதானே"?. என்றான். அவர்கள் அவன் சொன்னபடியே செய்தார்கள். யன்னல் வழியாக நந்து நுழைந்தான். சத்தமிடாமல் மாடத்துக்கு வந்தான். அவனது செயலைப் பார்த்தார்கள். அந்தத் திருடர்களுக்குச் சந்தோசம்.

"நண்பர்களே! நீங்கள் சொன்னபடி பணம் நிறையவே உண்டு. உங்களுக்கு இங்கே உள்ள எல்லப் பணமும் வேண்டுமா?" பலமாகச் சத்தமிட்டான். திருடர்கள் மிரண்டனர். "ஏய்..இஸ்ஸ் நீ வீட்டுக்காரரை எழுப்பி விடுவாய். சத்தமிடாதே ..சொன்னதைச் செய்.." பயத்துடன் எச்சரித்தார்கள். நந்து கேட்காதவன்போல் "நண்பர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு பணத்தை உங்களுக்கு எறியவேண்டும். சொல்லுங்கள்."? இன்னும் பலமாகச் சத்தமிட்டான். அவன் போட்ட சத்தம் வீடெங்கும் எதிரொலித்தது. வீட்டிலிருந்தவர்கள் விழித்துக் கொண்டார்கள். மின்விளக்குகள் எரிந்தன. திருடர்கள் பயந்தடித்து தலைதெறிக்க ஓடிவிட்டார்கள்.

வீட்டுக்காரர் வெளியில் வந்தார். ஒரு அசம்பாவிதமும் இல்லை. உள்ளே போனார். நந்து வெளியில் எட்டிப்பார்த்தான். திருடர்கள் ஓடுவதை அவதானித்தான். கலகலத்துச் சிரித்தான். அங்கே வைக்கோல் போர் தெரிந்தது. அது மாட்டுத் தொழுவம். யன்னல் வழியே வைக்கோல்போரில் பாய்ந்தான். அவனை அது தூக்கி எடுத்தது. குளிரைப் போக்கியது. கொள்ளையரிடமிருந்து ஒருவரின் சொத்தைக் காப்பாற்றினான். அச் செயலை எண்ணி மகிழ்ந்தான். அப்படியே உறங்கி விட்டான்.

அந்த வீட்டு வேலைக்காரன் வந்தான். மாட்டுத் தொழுவத்தில் வேலைகளை முடித்தான். பால் கறந்து கொடுத்தான். வைக்கோலை அள்ளியெடுத்தான். பசுவின் பக்கத்தில் போட்டான். பசுவுக்குப் பசி. அது வைக்கோலைக் கௌவியது. ஒரு பிடியை விழுங்கியது. நந்து விழித்துக் கொண்டான். ஆபத்தைப் புரிந்து கொண்டான். ''அன்பான பசுவே! நான் நந்து உன் தொண்டையில் இருக்கிறேன். என்னை உண்ணாதே." பசுவின் காதுகளில் நந்துவின் குரல் ஒலித்தது. அது மிரண்டு நின்றது. வாய் திறந்தபடி இருந்தது. மீண்டும் குரல் ஒலித்தது. ''நிறுத்து. என்னை உண்ணாதே." பசுவின் வாயின் ஊடாக ஒலி வந்தது. வேலைக்காரன் பயந்து போனான். வீட்டுக்காரரை அழைத்தான். ''ஐயா! உங்கள் பசு கதைக்கிறது. ஓடி வாருங்கள்". என்றான். ''என்ன உளறுகிறாய். பசுவாவது பேசுவதாவது." சத்தமிட்டவாறே வீட்டுக்காரர் ஓடி வந்தார்.

பசுவின் வாய் திறந்தபடியே இருந்தது. ''என்னை உண்ணாதே. உண்ணுவதை நிறுத்து." சத்தம் வந்தது. வீட்டுக்காரர் அதிசயித்து நின்றார். பக்கத்து வீட்டுக்காரரை அழைத்தார். சந்தர்ப்பத்தைப் பார்த்தான். நந்து மெதுவாகப் பசுவின் வாயிலிருந்து நழுவினான். பசுவை நன்றியோடு தடவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டான். அங்கிருந்து ஓடிவிட்டான்.

கால்போன பக்கம் நடந்தான். சூரிய வெளிச்சம் கண்களில் குத்தியது. உடல் எல்லாம் அழுக்காய் இருந்தது. பல் துலக்கவும் இல்லை. குளிக்கவும் இல்லை. வேப்பை மரத்தின் கிளை வளைந்து தரையில் பட்டிருந்தது. சிறிய கொத்தை முறித்தான். சிறிய குச்சு தயார். பற்களைத் துலக்கினான். தூரத்தே சிற்றாறு சலசலத்தது. ஆற்றங்கரைக்குச் சென்றான். கைகால்களை அலம்பினான். உடைகளைக் களைந்து கழுவினான். கரையில் உலர வைத்தான். உடைகள் உலரும் வரை குளித்தான். உடம்பு சுகமாக இருந்தது. உடைகளை அணிந்து கொண்டு புறப்பட்டான். பசியெடுத்தது. ஆற்றங்கரையில் பறவைகளின் கூடுகள் தெரிந்தன. காட்டுக்கோழி முட்டைகள் தெரிந்தன. சிலவற்றை உண்டான். பசியடங்கியது. நடந்தான்.

அவனது நடமாட்டத்தை ஒரு ஓநாய் கவனித்தது. ''அஹா.. அருமையான சிற்றுண்டி கிடைத்துள்ளது. பார்ப்போம்.'' எண்ணியவாறு பின்தொடர்ந்தது. மறைவாக ஓடி புதரில் மறைந்திருந்தது. நந்து வலப்புறமாகத் திரும்பினான். ஓநாய் அப்படியே கௌவிக் கொண்டது. அமுக்கென்று விழுங்கியது. நந்துவின் மூளை வேலை செய்தது. ''ஐயா ஓநாயாரே! உங்களுக்கு நல்ல பசிபோல் தெரிகிறது. இன்னும் பசியாக இருந்தால் நான் சொல்வதைக் கேளுங்கள்''. ஓநாய்க்கு ஆச்சரியம். ''என்ன சொல்கிறாய்.''? ஓநாய் வினாவியது.

''ஒரு வீடு அண்மையில்தான் இருக்கிறது. அங்கு வேண்டிய உணவு இருக்கிறது. போதியளவு உண்ணலாம். என்னைக் கூட்டிச் சென்றால் காட்டுவேன். அங்கு போவோமா? நந்து ஓநாயின் வயிற்றினுள் இருந்து சொன்னான். ஓநாயும் சம்மதித்துச் சென்றது. வீடு வந்து விட்டது. அது நந்துவின் வீடு. "ஓநாயாரே! வீட்டின் பின்புறமாகச் செல்லுங்கள். அதோ தெரிகிறதே கழிவுநீர் செல்லும் கால்வாய். அதனூடாக நுழையுங்கள். நேரே குசினிக்குள் செல்லலாம். வேண்டிய உணவை உண்ணலாம். சரி நுழையுங்கள்.'' நந்து துரிதப்படுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவாயில் சிறிதாக இருந்தது. ஓநாய் ஒருவாறு நெளிந்து உள்நுழைந்தது. குசினி நிறைந்து உணவு காத்திருந்தது. ஓநாய்க்குக் கொள்ளை மகிழ்ச்சி. வயிறாற உண்டது. அதன் வயிறு பெருத்து விட்டது. அதனால் வந்த வழியே செல்லமுடியவில்லை. நந்து ஓநாயின் வயிற்றில் இருந்தவாறே பாடினான். ஆடினான். ஆடும்போது ஓநாயும் ஆடியது. பாடும்போது ஓநாயின் வாய் திறந்து சத்தம் வந்தது. ஓநாய்க்கு வலித்தது. ஓநாய் சத்தமிட்டது. சத்தம் நந்தனையும் நந்தினியையும் விழிக்கச் செய்தது. அவர்கள் கதவைத் திறந்து பார்த்தார்கள்.

''ஐயோ! ஓநாய்.. எப்படி வந்தது.''? நந்தினி சத்தமிட்டாள். ''எங்கே நமது கோடரி. நந்தினி கோடரியை எடு.'' நந்தன் கட்டளையிட்டான். ''அப்பா பொறுங்கள். நான் உங்கள் நந்து. ஓநாயின் வயிற்றினுள் இருக்கிறேன். கவனம்.'' நந்து சத்தமிட்டான். நந்தனுக்குச் சந்தோசம். அவனுக்கு நந்து வருவான் என்று தெரியும். நந்தினியை துரிதப் படுத்தினான். ''நந்தினி நமது டாக்டரிடம் போ. அவரை விரைவாகக் கூட்டி வா''. நந்தினி வெளியில் ஓடினாள். ''நந்து பயப்படாதே. கொஞ்ச நேரம் பொறுத்திரு. உன்னையும் ஓநாயையும் காப்பாற்றுவேன்''. என்றான்.

டாக்டர் வந்தார். ஓநாய்க்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. நந்து சுகமாக வெளியில் எடுக்கப்பட்டான். ஓநாயை நன்றாகக் கவனித்தார்கள். அது குணமடைந்து வந்தது. டாக்டருக்கு நன்றி கூறினார்கள். நந்துவின் பெற்றோர் ஆனந்தம் கொண்டனர். ''அப்பா உங்களிடம் சொன்னேன்தானே. விரைவில் வருவேன் என்று. இப்போது வந்து விட்டேன்.'' நந்து வேடிக்கையாகக் கூறினான். நந்தன் அவனை அள்ளித் தன் உள்ளங்கையில் வைத்தான். நந்தினி பக்கத்தில் வந்து நின்றாள். ''அன்பு மகனே உன்னை இனியும் பிரிய மாட்டோம். பணம் பெரிதல்ல. நீதான் எங்களது செல்வம். உன்னைவிட வேறு செல்வம் இல்லை.'' பாசம் பொங்க நந்தினி கூறினாள். அம்மா உங்களைப் பிரிந்து செல்லமாட்டேன். நல்ல அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன். நந்து துள்ளித் துள்ளி ஆடினான். ஓநாய் நந்துவின் நண்பனாக உலா வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பைநிலா

தம்பலகாமம் அழகிய நகரம். வரலாற்றுப் பெருமை கொண்டது. குளக்கோட்டு மன்னனோடு தொடர்பு பட்டது. தம்பை நகர் என்பது அதன் வரலாற்றுப் பெயராகும். பசுமை போர்த்து வயல்கள் சிரிக்கும். தங்கக்கட்டிகளாக நெற்கதிராடிக் கலகலக்கும். ஆவினமும், மேதிகளும் பால் சுரக்கும். ஆதிகோணநாயகர் அருள் பாலிக்கும் திருக்கோயில் ஒளிவீசும். கோயிலைச் சுற்றி வாய்க்கால் வளைந்தோடும். தென்னைகள் குலைகளோடு காற்றில் அசையும். ஓலைகள் சாமரம் வீசி சலசலக்கும். மைனாக்களின் இரைச்சல் மாலையில் கிறங்க வைக்கும். கிளிகள் சுகம் பேசும்.

வயல்களில் ஆங்காங்கே நீர் தேங்கிக் கிடக்கும். கருங்குவளையும் அல்லியும் தண்ணீரில் தவழும். நாரைகளும். புள்ளினங்களும் தத்தி விளையாடும். மீன்களோடு தவளைகளும் நீந்தித்திரியும். திருக்கோயில் அமைந்த பகுதியைக் கோயிற் குடியிருப்பு என்பார்கள். அங்குதான் இராமலிங்கர் குடியிருந்தார். மாரியாச்சி அவரது மனைவி. மாரியாச்சி ஆலங்கேணியில் பிறந்து வளர்ந்தவள். அங்கு அழகிய பத்தினி அம்மன் கோவில் இருந்தது. அவளது வீட்டின் அருகில்தான் கோவில் இருந்தது. பத்தினி அம்மனில் பற்றுடையவள். அம்மனின் அருளால் இராமலிங்கத்தைக் கணவனாகப் பெற்றாள். திருமணம் ஆகியதும் கணவனுடன் செல்லவேண்டும். அம்மனை விட்டுப்போவதற்கு மனம் இல்லை. அம்மனிடம் முறையிட்டாள். ‘‘மகளே நீ போ. நான் உன்னிடம் வருவேன்.’’ அசரீரிபோல் கேட்டது. திருமணம் ஆனது. அதன்பின் கணவனோடு தம்பலகாமம் சென்றுவிட்டாள். சந்தோசமான குடும்பத்தில் கவலை தோன்றியது. அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. இது அவர்களுக்குப் பெருங்குறை. அவர்களது மனதை வாட்டியது. மாரியாச்சி ஆதிகோணநாதரிடம் முறையிட்டாள். பல நாட்கள் தவமிருந்தாள். இராமலிங்கரும் கோயிலுக்குச் சென்று வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் மாரியாச்சி வழமைபோல் கோயிலுக்குச் சென்றாள். பூசை முடிந்ததும் வெளியில் வந்தாள். அவளுக்காக ஒரு மூதாட்டி காத்திருந்தாள். ''அம்மா மாரியாச்சி எப்படி இருக்கிறாய்? சந்தோசமாக இருக்கிறாயா''? வினாவினாள். மாரியாச்சிக்கு ஒன்றும் விளங்கவில்லை. முன்பின் கண்டிராத மூதாட்டி அவள். ''யாரம்மா நீங்கள்.''? வினாவினாள். ''யாராயிருந்தால் உனக்கென்ன? மனிதரைக் கண்டால் நலம் விசாரிப்பது தமிழர்தம் மரபு. நீ சந்தோசமாக இல்லை. உனது மனதில் ஒரு குறையுள்ளது. எனக்குத் தெரியும். உன் முகம் சொல்லுது. அதுதான் விசாரித்தேன். '' மூதாட்டி முடித்தாள். ''அப்படி ஒன்றும் இல்லை அம்மா. தெரியாத்தனமாகக் கேட்டு விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.'' மாரியாச்சி மனம் நெகிழ்ந்து கூறினாள்.

''பரவாயில்லை. உனக்குக் குழந்தை இல்லை. அதுதான் உனக்குக் கவலை. இனி கவலைப் படாதே. இதோ இதனைப் பிடி. இதற்குள் பூவிதை இருக்கிறது.'' மடித்த ஒரு சரையை நீட்டினாள். அதனைப் பெற்றுக் கொண்டாள். ''அழகான பூஞ்சட்டியில் இதை நட்டுத் தண்ணீர் ஊற்று. இது வளர்ந்து பூ விரியும். பின்னர் பார் நடப்பதை. நான் வரட்டுமா''? மாரியாச்சி பேசுவதற்கு முன் மூதாட்டி கிளம்பி விட்டாள். மாரியாச்சி வாயடைத்து நின்றாள். இது கனவா அல்லது நினைவா? வந்தது யார்? ஆலங்கேணி பத்தினி அம்மன்தான் என நினைந்தாள். அம்மனின் அருளை நினைந்து பெருமிதம் கொண்டாள். அப்படியே பிரமித்துப் பேசாதிருந்தாள். இராமலிங்கர் பக்கத்தில் வந்து நின்றார். அவள் இன்னும் சுயநினைவுக்கு வரவில்லை. ''மாரியாச்சி! என்ன சிலையாக நிற்கிறாய்.''? அவள் அப்போதுதான் நினைவு பெற்றாள்.

நடந்ததை அவரிடம் கூறினாள். அவர் புன்னகைத்தார். ''செய்து பார். சிலவேளை பலன் கிடைக்கலாம்.'' இருவரும் வீட்டை அடைந்தனர். ஒரு பூஞ்சட்டியை வாங்கினாள். எரு கலந்த மண்வகையினை அதனுள் இட்டாள். பூ விதையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டித் தண்ணீர் ஊற்றினாள். தினமும் தண்ணீர் ஊற்றிப் பாதுகாத்தாள். நாட்கள் நகர்ந்தன. விதை முளைத்தது. தளிர் விட்டு பசுமையோடு வளர்ந்தது. கிளைகள் வெடித்து இலைகள் மதாளித்தன. ஆளுயரம் பூஞ்செடி வளர்ந்து விட்டது. ஒரு நாள் இராமலிங்கம் செடியை உன்னிப்பாகப் பார்த்தார். "மாரியாச்சி.." அவசரமாக அழைத்தார். "என்னங்க.." கூறிக்கொண்டு ஓடி வந்தாள். "இங்கே பார். பூஞ்செடியில் மொட்டு". காண்பித்தார். மாரியாச்சி மகிழ்ந்து போனாள்.

மொட்டு மலரும் நாளை எதிர்பார்த்திருந்தாள். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக மொட்டு வளர்ந்தது. எப்போது பூ விரியும். தனக்கொரு குழந்தை பிறக்கும் என ஏங்கினாள். காத்திருந்தாள். கிழக்கு வானில் சூரிய கதிர்களின் குதுாகலிப்பு. மேகத்திரள் வண்ணம் சூடியிருந்தன. இளங்காற்றின் சில்லிட்ட விசிறல். காலைப்பொழுது வந்து விட்டது. மாரியாச்சி கடமைகளை முடித்துக் குளித்தாள். தலை துவட்டினாள். சாம்பிராணியும், சந்தனக் குச்சும் கலந்த நறுமணமும் வீட்டினுள் பரவியது. வெளியில் வந்தாள். அவளுக்கு அதிசயம் காத்திருந்தது.

பூஞ்செடியில் அழகிய செம்மஞ்சள் நிறப்பூ. கண்ணைக் கவரும் வண்ண அழகு. பூவைப் பார்க்க அருகில் ஓடினாள். அதிசயித்து நின்றாள். அவளது கண்களை அவளால் நம்பமுடியவில்லை. "இங்கே வாங்களேன்." இராமலிங்கரை அழைத்தாள். இராமலிங்கர் ஓடோடி வந்தார். அவள் பூவைக் காட்டினாள். இருவரும் சேர்ந்து பக்கத்தில் சென்றார்கள். அழகான பெண் குழந்தை தலையசைத்தது. இது இறைவனின் குழந்தை. நமது செல்வம். நான்கு கைகளும் சேர்ந்து குழந்தையை அணைத்தன. ஊரெல்லாம் செய்தி பரவியது. ஊரவர்களுக்கும் கொண்டாட்டம்.

ஊர்ப் பெரியவர்கள் வந்தார்கள். கொள்ளை அழகுக் குழந்தை என்றார்கள். இவள் சாதாரண பிறவி இல்லை. இவள் நமது தம்பைநிலா என்றார்கள். இவ்வாறான குழந்தை எளிதில் கிடைப்பதில்லை. இவள் அதிசயப் பிறவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியாச்சிக்கு கொள்ளை மகிழ்ச்சி. தம்பநிலாவை அன்போடு வளர்த்தாள். ''நிலா..நிலா..'' என்று அழைத்தாள். பாலூட்டித் தாலாட்டி வளர்த்தாள். பிள்ளையில்லாக் குறையை நிலா தீர்த்துவைத்தாள். காலம் கரைந்து உருண்டோடியது. நிலாவின் உள வளர்ச்சி பிரமாதமாக இருந்தது. ஆனால் உடல் வளர்ச்சியில் மாற்றமில்லை. மாரியாச்சியின் பெருவிரல் அளவிலேயே இருந்தாள். படு புத்திசாலி. எதனையும் புரிந்து செயற்படுவாள். அனைவரோடும் அன்பாகப் பழகுவாள்.

பறவைகள் என்றால் அவளுக்கு உயிர். அவைகளோடு சேர்ந்து பேசுவாள். சேர்ந்து பாடுவாள். பிராணிகளோடு கதைப்பாள். விளையாடுவாள். இனிமையாகப் பாடுவாள். பாடிப் பாடி ஆடுவாள். அவை அவளது பொழுது போக்காகும். அம்மா குசினியில் வேலை செய்வாள். அப்போது உதவி செய்வாள். அம்மாவுக்குப் பிடித்த கதைகள் கூறுவாள். அம்மா மகிழ்ந்து சிரிப்பாள். ஆனாலும் அவளது உள்மனம் வருந்தும். ''எனது மகள். பெருவிரல் அளவிலேயே இருக்கிறாள். கடவுளே அவள் பெரியவளாக வளர அருள் செய்'' எனப் பிரார்த்திப்பாள். நிலா “கலகல“ எனச்சிரிப்பாள்.''அம்மா நான் இந்த உலகப் பிள்ளை இல்லை. எனது உலகம் வேறு'' என்று சொல்வாள். இராமலிங்கர் அவளுக்காகச் சிறு கட்டில் செய்து கொடுத்தார். அது பஞ்சணை போன்றது. மிக மென்மையானது.

அவர்கள் முற்றத்தில் பெரிய தோட்டம் இருந்தது. கனிதரு மரங்கள் நின்றன. கண்ணைக் கவரும் வண்ணப் பூஞ்செடிகள் வளர்ந்தன. ஊர்ப்பிள்ளைகள் வருவார்கள். அவர்களோடு அதற்குள் விளையாடித் திரிவாள். இரவில் உறக்கம் வரும்வரை பாடுவாள். அந்தக்குரல் இரவில் இனிக்கும். கேட்போரை மயங்க வைக்கும். உயிரினங்களை ஈர்த்தெடுக்கும். அந்த இனிமையில் அம்மா உறங்கி விடுவாள். நிலா பாடிக் கொண்டே உறங்குவாள். அந்தப் பாட்டு இரவில் எங்கும் ஒலிக்கும். ஒரு பெரிய தவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுக் கேட்டது. மெதுவாக அறையினுள் நுழைந்தது. பாடல் முடியும் வரை பதுங்கியிருந்து ரசித்தது. பாடல் முடிந்தது. நிலா உறக்கத்தில் இருந்தாள். தவளை வெளியில் வந்து நிலாவை உற்றுப் பார்த்தது. அவளது அழகில் தவளை தன்னை இழந்தது.

இந்த அழகி எனது மகனுக்கு ஏற்றவள். இவளைக் கவர்ந்து செல்ல வேண்டும். பதுங்கி இருந்து திட்டமிட்டது. அப்படியே பஞ்சணையுடன் தூக்கியது. ஆடாது அசையாது எடுத்துக் கொண்டு சென்றது. வெகுதூரத்தில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றில் தவளை வாழ்ந்தது. அங்கு எடுத்துச் சென்றது. நிலாவைத் தூக்கித் தாமரை இலையில் வைத்தது. குளிரினால் நிலா விழித்துக் கொண்டாள். அவள் பயத்தால் நடுங்கினாள். அவளைத் தவளை எச்சரித்தது. ''நீ எனது மகனுக்கு மனைவியாக வேண்டும். எனது சொல்லைக் கேட்கவேண்டும். இல்லையென்றால் விழுங்கி விடுவேன்.''என்றது. ''நான் வரும்வரை இங்கேயே இரு''. கூறிவிட்டு தனது மகனைத் தேடிச் சென்றது. தாமரை இலையில் நிலா தவித்தாள். என்ன செய்வதென்று தெரியாது. ''அசிங்கமான தவளையின் மகனை நான் எப்படி மணப்பேன்.? எப்படி இதிலிருந்து தப்புவேன். அம்மா தேடுவாளே. என்ன செய்வேன்''. கவலையோடு இருந்தாள்.

சற்று நேரத்தில் மீன்கள் கூடின. தண்ணீரில் உலா வந்தன. ''நண்பர்களே!.. எனக்கு உதவுங்கள். என்னைத் தவளை கொண்டு வந்துள்ளது. தனது மகனை மணக்கச் சொல்கிறது. நான் எப்படியாவது தப்பவேண்டும் என்னைக் காப்பாற்றுங்கள்.'' முறையிட்டாள். மீன்கள் உற்றுக் கேட்டன. மேலும் பல மீன்கள் வந்து சேர்ந்தன. நிலாவைக் காப்பாற்ற ஒன்று திரண்டன. தாமரை இலையின் தண்டு தடிப்பானது. அதனைப் பற்களால் வெட்டின. இலை தண்டை விட்டுப் பிரிந்தது. மீன்கள் இலையைச் சூழ்ந்து உந்தின. இலை மெதுவாக அசைந்து சென்றது. ஒருவாறு கரையை அடைந்தது. மீன்கள் ஆரவாரம் செய்தன. நிலா அவற்றுக்கு நன்றி கூறினாள். கரைக்குப் பாய்ந்து சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான வண்ணத்துப்பூச்சியைக் கண்டாள். அது அவளை நோக்கிப் பறந்து வந்தது. சந்தோசம் பொங்கியது. நடந்தவற்றை அதனிடம் கூறினாள். நிலாவின்மேல் இரக்கம் கொண்டது. நிலாவைத் தான் வாழும் இடத்துக்குக் கூட்டிச் சென்றது. அது மிகவும் அழகான காடு. அது வண்ணத்துப் பூச்சிகளின் உலகம். வண்ண வணண் வண்ணத்துப் பூச்சிகள் பறந்து திரிந்தன. சிங்காரக் குருவிகள் சீட்டியடித்தன. அவளுக்கு நண்பர்கள் கிடைத்து விட்டார்கள். காடு காய் கனிகள் நிறைந்தது. நிறையவே பூக்கள் கிடைத்தன. பெரிய பூக்கள் அவளுக்குத் தேனைக் கொடுத்தன. காய் கனிகளை உண்டாள். வண்ணத்துப்பூச்சிகள் நண்பர்களாகி உதவின. சந்தோசமாக நிலா இருந்தாள். ஆனால் சந்தோசம் நீடிக்கவில்லை. குளிர்காலம் வந்தது. வண்ணத்துப் பூச்சிகள் மறைந்து விட்டன. உணவுக்குத் தட்டுப்பாடு வந்தது. பசியெடுத்தது. நண்பர்கள் இல்லை. காட்டுக்குள் அலைந்தாள்.

தற்செயலாக ஒரு சுண்டெலியைக் கண்டாள். தனது கதையைச் சொன்னாள். அதனிடம் உணவு கேட்டாள். குளிரிலிருந்து தப்புவதற்கு வழி கேட்டாள். சுண்டெலி அவளுக்காக வருந்தியது. தனது வீடு குளிரைத் தாங்கும். தன்னோடு சிலகாலம் தங்கலாம். உணவிலும் பங்கு கொள்ளலாம். குளிரைப் போக்கலாம். என்றது. நன்றி கூறினாள். எலியின் பின்னால் சென்றாள். எலிவளையானாலும் தனி வளையாக இருந்தது. மிகவும் துப்பரவாக வீடு இருந்தது. எலியின் நண்பன் மூஞ்சூறு. அது அடிக்கடி எலியின் வீட்டுக்கு வந்துபோகும். சிலகாலம் சென்றது. "நிலா! எனது வீடு சிறியது. தொடர்ந்து தங்குவது சிரமம். எனது நண்பன் மூஞ்சூறு மிகவும் நல்லவன். அவனிடம் பெரிய வீடு உள்ளது. நிறையவே உணவும் இருக்கிறது. அவன் உன்னை நன்றாகக் கவனித்துக் கொள்வான். நீ அவன் வீட்டில் தங்கலாம். அவனோடு நெடுங்காலம் வாழலாம். அவன் நாளை இங்கு வருவான். நீ அவனோடு செல்லலாம்". என்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலா கவலையில் ஆழ்ந்தாள். துக்கம் தொண்டையை அடைத்தது. சுண்டெலிக்குப் பாரமாக இருக்கவும் விரும்பவில்லை. இவ்வளவு காலமும் உதவியமையை மறக்கவும் இல்லை. மனதார நன்றி கூறினாள். அவளுக்கு மூஞ்சுறுவை நினைக்கவே பிடிக்கவில்லை. பயமாகவும் இருந்தது. மூஞ்சுறுவின் வீடு இருட்டாக இருக்கும். நிலத்தின் அடியில் ஆழத்தில் வீடு இருக்கும். சூரிய ஒளியும் உட்புகாது. வெளி உலகமே தெரியாது. என்ன செய்வது. வருவது வரட்டும். உறுதியுடன் வருவதை எதிர்கொள்ள ஆயத்தமானாள். பொழுது விடிந்தது. மூஞ்சுறு சொன்னபடி வந்தது. ''நிலா என்னோடு வா. நான் சந்தோசமாக வாழவைப்பேன்.'' என்றது.

சுண்டெலி போகும்படி வற்புறுத்தியது. வேறு வழியில்லை. நிலா மூஞ்சுறுவின் பின்னால் சென்றாள். வீடு வந்து விட்டது. கதவைத் திறந்து மூஞ்சுறு முன்னால் சென்றது. ''நிலா! கவனமாக வா. இருட்டாய் இருக்கும். முன்னால் ஒரு பறவை இறந்தநிலையில் கிடக்கிறது. இடறி விழாமல் பார்த்து வா.'' கூறிக்கொண்டு முன்னால் சென்றது. நிலாவின் கால் பறவையில் பட்டது. அது பெரிதொரு தூக்கணாங் குருவி. அது சாகவில்லை. குளிரினால் விறைத்துக் கிடந்தது. மிகவும் பலவீனமாகத் தவித்தது. நிலாவின் மூளை வேலை செய்தது. இலைகளாலும் புற்களாலும் பறவையை மூடினாள். அதனை அரவணைத்தாள். அந்தப் பறவைக்கு உதவிகள் செய்தாள். குளிரினால் ஏற்பட்ட விறைப்புக் குறைந்தது. மூஞ்சுறு ஆட்சேபிக்க வில்லை. உணவைப் பறவைக்கும் கொடுத்தாள். பறவை ஒருவாறு தேறியது.

குளிர்காலம் நீங்கிவிட்டது. பறவை பலம் பெற்று விட்டது. ''நான் போய்வருகிறேன்.'' மூஞ்சுறுவிடம் விடைபெற்றது. தனக்கு உதவியதற்காக நன்றி கூறியது. நிலாவைப் பார்த்துப் புன்னகைத்தது. பறவை நலமாகியதில் அவளுக்குச் சந்தோசம். ஆனால் பறவை பிரிவதையிட்டு வருந்தினாள். அடுத்த குளிர்காலத்தை நினைத்தாள். மனதில் பயம் உருவாகியது. மூஞ்சுறு குளிர்காலம் வரை பொறுத்திருக்கும். குளிர் காலத்தில் மணம் செய்யும்படி வற்புறுத்தும். ' என்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையோடு பறவைக்கு விடை கொடுத்தாள். நிலாவிடம் கண்களால் நன்றி பரிமாறியது. ''போய் வருகிறேன்.'' என்றது. பறவை தனது நண்பர்களோடு வானில் பறப்பதைப் பார்த்தாள். ஏக்கத்தோடு பெருமூச்செறிந்தாள்.

நாட்கள் நகர்ந்தன. மூஞ்சூறு அன்பாகப் பழகியது. ஆனாலும் நிலாவுக்கு வெறுப்பாகவே இருந்தது. குளிர்காலம் நெருங்கியது. நிலாவின் மனம் படபடக்கத் தொடங்கியது. மூஞ்சூறுவுடன் தானா என் வாழ்க்கை? கவலையுடன் நாட்கள் கழிந்தன. ஒருநாள் வெளியில் வந்தாள். புதுமையாக இருந்தது. கவலையோடு வானைப் பார்த்தாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. வானில் பறவைகள் வட்டமடித்துப் பறந்தன. ஒரு பறவை நேரே அவளை நோக்கி வருவதைக் கண்டாள். அவள் அருகே வந்து இறங்கியது. அது அவளிடம் விடைபெற்ற பறவைதான். நிலா கண்டு கொண்டாள். ''நிலா நான் எனது நாட்டுக்குப் போகிறேன். நீயும் என்னுடன் வருகிறாயா?'' பறவை முடிக்கவில்லை. நிலா சந்தோசத்தில் துள்ளினாள். பறவையைக் கட்டிப் பிடித்தாள். பறவையும் மகிழ்ந்தது.

''நிலா என்மேல் ஏறு. கெட்டியாய்ப் பிடித்துக் கொள். ஒரு புதிய உலகத்துக்குப் போவோம். சுதந்திரமாக வானில் பறந்து செல்வோம். அங்கே என்றும் நமக்கு இன்பந்தான்.'' என்றது. நிலா இமைப்பொழுதில் பாய்ந்தாள். பறவையில் ஏறிக்கொண்டாள். கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள். புது உலகம் நோக்கிப் பறவை காற்றாய்ப் பறந்தது.

அது மிகவும் இனிமையான உலகம். பூக்கள் நிறைந்து சிரித்தன. பென்னம்பெரிய மலர்கள் விரிந்து காற்றில் ஆடின. மலர்களுள் நிலாவைப்போன்ற சின்னச் சின்ன மனிதர்கள். சிரித்த வண்ணம் வரவேற்றார்கள். ''நாங்கள் மலரின் மைந்தர்கள். இதுதான் உனது உண்மையான நாடாகும். பூக்கள்தான் நமது வீடாகும். தம்பைநிலா உன்பெயரல்ல. உன்னை இனி நாங்கள் மாயா என்றழைப்போம்.'' பலத்த கரகோசத்தின் மத்தியில் மாயா வரவேற்கப்பட்டாள். பறவையை அங்கு காணவில்லை. ஆனால் இளவரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மைந்தன் நின்றிருந்தான். ''நீ சிறிய மனித உருவில் பிறந்தாய். நானும் உன்னைப் போல்தான் பறவையாகப் பிறந்தேன். பல அனுபவங்களைப் பெற்றேன். துன்பங்களையும் துயர்களையும் அனுபவித்தேன். உன்னைக் கண்டேன். உன் உதவியால் மீட்சி பெற்றேன்.'' என்றான்.''எங்கள் மலர்மைந்தனை மணாளனாக ஏற்பாயா''? கேள்விகள் வந்தன. அவள் நாணத்தால் முகம்சிவந்தாள். திருமணம் சிறப்பாக நடந்தது. ''அன்பரே ஒரு வேண்டுகோள். என்னை ஒருமுறை தம்பைநகர் கூட்டிச்செல்ல வேண்டும். அங்கே என் தாய்தந்தையரை ஒருமுறை பார்த்து வரவேண்டும். நிறைவேற்றுவீர்களா?'' வேண்டுகோள் விடுத்தாள். ''இன்றே செல்வோம்.'' புறப்பட்டார்கள்.

மலர்களில் இருந்து வெளிவந்தார்கள். பறவைகள் ஆனார்கள். மேகத்தைக் கிழித்து பறவைக் கூட்டம் பறந்தது. வட்டமடித்து வலம் வந்தது. தம்பைநகர் எங்கே? மாகாமம் எங்கே? மூர்க்கமாதா கோயில் எங்கே? ஆலங்கேணி பத்தினி அம்மன் கோயில் எங்கே? தேடினார்கள். தேனேரியைக் காணவில்லை. பாண்டியன் ஊற்றைக் காணவில்லை. காடு பற்றிக் கிடந்தன. கோணநாதர் கோயில் சிதைந்து கிடந்தது. தம்பைநகர் அழிந்து கிடந்தது. அம்மாவையும் அப்பாவையும் தேடினாள். அவள் விளையாடிய தோட்டம் எங்கே?. ''என்னைத் தேடி எவ்வளவு வருந்தியிருப்பார்கள். பிள்ளையில்லை என்ற குறை என்னால் தீர்ந்தது. ஆனால் அவர்களுக்கு ஆறுதல் கூறமுடியவில்லையே. எல்லாம் கனவாகப் போய்விட்டனவே.'' அவள் கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தது. ''இதுதான் பூவுலக வாழ்க்கை. மாயா வருந்தாதே. தேவலோகத்தில் ஒருநாள் பூவுலகத்தில் ஒரு வருசமாகும். நாம் பல ஆண்டுகளுக்குப் பின் வருகிறோம். நாம் நித்தியமாக உள்ள தேவர்கள். கவலை நமக்கேது? கலங்காதே. வா புறப்படுவோம். இதுதான் நியதி. நியதியை வெல்ல வல்லார் இல்லை.'' பறவைகள் ஆறுதல் கூறின. வந்த வழியே அவை பறந்து சென்று மறைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌந்தர்யாவும் ஏழு குள்ளர்களும்

மகாவலி சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. மகாவலி திருகோணமலைக் கடலில் சங்கமிக்கிறது. அதன் வலதுபுறமாக சாவாறு நாடு இருந்தது. சாவாறு வரலாற்றுப் பெருமை கொண்டது. வதனமார் காவியம் என்ற நூலில் அதன் புகழ் கூறப்படுகிறது. நீர் வளமும் நிலவளமும் கொண்ட நாடு. கரைகளில் பசுமை போர்த்திய காடுகள். வளம் கொழிக்கும் களணிகள். பால் பொழியும் பசுக்களும், எருமைகளும் கன்றுகளுடன் திரியும். அன்பான மக்கள் வாழும் ஊர்கள். பண்பாடுடைய அறிஞர்கள் நிறைந்த நாடாக விளங்கியது. மேகவண்ணன் அதன் அரசன். குடிமக்களை நேசித்தான். அவனது மனைவி சுந்தரி.மிகவும் அழகுடையவள்.

அரண்மனை வளாகம் மிகவும் அழகானது. அது மகாவலியின் கரையில் இருந்தது. கட்டிடக்கலை அற்புதமானது. அதன் கதவு, யன்னல் நிலைகள் வேலைப்பாடுடையவை. கருங்காலி மரத்தினால் ஆனவை. கருங்காலி மரம் கன்னங்கரேல் என்று இருக்கும். ஓய்வு நேரத்தில் சுந்தரி யன்னல் ஓரத்தில் இருப்பாள். மகாவலியின் அழகை ரசிப்பாள். பறவைகளின் இசையில் மகிழ்வாள். பனிமழைத் தூறலில் சிலிர்ப்பாள். செவ்வானத்தின் சிதறலில் லயிப்பாள். அவளது கைகளில் பின்னல் ஊசிகள் இருக்கும். அழகான உடைகள் பின்னுவது அவளது பொழுது போக்காகும். ஒருநாள் சுந்தரி வழமைபோல் மாடத்தில் இருந்தாள். அவளது கைகளில் துணியும் ஊசிகளும் இருக்கும். அவற்றில் கைகள் விளையாடும். அழகு வண்ணக் கோலங்கள் துணியில் பதியும். கைகள் பின்னிக் கொண்டிருந்தன. தற்செயலாக ஊசி மெல்லிய விரலில் குத்திவிட்டது. மூன்று துளி இரத்தம் சிந்தியது. அந்தத் துளிகளையும் கருங்காலி நிலைகளையும் பார்த்தாள். ஒரு முறுவல் இதழ்களில் உருண்டது.

''எனக்கு ஒரு பெண்குழந்தை பிறக்கவேண்டும். அதன் இதழ்கள் இந்த இரத்தத்தைப்போல் சிவந்ததாக இருக்கவேண்டும். அவளது தலைமுடி கன்னங்கரேலென கருங்காலி நிறத்தில் கறுப்பாக இருக்க வேண்டும். அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனி பனிகலந்த செவ்வானத்தின் நிறம்போல் அமையவேண்டும். உலகத்தின் பேரழகியாகத் திகழவேண்டும்." இப்படியான எண்ணம் மனதில் தோன்றியது. நாட்கள் கழிந்தன. சுந்தரி தாய்மை யடைந்தாள். அரசியின் எண்ணம் வீணாகவில்லை. ஆழகிய பெண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். மன்னன் மேகவண்ணன் மனம் மகிழ்ந்தான். குழந்தையின் பிஞ்சு விரல்களை வருடினான். குழந்தைக்குச் சௌந்தர்யா என்று பெயரிட்டனர். மக்கள் திரளாக வந்து வாழ்த்தினார்கள். குழந்தை அழகு தேவதைபோன்று இருந்தாள்.

சௌந்தர்யா நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள். அன்பான பெற்றோர். ஆதரவளிக்கும் குடிமக்கள். சௌந்தர்யா மகிழ்ச்சியுடன் வளர்ந்தாள். அந்த நாட்டிலேயே அவள்தான் அழகி. சௌந்தர்யம் என்பதே அழகுதான். இயற்கையை ரசிப்பது அவளது பொழுது போக்கு. நாட்டின் எல்லைப் புறம்வரை உலா வருவாள். அவளது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. சுந்தரி சுகவீனமுற்றாள். பல மருத்துவர்கள் வந்தார்கள். பலன்தான் கிடைக்கவில்லை. சில நாட்களில் அவள் இறந்து விட்டாள். மன்னன் மனமுடைந்து போனான். ஒரு நாட்டின் மன்னன் அவன். நாடுதான் பெரியது. மன்னனின் கவலையைப் போக்கவேண்டும். மக்கள் மன்னனைத் தேற்றினார்கள். மாயாவை மன்னன் மறுமணம் செய்து கொண்டான்.

மாயா சௌந்தர்யாவோடு அன்பாக இருந்தாள். மாயா பேரழகி. தான்தான் உலகின் பேரழகி என்ற நினைப்பு. என்னைவிட அழகி எந்த நாட்டிலும் இல்லை. இருக்கக் கூடாது. அப்படி ஒரு எண்ணம் அவள் மனதில் இருந்தது. அவளிடம் ஒரு கண்ணாடி இருந்தது. அந்தக் கண்ணாடியும் அவளைப் போன்று மாயமானதுதான். அது சுவரில் மாட்டப்பட்டிருந்தது. காலையில் கண்ணாடியின் முன் நிற்பாள். தனது அழகைப் பார்ப்பாள். தன்னழகைப் பார்த்து ரசிப்பாள்.

‘‘நிலைக் கண்ணாடியே நிலைக் கண்ணாடியே அலைகடல் உலகில் உன்னத அழகி யார் சொல்."என்று கேட்பாள்.

‘‘உன்னத அழகி உன்னைப் போல் உலகில் யாரும் இல்லையடி" கண்ணாடி ஆச்சரியமாகப் பதில் சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பதிலில் அவள் மயங்கிப் போவாள். கர்வத்துடன் உலா வருவாள். அதில் அவளுக்கொரு இன்பம். காலம் விரைந் தோடியது. சௌந்தர்யா வளர்ந்தாள். பருவமடைந்தாள்.

ஒருநாள் வழமைபோல் கண்ணாடியின் முன் நின்றாள். தன்னை நன்கு அலங்கரித்திருந்தாள்.
''நிலைக் கண்ணாடியே நிலைக் கண்ணாடியே
அலைகடல் உலகில் உன்னத அழகி யார் சொல்.'' என்றாள். கண்ணாடி சற்றுத் தாமதித்தது. ''ஏய் கண்ணாடியே ஏன் தாமதிக்கிறாய்.? விரைவாகச் சொல்'' வற்புறுத்தினாள்.

''உன்னத அழகி உன்னைவிட உலகில் ஒருத்தி உள்ளாளடி'' கண்ணாடியின் பதிலை மாயா நம்ப வில்லை.

''ஏய் அற்புதக் கண்ணாடியே பொய் சொல்லாதே. உன்னத அழகி நான்தானே.? எனக்குத் தலையே வெடிக்கும்போல் இருக்கிறது. சொல்'' உறுமினாள்.

''உன்னத அழகி உன்னைவிட உலகில் ஒருத்தி உள்ளாளடி'' கண்ணாடி மீண்டும் அதனையே சொன்னது.

மாயாவின் கண்கள் தீப்பொறியாக மாறின. கோபத்தால் பயங்கரமாகச் சத்தமிட்டாள். ''எனக்குப் போட்டியாக இன்னொருத்தியா''? அவளால் பொறுக்க முடியவில்லை.

''யாரந்த அழகி. எங்கே இருக்கிறாள்?. விரைவாகச் சொல்.'' படபடத்துச் சொற்களை அள்ளி வீசினாள்.

''உன்னத அழகி உன்வீட்டில் உள்ளாள் உயர்ந்த பேரழகி சொன்னால் என்னை ஏசாதே சௌந்தர்யா தான் பேரழகி'' கண்ணாடி கடகடத்துக் கூறியது. மாயா வெடவெடத்துப் போனாள். எனக்கெதிரியாக சௌந்தர்யாவா? நான் ஏமாந்து போனேன். நான் ஊட்டி வளர்த்தவள். அவள் எனக்கு எதிரியா? நான் மட்டுந்தான் இந்த உலகின் அழகியாக இருக்க வேண்டும். அவள் தனக்குத்தானே பேசிக் கொண்டாள். "இன்றே கதையை முடிக்கிறேன்." அவளது மனது இறுகத் தொடங்கியது. விரைந்து செயற்படத் தொடங்கினாள்.

தனக்கு விசுவாசமான ஏவலாளியை யோசித்தாள். அது தேவன்தான். அவனால் மட்டுந்தான் முடியும். சௌந்தர்யா உலாவுக்குத் துணைபோவதும் தேவன்தான். அவனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுத்தாள். தனது திட்டத்தை அவனிடம் கூறினாள். அவன் பிரமித்துப் போனான். அவனுக்குக் கிடைக்க விருக்கும் பரிசினையும் சொன்னாள். மறுத்தால் கிடைக்கும் தண்டனையையும் கூறிவைத்தாள். தேவன் யோசித்தான். அவன் சம்மதித்தாக வேண்டும். சம்மதித்தான். சிலநாட்கள் அவகாசம் கொடுத்தாள்.

தேவன் சௌந்தர்யாவிடம் வந்தான். அவள் முகம் வாடிக்கிடந்தது. அதனையே சாதகமாகப் பயன்படுத்தினான். ''தேவி ஏனம்மா வாட்டம்.? உலாபோனால் உள்ளம் மகிழும். வாருங்கள் செல்லலாம்.'' என்றான். சௌந்தர்யா மகிழ்ந்தாள். துள்ளிக் குதித்தாள். சித்தியிடம் விடைபெற ஓடினாள். ''சித்தி உலாப்போய் வரட்டுமா''? கேட்டாள். ''அதற்கென்ன. தாராளமாகப் போய் வா''? விடை கிடைத்தது. தேவனை மாயா அழைத்தாள். ''சௌந்தர்யாவோடு போய் வா. கவனம்.''? மாயா சந்தோசமாக வழியனுப்பினாள்.

தேர் ஆயத்தமாக இருந்தது. ஏறினார்கள். தேர் புறப்பட்டது. ஊரைக் கடந்தது. அழகான வனம் வந்தது. ஒதுக்குப்புறமாகத் தேர் நின்றது. சௌந்தர்யா இறங்கினாள். சுற்றிச் சுற்றி சிட்டாய்ப் பறந்தாள். மகிழ்ச்சியால் துள்ளினாள். தேவன் அவளை உற்றுப் பார்த்தான். அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. தேவனின் உள்ளம் இரக்கமானது. எப்படியும் இவளைக் காப்பாற்ற வேண்டும். அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். சௌந்தர்யாவை அழைத்தான். அவளிடம் உண்மையைச் சொன்னான். அவளால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. அழுகை அழுகையாய் வந்தது. ''தேவி கவலை வேண்டாம். நான் உங்கள் சித்தியின் கட்டளையைச் செய்யமாட்டேன். நீங்கள் தப்பி எங்காவது செல்லுங்கள். நான் போகிறேன்.'' அவன் புறப் பட்டுவிட்டான். சௌந்தர்யா அப்படியே சிலையாகக் குந்தினாள்.

தேவனை நினைத்தாள். அவனது செயலுக்கு நன்றி தெரிவித்தாள். மெதுவாக எழுந்தாள். கால்போன போக்கில் நடந்தாள். சூரியன் மேற்கு வானில் பவனிவந்தான். மெல்லிய காற்று வீசியது. ஆனாலும் அவளுக்கு உடலும் உள்ளமும் வியர்த்தது. தூரத்தில் ஒரு வீடு தெரிந்தது. அதனை நோக்கி அவள் கால்கள் நடந்தன. கதவைத் தள்ளினாள். அது திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது. அது அழகான சிறிய வீடு. சின்னச்சின்ன அறைகள். சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். ஆட்களே இல்லை. அதிசயமாகப் பார்த்தாள். அவள் பெரிய அரண்மனையில் வாழ்ந்தவள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அறைகளுள் கட்டில்கள் இருந்தன. சௌந்தர்யா களைத்திருந்தாள். ஒரு அறையினுள் சென்றாள். அங்கிருந்த கட்டிலில் படுத்தாள். உறங்கிவிட்டாள்.

மாலை நேரம். மெல்லிய இருள் சூழத்தொடங்கியது. அந்த வீட்டை நோக்கி ஏழுபேர் வரிசையாக வந்தார்கள். அவர்கள் குள்ளமானவர்கள். அவர்கள்தான் வீட்டின் சொந்தக்காரர்கள். அவர்கள் அனைவரும் சகோதரர்கள். காலையில் தங்கள் வயலுக்குச் செல்வார்கள். வேலை செய்வார்கள். மாலையானதும் வீட்டுக்கு வருவார்கள். சமைப்பார்கள். உண்பார்கள். சந்தோசமாக இருப்பார்கள். அவர்கள் வீட்டை அடைந்தார்கள். அறைக் கதவுகள் திறந்து கிடந்தன. உள்ளே சென்றார்கள். எங்கும் இருளாக இருந்தது. மெழுகுவர்த்தியை ஏற்றினார்கள். ஒவ்வொரு அறையாகப் பார்த்தார்கள். ஆச்சரியம் காத்திருந்து. ஒரு அறையில் சௌந்தர்யா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

இங்கு யாரோ உறங்குகிறார்கள். ஒருவன் சத்தமிட்டான். அந்தச் சத்தத்தில் சௌந்தர்யா விழித்தெழுந்தாள். தன்னைச் சுற்றி ஏழுபேர் நிற்பதை உணர்ந்தாள். அவர்கள் விழிகள் அவளை உற்றுப் பார்த்தன. எவ்வளவு அழகு? ஆச்சரியத்தோடு சௌந்தர்யாவைச் சூழ்ந்து நின்றனர். ‘‘யாரம்மா நீ ?. ஏன் இங்கு வந்தாய்? சொல் கேட்போம்.” ஒருவன் மெல்லிய குரலில் கேட்டான். சௌந்தர்யா தனது கதையைக் கூறினாள். குள்ளர்கள் அவளது கதையைக் கேட்டனர். அவர்களுக்குச் சௌந்தர்யாமேல் பரிதாபம் ஏற்பட்டது. அவர்களது கண்களிலும் கண்ணீர் கட்டியது.

‘‘எங்களோடு இங்கேயே இருங்கள். உங்களுக்குத் தீங்கு ஏற்படாது. நாங்கள் இருக்கிறோம். பாதுகாப்போம்”. என்றனர். சௌந்தர்யா அவர்களது வேண்டுகோளை ஏற்றாள். அங்கேயே தங்கிக் கொண்டாள். குள்ளர்கள் வேலைக்குப் போவார்கள். மாலையில் வருவார்கள். சௌந்தர் யாவோடு அன்பாகப் பழகுவார்கள். நாட்கள் நகர்ந்தன. அரண்மனையில் மாயா கண்ணாடியின் முன் நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நிலைக் கண்ணாடியே நிலைக் கண்ணாடியே அலைகடல் உலகில் உன்னத அழகி யார் சொல்.'' என்றாள். கண்ணாடி சற்றுத் தாமதித்தது. ''ஏய் கண்ணாடியே நான் சத்தமிடுகிறேன். நீ பேசாதிருக்கிறாய்? கூறு'' என்றாள்.

''உன்னத அழகி செளந்தர்யாதான் உள்ளாள் உயர்ந்த பேரழகி என்னை நீயும் ஏசாதே செளந்தர்யா தான் பேரழகி''

கண்ணாடி பதில் சொன்னது. ''செளந்தர்யாவா? அவள் இன்னும் இருக்கிறாளா? நான் மோசம் போனேனா? தேவன் என்னை ஏமாற்றியா விட்டான்''? அவள் உடல் நடுங்கியது. அவளை அழிக்காமல் விடமாட்டேன். ''ஏய் மாயக் கண்ணாடியே செளந்தர்யா எங்கே இருக்கிறாள். அதைச் சொல். அலறினாள்.

''உன்னத அழகி செளந்தர்யாதான்
உள்ளாள் குள்ளர்கள் வீட்டினிலே சென்று பார்த்தால் புரிந்துவிடும் செய்வதை நீயும் செய்துகொள்''

கண்ணாடி சொல்லி முடித்தது. ''செய்து காட்டுகிறேன். இன்றே போகிறேன். கதையை முடிக்கிறேன்.'' சத்தமிட்டாள். புறப்பட்டு விட்டாள்.

காலையில் குள்ளர்கள் வேலைக்குப் புறப்பட்டு விட்டார்கள். செளந்தர்யா வழமைபோல் வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். மாயா மாறுவேடத்தில் வந்தாள். அவள் கைகளில் கூடையிருந்தது. அதனுள் பலவகைப் பொருட்கள் இருந்தன. குள்ளர்கள் வீட்டைக் கண்டுபிடித்து விட்டாள். கதவைத் தட்டினாள். அன்பான பெண்களே வெளியே வாருங்கள். வந்து அழகுப் பொருட்களை வாங்குங்கள். கூறிக்கொண்டே கதவைப் பலமுறை தட்டினாள். செளந்தர்யா யன்னல் வழியே பார்த்தாள். '' அழகுத் தேவதையே இங்கே பாருங்கள். அற்புதமான பொருட்கள். இந்த கழுத்து மாலை உங்களுக்கு பொருத்தமானது. வாருங்கள். நானே அணிவிக்கிறேன்''. சொக்குப் பொடி போட்டுக் கதைத்தாள்.

செளந்தர்யா அவள் பேச்சில் மயங்கிவிட்டாள். கதவைத் திறந்து வெளியே வந்தாள். வா குழந்தாய். நானே இதனை அணிவிக்கிறேன். கூறியவாறு செளந்தர்யாவின் பக்கம் வந்தாள். மணிமாலையை செளந்தர்யாவின் கழுத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டினாள். அவ்வளவுதான். மணிமாலை கழுத்தை இறுக்கியது. சௌந்தர்யாவுக்கு மூச்சுத் திணறியது. அப்படியே மயங்கி விழுந்தாள். வெற்றிச் சிரிப்போடு அகன்று விட்டாள். எவ்வளவு நேரம் அப்படியே கிடந்தாள். மாலையாகியது. குள்ளர்கள் வந்தார்கள். சௌந்தர்யாவின் நிலையைக் கண்டார்கள். கழுத்தில் மணிமாலை இறுக்கிக் கொண்டிருந்தது. அதனைத் தளர்த்தினார்கள். முகத்தில் தண்ணீரைத் தெளித்தார்கள். சௌந்தர்யா கண்களைத் திறந்தாள். குள்ளர்கள் மனதில் சந்தோசம் கூத்தாடியது. சௌந்தர்யாவை எச்சரித்தார்கள். இவை யாவும் உங்கள் சித்தியின் வேலை. நாங்கள் இல்லாத வேளையில் கவனமாக இருக்கவேண்டும்.

வேலைக்குக் காலையில் புறப்படுவார்கள். "கதவைத் திறக்க வேண்டாம். வெளியே வரவேண்டாம்." கட்டளை இட்டுச் செல்வார்கள். அப்படியே சௌந்தர்யா நடந்து கொண்டாள். நாட்கள் சென்றன. மாயா கண்ணாடியின் முன் நின்றாள். அது சௌந்தர்யா உயிரோடு இருப்பதைக் காட்டியது. ஒருநாள் மாறுவேடத்தில் சென்றாள். இம்முறை பல்வேறு பொருட்களுடன் சென்றாள். அவற்றுள் சீப்பும் இருந்தது. தூரத்தில் நின்றவாறே கூவினாள். சௌந்தர்யாவுக்குச் சீப்புத் தேவைப்பட்டது. கதவைத் திறந்து வெளியில் வந்தாள். சீப்பை வாங்கினாள். தலையைச் சீவினாள். அவ்வளவுதான். சீப்பில் இருந்த விஷம் தலைக்கேறியது. மயங்கி விழுந்தாள். குள்ளர்கள் வரும் வரை அப்படியே கிடந்தாள்.

குள்ளர்கள் கலங்கினார்கள். மருந்து கொடுத்தார்கள். விஷம் நீங்கியது. சௌந்தர்யா காப்பாற்றப் பட்டாள். மீண்டும் குள்ளர்கள் எச்சரித்தார்கள். "கதவைத் திறக்க வேண்டாம். வெளியே வரவேண்டாம். யாரையும் உள்ளே விடவும் வேண்டாம்" என்றார்கள். ஆனால் விதி அவளை விடவில்லை. சௌந்தர்யா காப்பாற்றப் பட்டதை மாயா அறிந்து கொண்டாள். வேறு திட்டத்தை யோசித்தாள். காலத்தையும் தருணத்தையும் எதிர்பார்த் திருந்தாள். அந்த நேரமும் வந்தது. மாறுவேடத்தைப் பற்றி யோசித்தாள். சௌந்தர்யாவுக்குப் பழங்கள் பிடிக்கும். தீர்மானித்து விட்டாள். புறப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகையான அப்பிள் பழங்களை எடுத்தாள். பழங்கள் விற்பவள்போல் மாறுவேடம் அணிந்தாள். சௌந்தர்யாவின் வீட்டு யன்னல் பக்கம் நின்றாள். யன்னலைத் தட்டினாள். சத்தங் கேட்டு யன்னலைத் திறந்தாள். சௌந்தர்யா எட்டிப் பார்த்தாள். பழங்களைக் கண்டாள். அவற்றின் நிறங்கள் அவளை ஈர்த்தன. நன்றாகச் சிவந்த பழம் கண்ணில் பட்டது. பழங்கள் அழகானவை. அவற்றின் நிறங்களும் கண்ணைக் கவர்ந்தன. அழகான வார்த்தைகளை அள்ளி வீசினாள். ''எனக்கு நேரமில்லை. பல இடங்களுக்குப் போகவேண்டும். உங்கள் வீடுகளுக்குள் வரமுடியாது. வேண்டுமா வேண்டாமா? நான் போகவேண்டும்''. அவசரப் படுத்தினாள். ''சரி ஒரு பழத்தைப் போடுங்கள். பழம் கைகளுக்குள் வந்தது. ''இதோ பணம்'' சௌந்தர்யா வீசினாள். மாயா விரைந்து சென்று விட்டாள். அந்தப் பழத்தில் விஷம் கலந்திருந்தது. சௌந்தர்யாவுக்குத் தெரியாது. வேலைகளை முடித்தாள்.

ஆறுதலாகக் கட்டிலில் இருந்தாள். பழத்தைக் கடித்தாள். ஒரு துண்டு தொண்டையில் இறங்கியது. சௌந்தர்யாவுக்கு ஏதோ செய்தது. அப்படியே கட்டிலில் சாய்ந்தாள். மயக்கமானாள். குள்ளர்கள் வந்தார்கள். சௌந்தர்யாவின் நிலையைக் கண்டார்கள். துரிதமாகச் செயற்பட்டார்கள். பலவிதமான சிகிச்சைகளைச் செய்தனர். ஆனால் பயனேதும் இல்லை. கவலையில் ஆழ்ந்தார்கள். அவளது மூச்சு நின்றிருந்தது. ஆனால் உடலில் மாற்றமில்லை. அது அழகாகவே இருந்தது. அவர்களது கண்கள் கண்ணீரைச் சிந்தின. அவளை இழக்க குள்ளர்களுக்கு மனமில்லை. அவளுக்காக ஒரு கண்ணாடிப் பெட்டியைச் செய்தார்கள்.

அந்தப் பெட்டியினுள் கிடத்தினார்கள். சுற்றி நின்று விம்மினார்கள். வேலையையும் மறந்தார்கள். வீடு சோகமாகியது. அவ்வழியால் ஒரு இளவரசன் சென்றான். அவன் செய்தியை அறிந்தான். வீட்டினுள் நுழைந்தான். சௌந்தர்யாவின் உடலைப் பார்த்தான். அவள் அழகாகவே காட்சியளித்தாள். ''இவளை எனது மாளிகைக்குக் கொண்டு செல்கிறேன். அங்கு வசதிகள் உண்டு. முயற்சி செய்து பார்ப்போம்''. குள்ளர்களின் அனுமதியைக் கோரினான். முதலில் அவர்கள் தயங்கினார்கள். சௌந்தர்யா உயிரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் போதும். இளவரசனுக்கு அனுமதி கிடைத்தது.

இளவரசன் தனது வேலையாட்களை அழைத்தான். கண்ணாடிப் பேழையைத் தூக்கும்படி பணித்தான். அவர்களில் நால்வர் பேழையைத் தூக்கினார்கள். இளவரசன் குதிரையில் முன்னே சென்றான். பணியாட்கள் பேழையுடன் நடந்தார்கள். வழி கரடுமுரடானது. நடந்தார்கள். முன்னால் சென்றவனின் கால்கள் இடறின. அதனால் தடுமாறினார்கள். இடறி விழுந்தார்கள். பேழை தூரத்தே வீசப்பட்டது. சௌந்தர்யாவும் வீசப்பட்டாள். இளவரசன் அதிர்ந்தான். ஓடோடி வந்தான். அப்படியே அவளைத் தூக்கினான். அடிபட்ட அதிர்ச்சியில் சௌந்தர்யாவுக்குச் செருமல் வந்தது. அதிர்ந்து இருமினாள். அவளது தொண்டையில் இருந்து அப்பிள் வெளியே வந்தது. அவளுக்கு மூச்சு வந்தது. மெல்ல விழிகளைத் திறந்தாள். இளவரசன் மகிழ்ச்சி அடைந்தான்.

என்ன நடந்தது.? கண்களை அகலத்திறந்தாள். அவள் விழிகள் சுழன்றன. இளவரசன் எப்படி இங்கே வந்தான்.? குள்ளர்கள் சௌந்தர்யாவைக் கண்டார்கள். மகிழ்ச்சியால் ஆளையாள் கட்டிப் பிடித்தார்கள். சௌந்தர்யா கிடைத்துவிட்டாள். உயிர் பிழைத்து விட்டாள். துள்ளிக் குதித்தார்கள். இளவரசன் கைகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். மெல்ல எழுந்தாள்.

குள்ளர்கள் இளவரசனின் கைகளைப் பிடித்தார்கள். எங்கள் சௌந்தர்யாவுக்கு உயிர் கொடுத்தீர்கள். அவளை நீங்களே திருமணம் செய்ய வேண்டும். என்றார்கள். இளவரசன் புன்னகை பூத்தான். சௌந்தர்யா பக்கம் குள்ளர்கள் சென்றார்கள். இளவரசனைப் பிடித்திருக்கிறதா? கேட்டார்கள். அவள் நாணத்தால் தலை கவிழ்ந்தாள். அவளது கைகளைப் பிடித்தார்கள். இளவரசனிடம் அழைத்து வந்தார்கள். அவனது கைகளைப் பிடித்தார்கள். எங்கள் சகோதரியை ஏற்றுக் கொள்ளுங்கள். இனி நீங்கள்தான் அவளக்குப் பாதுகாப்பு. இளவரசனிடம் ஒப்படைத்தார்கள். இளவரசனின் குதிரை தயாராக நின்றது. மணமக்களை ஏற்றிக் கொண்டு குதிரை விரைந்தது. குள்ளர்கள் மகிழ்ச்சியோடு தங்கள் இருப்பிடம் சென்றார்கள். மாயாவைப் பற்றிய கதையே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் இளவரசி

நீலக்கடல் ஆர்ப்பரித்தது. காற்று கடல்நீரை அழுத்தியது. அலைகள் எழுந்து கரையில் மோதின. கடற்கரை எங்கும் நுரை கொடியாகப் படர்ந்திருந்தது. கரையில் நண்டுகளின் கொண்டாட்டம். அந்தக் கடலினடியில் பெரியதொரு நகரம் இருந்தது. அது கடலரசனின் ஆட்சிக்கு உட்பட்டது. பெரிய மாளிகை, பூந்தோட்டங்கள் இருந்தன. கடலரசனுக்கு ஆறு பெண்குழந்தைகள் இருந்தார்கள். ஆறுபேரும் அழகானவர்கள். ஆறாவது கடைக்குட்டி மிகவும் அழகானவள். கடலரசனின் மனைவி இறந்து விட்டாள். அரசனின் தாய் பிள்ளைகளைக் கவனித்தார். அன்பபை ஊட்டி வளர்த்தார். அவர்களுக்குக் குறை இருந்ததில்லை.

பாட்டி பாசமாக இருந்தார். பிள்ளைகள் பாட்டியின் சொல்லைத் தட்டுவதில்லை. பாட்டி கதைகள் சொல்வார். மனிதர்களைப் பற்றிய கதை சொல்வார். கப்பல்களைப் பற்றியும், நகரங்களைப் பற்றியும் கூறுவார். நிலத்தில் வாழும் மீன்களைப் பற்றிக் கூறுவார். அந்த மீன்கள் பறந்து பாடும் என்பாள். அவள் குறிப்பிட்டது பறவைகளைத்தான். பாட்டியின் கதைகள் இளவரசிகளைக் கற்பனையில் ஆழ்த்தும். அவர்களது வழக்கம் வித்தியாசமானது. பதினைந்து வயதை அடைந்தால்தான் கடலின் மேற்பரப்புக்கு வரலாம். அதுவரை காத்திருக்க வேண்டும்.

கடலரசிகளின் உடலமைப்பு வித்தியாசமானது. இடுப்புக்கு மேல் மனிதர்களது உருவம். அழகான நீல விழிகள். அப்பிள் பழங்கள் போன்ற கன்னங்கள். வடிவான முகம். அழகான காதுகள். அலையலையான கருங்கூந்தல். அமைப்பான கைகள். இடுப்புக்குக் கீழ் மீன்களைப் போன்ற அமைப்பு. கால்கள் இல்லை. அவை ஒட்டியபடி மீன்களினது அமைப்பாக இருக்கும். கடைக்குட்டி ரோஜா மலரைப் போன்றவள். மாளிகை முன்னால் பூந்தோட்டங்கள் இருந்தன. ஒவ்வொரு இளவரசிக்கும் ஒவ்வொரு பூந்தோட்டம் இருந்தது. கடைக்குட்டியின் பூந்தோட்டம் மிகவும் அழகானது. விதம் விதமாக அதனை அழகு செய்வாள். கடலடியில் அவை இருந்தன. சூரிய ஒளியில் அவை தகதகக்கும். கடல்நீர்ப் பரப்புத்தான் அவர்களது வானம். சூரிய ஒளியில் நீலப்பளிங்கு போலிருக்கும். கடற்பரப்பில் கப்பல்கள் போகும். பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்கள் என இளவரசிகள் நினைப்பார்கள். பூக்கள் சிவந்து சிரிக்கும். ஆனால் பூக்களில் வாசம் இல்லை.

இளவரசிகளின் அறைகளுக்குள் சின்னச் சின்ன மீன்கள் போகும். அவை மிகவும் அழகானவை. பல வண்ணங்களில் உலாவந்து போகும். அவர்களது கைகளில் இருக்கும் உணவுகளைக் கௌவிக் கொண்டோடும். அவற்றின் துணிச்சலைப் பாராட்டுவார்கள். நாட்கள் உருண்டோடின. மூத்தவள் பதினைந்து வயதை அடைந்தாள். அவள் கடற்பரப்புக்குப் போக ஆயத்தமானாள். அனைவரும் வாழ்த்தினார்கள். அவள் வந்து கதைகதையாகச் சொன்னாள். ''அழகான பச்சைப் பசேல் காடுகள். வண்ண வண்ண மலர்கள். மலைச் சாரல்கள். பாடிப் பறக்கும் மீன்கள். என்னால் மறக்கவே முடியாது.'' அவள் கூறிக்கொண்டே சென்றாள்.

தங்கைமார் சூழ்ந்திருந்து ரசித்தார்கள். படிப்படியாக மற்றவர்களுக்கும் வயது வந்து விட்டது. அடுத்தவள் புறப்பட்டுப் போனாள். அவள் அவ்வளவு தைரியசாலி இல்லை. ''அப்படி ஒன்றும் அழகானவை இல்லை'' என்றாள். அடுத்தவளும் புறப்பட்டு விட்டாள். ஐந்தாவது இளவரசியும் புறப்பட்டாள். சகோதரிகள் கைகோர்த்துக் கடற்பரப்பை அடைவார்கள்.

"கடலின் அடியில்தான் சந்தோசம்
காலம் காலமாய்க் கொண்டாட்டம"
பாடி மகிழ்ந்து ரசித்து வருவார்கள். கடைக்குட்டி யன்னல் ஓரம் நிற்பாள். கற்பனையில் மூழ்கி நனைவாள்.
பாட்டி கடைக்குட்டியிடம் வந்தாள். ''மகளே இன்று நீயும் போகலாம்'' என்றாள். அவளுக்கும் பதினைந்து வயதாகியது. தலைகால் தெரியாது மகிழ்ந்தாள். சகோதரிகள் கைகோர்த்து விரைந்தார்கள். கடற்பரப்புக்கு வந்தார்கள். சூரியன் மறையும் நேரம். வானம் பல வர்ணங்களைப் பூசிக்கொண்டது. நீலவானத்தில் மின்மினிப் பூச்சிகள் கண்சிமிட்டின. கப்பல்களில் மின்விளக்குகள் பிரகாசித்தன. என்ன அற்புதம்.? எத்தனை விதமான நகரங்கள்.? கப்பல்களில் மனிதக் குரல்கள். சிரிப்பொலிகள். வண்ண வண்ண ஆடைகளில் மனிதர்களைக் கண்டார்கள். விரும்பியவாறு விரும்பிய திசைகளில் சென்றார்கள். கடைக்குட்டி நீரைக்கிழித்து வெளிவந்தாள். பெரிய கப்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவதைக் கண்டாள். அதனை உற்றுப் பார்த்தாள். அன்றுதான் மனிதர்களைக் கண்டாள். யன்னல் ஊடாக அந்த அழகனைக் கண்டாள். எத்தனை அழகானவன்?. வடிவாக உடையணிந்திருந்தான். இவன் யார்? எந்த நாட்டு இளவரசன்.?அவள் ரசித்தாள்.

கப்பல் விரைவாகச் சென்றது. அதனைப் பின் தொடர்ந்து சென்றாள். யன்னல் ஊடாக அவளது பார்வை இருந்தது. கடலில் மாற்றம் தெரிந்தது. காற்று விரைந்து வீசியது. அலைகள் புரண்டடித்தன. கப்பலால் ஈடு கொடுக்க முடியவில்லை. அது தூக்கி வீசப்பட்டது. தண்ணீரில் மூழ்கியது. எங்கே இளவரசன்? சுழன்று தேடினாள். அவன் உயிருக்காகப் போராடினான். ஓடோடிச் சென்றாள். அவனது தலை நீரில் மூழ்கியது. மூர்ச்சித்துக் கிடந்தான். அவனது உயிரைக் காக்க வேண்டும். நமது அரண்மனைக்குக் கூட்டிச் சென்றால் என்ன? மனிதர்கள் நீரில் வாழமுடியாது. பாட்டி சொன்னாரே. என்ன செய்யலாம்.? பலமுறை இளவரசனின் முகத்தைப் பார்த்தாள். ''இவரை நான் சாகவிடமாட்டேன். காப்பாற்றுவேன்''. தலையை நீரில் மூழ்கவிடாது தாங்கினாள். தீப்பிளம்பு கடலிலிருந்து கிழம்பியதா? அதிசயத்தோடு பார்த்தாள். அது சூரியன். சூரியன் சிவந்து புதினம் பார்க்க வந்துவிட்டான்.

இளவரசனை அணைத்தவாறே கரையை நோக்கி நீந்தினாள். கரை தூரத்தில் தெரிந்தது. இளவரசனின் முகத்தை உற்று நோக்கினாள். அழகான முகம். மெதுவாக கரையில் ஒதுக்கினாள். அதற்கு மேல் அவளால் செல்ல முடியாது. என்ன செய்வது? அங்கிருந்து பார்த்தாள். பக்கத்தில் ஒரு வீடு தெரிந்தது. பல இளம்பெண்கள் தெரிந்தனர். அவர்களில் யாராவது வரக்கூடும். அவர்கள் காப்பாற்றுவார்கள். ''இவன் நீரில் வாழமுடியாது. நான் நிலத்தில் வாழமுடியாது.'' அவளது மனம் கவலையில் ஆழ்ந்தது. செய்வதறியாது தவித்தாள்.

வீட்டிலிருந்து இளம்பெண் வெளியே வந்தாள். கடலரசி தன்னை மறைத்துக் கொண்டாள். பாறையில் ஒளிந்து கொண்டாள். அவள் கரையை நோக்கி வந்தாள். கரையில் கிடந்த உருவத்தைக் கண்டாள். மற்றவர்களைச் சத்தமிட்டு அழைத்தாள். அனைவரும் ஓடி வந்தார்கள். இளவரசனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கினார்கள். வீட்டை நோக்கி நடந்தார்கள். கடலரசியின் மனம் கனத்தது. இளவரசனைக் காப்பாற்றிய திருப்தி. அவனை உயிரோடு கண்டுகொண்டாள். எப்போதாவது காணலாம். இளவரசனின் உள்ளத்தில் அவன் நிறைந்திருந்தான். வேதனையோடு விரைந்தாள்.

சகோதரிகள் நேரத்துக்கு வந்து விட்டார்கள். பாட்டி கடைக்குட்டியை எதிர்பார்த்தபடியே இருந்தாள். அவளுக்கு இருப்புக் கொள்ள வில்லை. வாசலில் வந்து நின்றாள். இதோ கடைக்குட்டி வந்து விட்டாள். பாட்டிக்குச் சந்தோசம். அன்புடன் கடிந்து கொண்டாள். சகோதரிகள் சூழ்ந்து கொண்டனர். கண்டனவற்றைக் கூறும்படி கேட்டனர். அவள் பதிலேதும் கூறவில்லை. பாட்டி அவளது வாட்டத்தைக் கண்டாள். அவளாகச் சொல்லும் வரை காத்திருந்தாள். நாட்கள் உருண்டன. ஒவ்வொரு நாளும் கடலரசி போவாள். இளவரசனைத் தேடுவாள். வாட்டத்துடன் திரும்புவாள். அவனைச் சந்திக்கவே இல்லை. கவலை கடலரசியை வாட்டியது. தனது தோட்டத்தை அவள் கவனிப்பதும் இல்லை.

ஒரு நாள் தனது மூத்த சகோதரியை அழைத்தாள். தனது கதையைக் கூறினாள். அவள் மிகவும் வருந்தினாள். அந்தச் சகோதரி மற்றச் சகோதரிகளுக்குக் கூறினாள். இப்படியாகக் கதை நண்பர்களுக்கும் பரவியது. அவர்களுள் ஒருத்திக்கு இளவரசன் இருக்குமிடம் தெரியும். ''சின்னத் தங்கையே வா. எனக்கு அவர் இருக்குமிடம் தெரியும். நான் கூட்டிச் செல்கிறேன்.'' என்றாள். அனைவரும் கைகளைக் கோர்த்தார்கள். சந்தோசமாகப் புறப்பட்டார்கள். இளவரசனின் மாளிகையின் முன் நின்றார்கள். அந்த வீடு மிக அழகானது. பெரிய அறைகளைக் கொண்டது. ஆறு இளவரசிகளுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. யன்னல் ஊடாகப் பார்த்தார்கள். திரும்பினார்கள்.

இளவரசனின் மாளிகையைக் கடலரசி கண்டு விட்டாள். ஒவ்வொரு நாளும் அங்கு செல்வாள். யன்னல் ஊடாகப் பார்ப்பாள். அவனைப் பார்த்து மகிழ்வாள். சில நேரங்களில் அவனை நதியோரம் காண்பாள். பசும் புற்தரையில் காண்பாள். ''இளவரசன் மகவும் தைரியசாலி'' மீனவர்கள் சிலர் கூறியதைக் கேட்டாள். தான் இளவரசனைக் காப்பாற்றியதை நினைந்தாள். சந்தோசத்தால் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்தாள். நாளுக்கு நாள் மனிதர்களை நேசிக்கத் தொடங்கினாள். அவர்களில் ஒருவராக இருக்க விரும்பினாள். மனிதர்களாக இருந்தால் நிலத்தில் வாழலாம். விரும்பிய இடங்களுக்குச் செல்லலாம். கப்பலில் பயணிக்கலாம். மலைகளில் ஏறி உலாவரலாம். கற்பனையில் மிதந்தாள்.

அவளது உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் தோன்றின. ஆறுதலாக பாட்டியிடம் வினவினாள். ''பாட்டி! மனிதர்கள் நெடுங்காலம் வாழ்வார்களா''? பாட்டிக்கு அதிசயம். ''அவர்களும் எங்களைப் போல் சாகத்தான் வேண்டும்''. பாட்டி பதிலிறுத்தாள். ''நாங்கள் முந்நூறு வருடங்கள் வாழ்வோம். நாங்கள் இறந்தால் எங்களுடல் கடல்நீரோடு கரைந்துவிடும். நாங்கள் மீண்டும் வாழமாட்டோம். எங்களுக்கு ஆத்மா இல்லை. ஆனால் நிலத்தில் வாழும் மனிதருக்கு ஆத்மா உண்டு. அவர்களது உடல் அழியும் தன்மையது. அது அழிந்து பொடியாகி விடும். ஆனால் அவர்களது ஆத்மா அழிவதில்லை. ஆத்மாக்கள் சொர்க்கத்துக்குப் போய்விடும். சொர்க்கம் வானத்தில் உள்ளது. அது அழகான இடமாகும்.'' பாட்டி விளக்கினார். பாட்டி கூறும்போது ஆர்வமாகக் கேட்டாள்.

''பாட்டி ஏன் எங்களுக்கு ஆத்மா இல்லை. நான் ஏன் முந்நூறு வருடம் வாழவேண்டும்? எனக்கு ஆத்மா இருந்தால் எவ்வளவு நல்லது. இந்த உடல் இறந்துவிடும். இறந்தபின் அந்தச் சொர்க்கத்தை அடைவேனே? என்றும் சாகாவரத்தோடு வாழ்வேனே?'' ஏக்கத்தோடு கூறினாள். பாட்டிக்கு அவளது ஆதங்கம் புரிந்தது. அப்படியெல்லாம் பேசாதே மகள். நாங்கள் மனிதரைவிடவும் பாக்கியசாலிகள். முந்நூறு வருடங்கள் வாழ்கிறோம். இல்லையா? நிலத்தில் வாழ்பவரை விடவும் நீரில் வாழ்பவர்கள் சந்தோசமானவர்கள். பாட்டி விளக்கினார்.

''நான் இறந்தால் மீண்டும் கடற்பரப்புக்குப் போகமுடியாது. கடலின் இனிய ஓசையைக் கேட்டு ரசிக்கமுடியாது. மணம் வீசும் மலர்களைப் பார்க்கமுடியாது. தகதகக்கும் சூரியனைக் காணமுடியாது. நான் ஆத்மாவைப் பெறவேண்டும். அதற்கு ஏதாவது வழிவகைகள் உண்டா? பாட்டி தயவு செய்து கூறுங்கள்''. இளையவள் வற்புறுத்தினாள். கெஞ்சிக் கேட்டாள். ''வழி உண்டு மகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் வாழும் மனிதரால் முடியும். யாராவது உன்னை உயிருக்குயிராய் நேசிக்கவேண்டும். அவன் தன் தாய்தந்தைருக்கும் மேலாக உன்னை நேசிக்க வேண்டும். உன்னை என்றும் பிரியேன். எக்காலமும் நேசிப்பேன் என்று சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால் அவனது ஆத்மா உன்னுடலுள் புகும். அப்படி நேசிப்பவனால்தான் ஆத்மாவை நீ பெறமுடியும். ஆனால் அது சாத்தியமில்லை. நிலத்தில் உள்ளவர்கள் நம்மைப்போல் இல்லை. அவர்கள் கால்கள்தான் மிகவும் அழகுடையன என்று நினைப்பவர்கள்". பாட்டி விளக்கமளித்தார். கடலரசி கவலையினுள் மூழ்கினாள். தனது உடலைப் பார்த்தாள். இடுப்புக்கு மேல் அழகான மனித உடம்பு. இடுப்புக்குக் கீழ் கால்கள் இல்லை. அவை மீன்களின் அமைப்பிலிருந்தன.

கடலடியில் மந்திரக்காரி இருந்தாள். அவளால் எதனையும் செய்ய முடியும். அவள் எனக்கு உதவுவாள். முடிவெடுத்தாள். பயத்தை ஒருபுறம் ஒதுக்கினாள். அவளிடம் செல்வதற்கு ஆயத்தமானாள். மந்திரக்காரியின் வீட்டின் முன் நின்றாள். அவளது வீட்டின் முற்றத்தில் அசிங்கமான தாவரங்கள் இருந்தன. அவற்றின் கிளைகளில் மனித உடல்கள் தெரிந்தன. முதலில் பயந்தாள். திரும்பி ஓட எத்தனித்தாள். ஆனால் இளவரசனின் நினைவு வந்தது. அவளுக்குத் துணிவு பிறந்தது. மெதுவாக உள்ளே நுழைந்தாள். "நீ வருவாய் என்று எனக்குத் தெரியும். உனக்குத் தேவையானதை என்னால் தரமுடியும். ஆனால் அது உனக்கு சந்தோசத்தைத் தராது. பதிலாக வேதனையைத்தான் தரும். நிலத்தில் வாழும் மனித உருவம் தேவை. அந்த இளவரசன் உன்னை நேசிக்க வேண்டும். அப்படித்தானே"?

கடலரசி பிரமித்து விட்டாள். உறுதியாகப் பதில் சொன்னாள். "ஆம் அப்படித்தான்." "மகளே! உனக்குக் குடிப்பதற்கு மருந்து தருவேன். நீ குடித்ததும் கால்கள் வந்துவிடும். ஆனால் அதிலுள்ள வேதனை பெரியது. அழகானவளாக மாறுவாய். கால்களில் வேதனை தரும் எரிவு இருக்கும். நடக்கும் போது கால்கள் வலிக்கும். அதனை உன்னால் தாங்கமுடியாது. அதுமட்டுமல்ல. நீ ஒருபோதும் கடலரசியாக முடியாது. தாய் தந்தையைப் பிரிந்து போய்விடுவாய். இளவரசன் உன்னைத் திருமணம் டல்நீராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேண்டும். அப்படிச் செய்யாது விட்டால் நீ இறந்துவிடுவாய். கடல்நீராக மாறிவிடுவாய். இப்போது சொல். உனக்கு அந்த மருந்து வேண்டுமா"? மந்திரக்காரி வினவினாள்.

கடலரசி உறுதியுடன் சொன்னாள். "ஆம். எனக்கு மருந்துதான் வேண்டும்." என்றாள். "இன்னும் உள்ளது. இப்போது உன்னால் பேசவும் பாடவும் முடியும். ஆனால் கால்கள் வந்தபின் பேசவும் முடியாது. பாடவும் முடியாது. கடலரசி பதறிவிட்டாள். "பேசாது இளவரசனை எப்படி நேசிப்பது"? வினவினாள். உனது அழகான உடல் பேசும். நீலவிழிகள் கதைகதையாகக் கூறும். உனது அழகு நடை கவிதை பாடும். உன்னை அனைவரும் வியந்து போற்றுவார்கள். ஆனாலும் உனது உடலில் வலி பெரிதாகவே இருக்கும். இப்போதும் அதனை விரும்புகிறாயா? சொல்" என்றாள்.

கடலரசியின் நிலையில் மாற்றமில்லை. அது இன்னும் வலிமை பெற்றது. "ஆம்" என்றாள். "சரி இதோ அந்த மாயப் பானம். இதனை எடுத்துச் செல்." கொடுத்தாள். வாங்கியதும் வீட்டுக்கு ஓடினாள். அரண்மனையை வலம் வந்தாள். வீட்டில் அனைவரும் நித்திரையில் இருந்தனர். தந்தையைப் பார்த்தாள். சகோதரிகளை ஒருமுறை பார்வையிட்டாள். பாட்டியை வணங்கினாள். அங்கிருந்து நீங்கினாள். நீலக்கடலைக் கிழித்து வெளியேறினாள். மேலே மேலே கடற்பரப்புக்கு வந்தாள். நேரே இளவரசன் மாளிகைக்கு வந்துவிட்டாள். மருந்தை எடுத்துக் குடித்தாள். அது உடலெங்கும் பரவியது. கால்களிலும் கைகளிலும் எரிவுடன் வலித்தது. அப்படியே மயங்கி விட்டாள்.

சூரியன் வேடிக்கை பார்ப்பதற்காக வந்து விட்டான். கண்கள் விழித்தன. எதிரே இளவரசன் நின்றிருந்தான். "யார் நீ? எப்படி இங்கே வந்தாய்?" இளவரசன் வினாக்களைத் தொடுத்தான். அவள் நீலவிழிகளால் பார்த்தாள். ஆனால் பேசவில்லை. விழிகள்தான் பேசியிருக்க வேண்டும். கடலரசியை இளவரசன் தூக்கி விட்டான். அவளை வீட்டுக்குள் அழைத்துச் சென்றான். அவளால் நடக்க முடியவில்லை. கால்கள் கடுமையாக வலித்தன. அவளது வலியை யாரும் புரிந்து கொள்ள வில்லை. ஒருவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளித்தாள். எல்லோரது பார்வையும் அவள் நடையில் லயித்தன. அவளது நடை அற்புதமாக இருந்தது. அனைவரையும் கவர்ந்தது.

அங்கே இருப்பவர்களை விடவும் அழகாக இருந்தாள். அழகான துணிமணிகள் வழங்கப் பட்டன. அணிந்தாள். ஆனாலும் அவளால் பேசவோ பாடவோ முடியவில்லை. அது அவளுக்கு வேதனையை அளித்தது. "நீ என்னுடனேயே இருக்கலாம்." இளவரசன் அன்போடு கூறினான். குதிரை அவர்களைச் சுமந்து சென்றது. சோலைகளில் உலா வந்தார்கள். மலையடி வாரங்களில் பவனி வந்தார்கள். கால்கள் வலித்தாலும் அவள் காட்டிக் கொள்ளவில்லை. இளவரசனுக்காக எதையும் தாங்கினாள். இரவில் வெளியில் வருவாள். கால்களைக் குளிர்ந்த கடல்நீரினுள் வைப்பாள். அப்போது கடலினுள் உள்ளவர்களை நினைப்பாள்.

ஒருநாள் கால்களை நனைத்தபடி இருந்தாள். கடல் ஆரவாரமாக இருந்தது. அவளது சகோதரிகள் வந்தார்கள். கவலையோடு கதைத்தார்கள். "நீ இல்லாமல் வீடு பாழடைந்து விட்டது." என்றார்கள். தொடர்ந்து ஒவ்வொரு இரவும் ஐந்து சகோதரிகளும் வந்தார்கள். ஒருநாள் பாட்டியும் வந்தாள். கடலரசனும் வந்தார்கள். ஆனால் அவர்கள் தூரத்திலேயே நின்றார்கள். அதனால் கடலரசியோடு கதைக்க வில்லை.

இளவரசன் கடலரசியை நேசித்தான். "நீ மிகவும் அழகானவள்" என்றான். ஆனால் அவளைத் திருமணம் செய்வதாகக் கூறவில்லை. "என்னை உலகத்தில் உள்ளவர்களை விடவும் நேசிக்கிறீர்களா?" அவள் விழிகளால் சொன்னாள். அவன் கடலரசியைத் திருமணம் செய்ய வேண்டும். இல்லையேல் அவள் இறந்து விடுவாள். இது இளவரசனுக்கு எங்கே தெரியப்போகிறது.

"நான் மற்றவர்களை விடவும் உன்னை மிகவும் நேசிக்கிறேன். நீ மிகவும் அன்பானவள். நான் ஒருமுறை கப்பலில் பயணித்தேன். காற்று வீசி கப்பல் உடைந்தது. நான் கடற்கரையில் வீசப்பட்டேன். ஒரு வீடு இருந்தது. அதில் சில கன்னியர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவள் அழகானவள். அவள்தான் எனக்கு உதவினாள். என்னைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றினாள். அவளை ஒருமுறைதான் பார்த்தேன். அவளைப்போல் நீயும் அழகானவள். ஆனால் அவளை என்னால் மறக்க முடியாது.” இளவரசன் தொடர்ந்து பேசினான். “நான்தானே உங்களைக் காப்பாற்றினேன். கரையில் சேர்த்தேன். யாராவது வந்து காப்பாற்றுவார்கள் என்றிருந்தேன். இளவரசன் விரும்பும் பெண்ணை அவன் காணவில்லை. ஆனால் இளவரசனோடு இருக்கிறேன். ஒவ்வொரு நாளும் காணுகிறேன்.” மனதினில் நினைந்து கொண்டாள்.

இளவரசனுக்குத் திருமணம் செய்யவேண்டும். பெற்றோர் தீர்மானித்தனர். அயல் நாட்டு இளவரசியைத் தேர்ந்தெடுத்தார்கள். அழகான கப்பல் தயாரானது. புறப்படும் நாளும் குறிக்கப்பட்டது. இந்தச் செய்தி கடலரசியின் காதில் பட்டது. பெற்றோரின் சொல்லை இளவரசனால் தட்ட முடியவில்லை. இளவரசன் வந்தான். அவனே சொன்னான். “அயல் நாட்டு இளவரசியை திருமணம் பேசியுள்ளார்கள். நான் அவளைத் திருமணம் செய்ய மாட்டேன். அவளை நான் நேசிக்கவில்லை. அவளை எனக்குத் தெரியாது. அவள் உன்னைப் போல் இருக்கமாட்டாள். நீ அழகானவள். தாய்தந்தை சொல்லைத் தட்டமுடியாது. அவர்களது வேண்டு கோளை நிறைவேற்ற வேண்டும். ஆதலால் போய் பார்த்து வரவேண்டும். அது எனது கடமை.” இளவரசன் விளக்கமாகக் கூறினான்.

இளவரசன் பக்கத்தில் நின்றான். “கடற்பயணம் பயமாக இல்லையா”? என்றான். கடலரசி மகிழ்ந்து போனாள். கப்பலில் பயணித்தார்கள். மெல்லிய காற்று வீசியது. இளவரசன் கடலைப் பற்றிக் கூறினான். மீன்களைப் பற்றிக் கதைத்தான். கடலரசி புன்னகைத்தாள். இரவானது. அனைவரும் உறக் கத்தில் இருந்தார்கள். அவளது மனம் சந்தோசத்தில் இருந்தது. அவள் கடலைப் பார்த்தவாறு நின்றாள். கடலில் சகோதரிகள் தெரிந்தார்கள். அவர்கள் கவலையுடன் இருந்தார்கள். தான் சந்தோசமாக இருப்பதைக் கூறமுடியவில்லை.

அடுத்தநாள் காலை கப்பல் துறைமுகத்தை அடைந்தது. பெரிய வரவேற்புக் காத்திருந்தது. மக்கள் ஆரவாரித்து மகிழ்ந்தார்கள். ஒவ்வொருவராக வந்து போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகள் எங்கே? இறுதியாக அவள் வந்தாள். இளவரசன் குதூகலித்தான். சந்தோசத்தில் துள்ளினான். ''நான் தேடிய அழகி இவள்தான். இவளே என்னைக் காப்பாற்றியவள்''. ஓடோடிச் சென்று அவளது கைகளைப் பிடித்தான். அவளைக் கடலரசியிடம் அழைத்து வந்தான். ''நான் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன். அவள் இவளாக இருப்பாளா? நான் ஒருபோதும் நினைக்கவில்லை. என்னுடையவள் கிடைத்துவிட்டாள். உனக்கும் சந்தோசமாக இருக்கும். ஏனென்றால் நீ என்னை நேசிப்பவள்.'' என்றான். கடலரசி இளவரசனின் கரங்களைப் பிடித்தாள். அவனது கைகளில் முத்தமிட்டாள். அவளுக்கு இப்போது புரிந்து விட்டது.

திருமண வைபவம் நடைபெற்றது. கடலரசி அழகான உடையில் இருந்தாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. கேட்கவில்லை. தனக்கு ஆத்மா இல்லை. தான் இறக்க வேண்டும். என்பது மட்டும்தான் மனதில் நிறைந்திருந்தது. இரவாகியது. தம்பதிகள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள். எல்லோரும் மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தனர். ஆனால் கடலரசி மட்டும் துக்கத்தில் ஆழந்திருந்தாள். ''நான் வீட்டை விட்டு வெகுதூரம் சென்றேன்.என்னால் பேசமுடிய வில்லை. பாடமுடியவில்லை. நான் வலியினால் துன்பப் படுகின்றேன். இவற்றை யெல்லாம் இளவரசனுக்காகச் செய்தேன். அவனை நான் நேசித்தேன். இப்போது அவன் வேறொரு பெண்ணை மணந்துவிட்டான். நான் வெகுவிரைவில் இறந்து விடுவேன்''. இதுதான் அவளது கடைசி இரவாகும்.

கப்பலில் அனைவரும் உறங்கிவிட்டார்கள். கடலரசி கடலையே பார்த்தாள். அவளது சகோதரிகள் வந்தார்கள். அவர்களது முகங்கள் வெளிறியிருந்தன. ''உன்னைப் பற்றி மந்திரக் காரியிடம் கூறினோம். பொழுது விடிவதற்குள் இளவரசனைக் கொன்றுவிடு. நீ பழையபடி உன்னுடலைப் பெறுவாய். எங்களோடு வந்து விடு''. கூறிவிட்டுச் சென்றார்கள். கடலரசி மெல்ல எழுந்தாள். இளவரசன் உறங்கும் அறையுள் சென்றாள். இளவரசன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அவனது முகத்தை உற்றுப் பார்த்தாள். ''நான் இளவரசனை மிகவும் நேசிக்கிறேன். நான் கொல்ல மாட்டேன். நானே மரணிப்பேன்.'' வெளியே வந்தாள். கடலினுள் பாய்ந்தாள். அவளது உடல் நீராகக் கரையத் தொடங்கியது. சூரியன் ஒளிபரப்பி மேலே வந்து விட்டான். அவளால் கப்பலையும் வானத்தையும் காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தது. வானவர்கள் பாடுவதை உணர்ந்தாள். அந்தத் தேவதைகளைக் கண்டாள். அவர்களைப் போல் தனது உடலையும் கண்டாள். அவள் மேலே மேலே போவதை உணர்ந்தாள். "நீங்கள் யார்? என்னை எங்கே கொண்டு செல்கிறீர்கள்". கடலரசி கேட்டாள். "நாங்கள் வானத்தின் குழந்தைகள். தரையில் வாழும் மக்களுக்கு ஆத்மா உண்டு. எங்களுக்கு ஆத்மா இல்லை. கடலில் வாழுபவர்கள் போல் சாவதும் இல்லை. நல்லனவற்றை மற்றவர்களுக்குச் செய்வோம். அதன் மூலம் ஆத்மாவைப் பெறுவோம். தூசிபடிந்த உலகினுக்கு மழையைக் கொண்டு வருவோம். நோய்வாய்ப் பட்டோருக்கு வலியைக் குறைப்போம். துன்புறுவோருக்கு சந்தோசத்தையும் உறக்கத்தையும் கொடுப்போம்."

"இப்படி முந்நூறு வருடங்கள் செய்தால் ஆத்மாவைப் பெறலாம். பின் ஆனந்தமாக வாழ்வோம். சின்னக் கடலரசியே எங்களில் ஒருவர் நீ. கடலை விட்டு வந்தாய். நீ யார்மேலோ அன்பைச் செலுத்தினாய். அதற்காக உன்னை நீயே வருத்தினாய். துக்கத்திலும் துயரிலும் மூழ்கினாய். இனிப் பிறருக்கு மகிழ்ச்சியை கொண்டுவருவாய். உனக்கு ஆத்மா கிடைக்கும்." கடலரசி சூரியனை நோக்கிக் கைகளை நீட்டினாள். கீழே கப்பலையும் பார்த்தாள்.

கப்பலில் உள்ளவர்கள் விழித்திருந்தார்கள். இளவரசனை அவனது மனைவியோடு கண்டாள். அவர்கள் கடலரசியைத் தேடினார்கள். கடலைப் பார்த்தபடி நின்றார்கள். கடலரசி கடலோடு கலந்து விட்டதை அறிவார்களா? அவளை எவரும் காணவில்லை. அவள் மெதுவாகக் கீழிறங்கி வந்தாள். இளவரசனை முத்தமிட்டாள். அதனை இளவரசன் உணரவில்லை. அப்படியே மேலே சென்றுவிட்டாள்.

வானத்தின் குழந்தைகள் சேர்ந்து கொண்டனர். "முந்நூறு வருடங்களின் பின் ஆத்மாவை பெறலாம். அதன்பின் சொர்க்கத்தில் வாழலாம். அதை விரைந்து செய்வோம்." ஒரு சகோதரி சத்தமிட்டாள். "நாங்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் போவோம். நல்ல குழந்தையைக் காணுவோம். அதனால் ஒரு வருடவீதம் குறைக்கப்படும். அதேவேளை தீய குழந்தைகளைக் கண்டால் வருந்துவோம். ஒருவருடம் வீதம் கூட்டப்படும்." கூறியவாறு அவர்கள் பறந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரைக்கொடி

மரியாவின் குடும்பம் சிறியது. அது வறுமையில் வாடியது. கணவன் இல்லை. மரியா தனது மகனோடு வாழ்ந்தாள். அவளுக்கு எல்லாமே மகன்தான். மகனின் பெயர் நேதன். நேதனும் சிறுவன். அவனால் கடினவேலை செய்ய முடியாது. வருவாய் போதியதாக இல்லை. பசியும் பட்டினியுமாகவே காலம் தள்ளினார்கள். அன்றாட தேவைகளைச் சமாளிப்பது எப்படி?. கஸ்டமாக இருந்தது. அவர்களிடம் ஒரு பசு இருந்தது. வேறு வழியில்லை எனத்தெரிந்தது. அதனை விற்கத் தீர்மானித்தனர். மரியா மகனை அழைத்தாள். ''மகனே இந்தப் பசுவை சந்தைக்குக் கொண்டு போ. நல்ல விலைக்கு விற்று வா. அந்தப் பணத்தை முதலாக வைப்போம். பணம் சம்பாதிப்போம். நமது கஸ்டம் போகும்''. என்றாள்.

ஞாயிற்றுக் கிழமை சந்தை கலகலப்பாகும். அதிகமானோர் வருவார்கள். பசுவை நல்ல விலைக்கு விற்கலாம். மரியா மகனை துரிதப் படுத்தினாள். நேதன் பசுவைக் கட்டினான். அதன் கயிற்றைக் கையிலெடுத்தான். சந்தையை நோக்கி நடந்தான். பசு பின்னால் நடந்தது. அவன் முன்னால் ஒருவர் வந்து நின்றார். ''தம்பி இந்தப் பசு யாருடையது?. எங்கே கொண்டு போகிறாய்.''? என்றார். ''ஐயா இது எங்களது பசு. இதனைச் சந்தையில் விற்கப்போகிறேன்.'' என்றான். ''அப்படியா? இந்தப் பசுவை நான் வாங்குகிறேன்''. என்றார். நேதனுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. சந்தைக்கு நடக்க வேண்டிய அவசியமில்லை. சம்மதித்தான்.

அவரிடம் பசுவை ஒப்படைத்தான். அவர் பசுவைப் பெற்றுக் கொண்டார். தனது சட்டைப்பைக்குள் கையை விட்டார். ஒரு பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தார். ''தம்பி இதனுள் அவரை விதைகள் உண்டு. வீட்டுக்குக் கொண்டு போ. அவற்றை நட்டுப்பார். பணத்தை விடவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதியானது. பொன்பொன்னாய் விளையும். உங்கள் வறுமை மறைந்துவிடும்." என்றார். நேதனுக்குச் சந்தோசம். அதனை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினான். மகனைக் கண்டதும் மரியா மகிழ்ந்தாள். "எங்கே பணம்."? என்றாள். "இதோ" என்று பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தான். மரியா அதனை விரித்துப் பார்த்தாள். அதனுள் அவரை விதைகள் சிரித்தன. மரியாவின் கண்கள் சிவந்தன. கூடவே கண்ணீர் துளிகள் பொலபொலத்தன.

தனது மகனின் செயல் அவளை வருத்தியது. "நீயும் உன் அவரை விதையும்." சத்தமிட்டாள். அதனைக் கோபத்தோடு வெளியில் வீசிவிட்டாள். அப்படியே போய் படுத்துக் கொண்டாள். நேதனுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. இரவாகிவிட்டது. இருவரும் பேசிக்கொள்ள வில்லை. அவனும் கவலையில் சுருண்டு படுத்தான். அப்படியே உறங்கி விட்டான். அன்றிரவு நல்ல மழை பெய்தது. விடிந்து விட்டது. மரியா இன்னும் எழவில்லை. நேதன் வழமைக்கு மாறாக எழுந்தான். அவனது அறை வெளிச்சமாக இல்லை. வெளியில் வந்தான். அவனுக்கு ஒரு புதுமை காத்திருந்தது.

முதல் நாள் தனது தாய் வீசிய விதைகளைக் காணவில்லை. பதிலாக அவரைக் கொடி நின்றது. அது வான்முட்டப் படர்ந்திருந்தது. அதனை உற்றுப் பார்த்தான். தடித்த தண்டுகள் பின்னிப் படர்ந்திருந்தன. இதில் ஏறிப்பார்தால் என்ன.? மனம் ஆவல் கொண்டது. ஏறினான். எதுவரை கொடி செல்கிறது.? துணிந்து ஏறினான். ஏறிக் கொண்டே இருந்தான். அவரையின் நுனி முடிவடைந்தது.அது எங்கோ கொண்டுபோய் விட்டது. முடிவில் ஒரு வெளி தெரிந்தது. வெளியில் வந்தான். வரண்ட நிலப்பரப்புக் காணப்பட்டது. கரடுமுரடான தரையில் ஒரு வீதி. போய்ப் பார்க்க எண்ணினான். நடந்தான். அவன் களைத்து விட்டான். பசியெடுத்தது. பெரிய வீடு முன்னால் தெரிந்தது. உள்ளே செல்ல நினைத்தான். கதவைத் தட்டினான். ஒரு பெண் பயத்தோடு கதவைத் திறந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘அம்மா பசிக்குது. சாப்பிட ஏதாவது தாருங்கள்’’. என்றான்.‘‘இங்கே எப்படி வந்தாய். விரைவாக ஓடிவிடு’’ அவசரப் படுத்தினாள். ‘‘அம்மா என்னால் நிற்கவும் முடியாது. ஒரு அடிகூட எடுத்து வைக்கவும் முடியாது.’’ என்றான். அவனை ஏறெடுத்துப் பார்த்தாள். அவளது மனம் இரங்கியது.‘‘சரி சாப்பிட்டதும் ஓடிவிடு. என்ன. சரியா’’.? என்றாள். உள்ளே சென்றாள். உணவு கொண்டு வந்து கொடுத்தாள். ‘‘ஏய் .. தம்பி கெதியாகச் சாப்பிடு. அவர் வந்தால் நீ தொலைந்தாய். அதோடு நானும் தொலைந்தேன். சாப்பிட்டதும் ஓடிவிடு. என்ன விளங்குதா’’? அவள் விளக்கினாள். அவன் தலையை ஆட்டினான். சாப்பிட்டான். யாரோ வரும் சத்தம் கேட்டது. அவள் பதறி ஓடிவந்தாள்.

‘‘தம்பி .. கெதியாக வா. இதற்குள் ஒளிந்து கொள்’’. அவனை இழுத்தாள். அலுமாரியின் பின்புறம் ஒளித்து விட்டாள். வேலை செய்வதுபோல் பாசாங்கு செய்தாள். அவளது கணவன் வந்தான். அவனது உடல் பருமனாக இருந்தது. அவன் பூதம்போல் இருந்தான். அவனது மூக்கு மோப்பம் பிடித்தது. விரிந்து மடிந்தது. சுற்றிவரப் பார்த்தான்.

‘‘ஆண்சிணி மணக்குது பெண்சிணி மணக்குது.
ஆரோ மனிதனின் இரத்தம் மணக்குது.
ஊனைப் பிழிந்து எலும்பை உருக்கி உறிஞ்சிக் குடிக்க ஆசை எனக்கு.’’

பாடிக் கொண்டே வந்தான். அவன் உடலை வளைத்தான். மணம்பிடித்தவாறு நடந்தான். ‘‘ஏய் ஏதோ வித்தியாசமாக மணக்கிறது. என்னது’’? பூதன் சத்தமிட்டவாறே வந்தான். ‘‘விசர் உனக்கு. போசாமல் உன் வேலையைப் பார்’’. அவள் பதிலளித்தாள். ‘‘சரி. சாப்பாடு போடு.’’ என்றான். மேசையில் சாப்பாடு வைக்கப் பட்டது. அவனுக்குப் பசி அதிகம். விரைவில் சாப்பிட்டு முடித்தான். அவள் மேசையைத் துடைத்தாள். ‘‘போ. போய் எனது கோழியைக் கொண்டு வா’’. என்றான். அவள் கோழியைக் கொண்டு வந்தாள். மேசைமேல் வைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழியைத் தடவினான். ''எனதருமைக் கோழியே! என் செல்லமல்லவா? முட்டை போடு.'' கத்தினான். அது முட்டை இட்டது. நேதன் எட்டிப்பார்த்தான். அது தங்க முட்டை. பூதன் ஒவ்வொரு தடவையும் சத்தமிட்டான். கோழி தங்க முட்டையை இட்டது. சத்தமிட்டுச் சிரித்தான். வீடே அதிர்ந்தது. முட்டைகளை எண்ணினான். பத்திரமாக ஒரு பையினுள் வைத்தான். மூலையில் கொண்டுபோய் வைத்தான். அப்படியே உறங்கி விட்டான். சற்று நேரத்தில் குறட்டை ஒலி கேட்டது. நேதன் மெதுவாக வெளியில் வந்தான். கோழியின் பக்கம் சென்றான். கோழியைத் தடவினான். அது சத்தமிடாது இருந்தது. அதனை மெதுவாகப் பிடித்தான். மெல்ல வெளியேறினான். ஒரே ஓட்டம். அவரைக் கொடி தயாராய்க் காத்திருந்தது. அவரைக் கொடியைப் பிடித்தான். மளமளவென்று கீழ் நோக்கி இறங்கினான்.

''அம்மா!'' சத்தமிட்டவாறு வீட்டினுள் நுழைந்தான். மரியா எழுந்து வந்தாள். ''அம்மா இங்கே பாருங்கள். இந்தக் கோழி தங்க முட்டையிடும்.'' அம்மாவிடம் கோழியைக் கொடுத்தான். ''மகனே! இது நமது கோழி. தங்கமுட்டையிடும். ஒரு காலத்தில் நாங்கள் சந்தோசமாக வாழ்ந்தோம். ஒரு நாள் ஒரு அரக்கன் வந்தான். அவன் பெயர் பூதன். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான். நீ அதனை மீட்டெடுத்து வந்தாய். இனி நமக்குத் துன்பம் இல்லை.'' ஆனந்தக் கண்ணீரோடு கூறினாள். நேதனை மரியா வாழ்த்தினாள். அங்கு சந்தோசம் புகுந்து கொண்டது.

நேதன் அவரைக் கொடியைப் பார்த்தான். மனதால் நன்றி கூறினான். நாட்கள் நகர்ந்தன. மீண்டும் அவனை ஆவல் தூண்டியது. அவரைக் கொடியில் விரைந்து ஏறினான். பழைய இடத்தில் விட்டது. அதே வழியால் சென்றான். வீட்டின் கதவைத் தட்டினான். அந்தப் பெண் கதவைத் திறந்தாள். நேதன் முன்னால் நின்றான். நேதன்மேல் அவளுக்கு இரக்கம் உண்டானது. நேதன் உணவு கேட்டான். அவள் உணவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாள். பூதன் உள்ளே வரும் சத்தம் கேட்டது. பூதன் ஆரவாரித்து வந்தான். அதே பல்லவியைப் பாடியபடியே பார்த்தான். நேதனை அந்தப் பெண் அலுமாரியின் பின்னால் தள்ளி விட்டாள். நேதன் ஒளிந்து கொண்டான். அவனைப் பயம் கௌவிக்கொண்டது. பூதனது முகம் பயங்கரமாக இருந்தது. முரட்டுத் தனமாகக் கதைத்தான். உணவு மேசைமேல் இருந்தது. உணவைக் கொடுத்தாள். சாப்பிட்டான். ''ஏய் அந்தப் பைகளைக் கொண்டு வா'' என்றான். அவள் கொண்டு வந்து வைத்தாள். பல பைகள் இருந்தன. ஒவ்வொரு பையாக எடுத்தான். மேசையின் மேல் கொட்டினான். அவ்வளவும் பணம். ஒவ்வொரு பையாகக் கொட்டி எண்ணினான். பழையபடி பையினுள் போட்டான். கட்டி வைத்தான்.

அவனுக்கு உறக்கம் வந்தது. போய் படுத்துக் கொண்டான். சற்று நேரத்தில் குறட்டை ஒலி கேட்டது. மெதுவாக நேதன் வெளியில் வந்தான். பணப்பைகளை எடுத்தான். தாமதிக்காமல் வெளியில் விரைந்தான். அவரையின் நுனி தெரியும்வரை ஓடினான். பைகளைக் கைகளில் பிடித்தபடியே கீழிறங்கினான். அம்மாவிடம் ஓடினான். அவளது கைகளில் கொடுத்தான். ''மகனே! இவை அனைத்தும் நம்முடையவை. இந்தப் பைகள் உனது அப்பாவினுடையவை. அவர் இந்தப் பைகளில் பணத்தைச் சேர்த்தார். அவற்றை அந்தப் பூதன் சூறையாடினான். அவற்றை மீட்டு வந்தாய். நீ கெட்டிக்காரன்.'' மரியா அவனை அன்போடு தழுவினாள். அம்மாவின் பாசத்தில் நேதன் மூழ்கினான்.

சிலநாட்கள் கழிந்தன. நேதன் அவரைக் கொடியின் பக்கம் சென்றான். இன்னுமொரு முறை சென்று பார்த்தாலென்ன? அவனது மனம் துணிந்தது. அவரைக் கொடியினைப் பற்றினான். அவன் கால்கள் விரைந்து செயற்பட்டன. பழைய இடத்துக்கு வந்து விட்டான். அதே வீடு தெரிந்தது. அந்த வீட்டுக் கதவைத் தட்டினான். கதவு திறபட்டது. உணவு கேட்டான். கிடைத்தது. உண்ணும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதன் வந்தான். நேதன் அலுமாரியின் பின்புறம் ஒளிந்து கொண்டான். பூதனின் வாய் பழைய பல்லவியை முணுமுணுத்தது. பாடியபடியே வீட்டினுள் நுழைந்தான். அவன் மனைவி புறுபுறுத்தாள். உணவை மேசைமேல் வைத்தாள். உண்டான். வீட்டில் இசைக்கருவி இருந்தது. அதனைக் கேட்டான். அவள் கொடுத்தாள். அதனை அவன் வாசித்தான். அற்புதமான இசை பிறந்தது. இசைக்கு ஏற்றவாறு பாடினான். கரடுமுரடான குரல். ஆனால் இசைக்கருவியின் ஒலி இனித்தது. அந்த இசையில் பூதன் உறங்கி விட்டான். குறட்டை ஒலி எழுந்தது.

மெதுவாக நேதன் வெளியில் வந்தான். இசைக்கருவியை எடுத்தான். விரைந்து ஓடினான். ஆனால் அந்த இசைக்கருவி ஒலியெழுப்பியது. ''எஜமான்''எஜமான்.. திருடன்''திருடன்'' என்று சத்தமிட்டது. பூதன் திடுக்கிட்டு எழுந்தான். ''திருடன்..திருடன்..பிடியுங்கள்.'' சத்தமிட்டவாறே துரத்தினான். நேதன் தரிக்காமல் விரைந்து ஓடினான். களைத்து விட்டான். அவனை அறியாமலேயே அவனது கால்கள் விரைந்தன. அவரைக்கொடியின் பக்கம் வந்து விட்டான். அதனைப் பிடித்து மளமளவென்று இறங்கினான். நிலத்தில் அவன் கால்கள் பட்டன. மேலே அண்ணார்ந்து பார்த்தான். அப்போதுதான் பூதன் அவரைக் கொடியைப் பற்றிப் பிடித்தான். அவன் இறங்க ஆயத்தமானான். அம்மாவை அழைத்தான். மரியா சத்தம் கேட்டு வெளியில் ஓடி வந்தாள். ''அம்மா கோடரியைக் கொண்டு வாருங்கள்''. கட்டளை இட்டான்.

மரியா கோடரியைக் கொண்டு வந்தாள். நேதன் பாய்ந்து வந்தான். அவரைக் கொடியின் அடித்தண்டுகளைத் தறித்தான். கொடி வெட்டுண்டது. பூதன் அதிகம் பாரமுள்ளவன். அவனது பாரத்தைக் கொடியால் தாங்க முடியவில்லை. கொடி விரைவாகச் சரிந்தது. பூதன் பயங்கர அலறலோடு வீழ்ந்தான். நிலம் அதிர்ந்தது. பூதனுக்கு அதுதான் முடிவாயிற்று. நேதனும் மரியாவும் சந்தோசமாக வாழ்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்குட்டி

மண்டூர் அழகிய கிராமம். மட்டக்களப்பு வாவி மண்டூரைத் தொட்டுச் செல்லும். குளிர்ந்த காற்று வாவியைத் தழுவும். மரஞ்செடிகளை அசைத்து வீசும். வாகைமரங்கள் வெயிலை வடித்து நிழல் கொடுக்கும். வம்மி மரங்கள் பூத்து மணம் பரப்பும். அந்த வளாகத்தில் முருகன் கோயில் இருக்கிறது. அது அற்புதமான கோயில். மிகவும் பிரசித்தி பெற்றது. பெரும் வரலாற்றைக் கொண்டது. விடுமுறை நாட்களில் சிறுவர்கள் ஒன்று கூடுவார்கள். கந்தவனம் கெட்டிக்காரச் சிறுவன். அவன்தான் சிறுவர்களின் தலைவன். நிழலில் மகிழ்ந்து விளையாடுவார்கள். மரத்தில் ஏறி ஒளிந்து விளையாடுவார்கள். வாவியில் நீச்சலடித்துக் கூச்சலிடுவார்கள். மதியம் மண்டூர் கந்தன் கோவிலில் பூசை நடக்கும். பிரசாதம் கிடைக்கும். அவற்றைப் பெற்று உண்பார்கள். அதில் உள்ள சுவையை எண்ணி மகிழ்வார்கள். ஒரே கும்மாளமாக இருக்கும். பெரியவர்களும் வாகைமர நிழலை நாடி வருவார்கள். சிறுவர்களின் கும்மாளம் அவர்களையும் அசத்தும்.

கந்தவனம் தனது பாட்டியோடு வாழ்ந்து வந்தான். அவனது வாழ்க்கை துயரமானது. பசியும் பட்டினியும் அவனை வாட்டின. பாட்டிதான் அவனுக்குத் துணையாக இருந்தார். படிப்பில் கெட்டிக்காரன். புத்திசாலி. பாடப்புத்தகங்களோடு பத்திரிகைகளையும் படிப்பான். ஒருநாள் பாட்டியும் போய்விட்டார். அவனுக்குத் துணை யாருமில்லை. மண்டூரில் இருந்து பயனில்லை. மட்டக்களப்பு பெரிய நகரம். அங்கே போய் பிழைக்க எண்ணினான். நண்பர்களிடம் தனது திட்டத்தைக் கூறினான். நண்பர்கள் கவலை அடைந்தார்கள். தனது எண்ணத்தை நிறைவேற்றப் புறப்பட்டான். மண்டூர் கந்தனிடம் முறையிட்டான். கால்போன போக்கில் நடந்தான்.

கிழக்கு வானில் வண்ணக்காட்சிகள். பறவைகளின் இன்னிசைக் கோலங்கள். வாவிக் கரைக்கு வந்தான். மீன்பிடிப் படகுகள் அணிவகுத்து நின்றன. வாவியில் நீராவி பனிப்படலமாய் விரிந்திருந்தது. தூரத்தே மூங்கிலாற்று நீர் கலக்கும் காட்சி அற்புதமாய் இருந்தது. சூரியக்கதிர்கள் பனிப்படலத்தை ஊடறுத்துச் சென்றன. கவலைகளை மறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை ஜாலவித்தையைக் காட்டியது. அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். ‘‘தம்பி நீ யார்? ஏன் இங்கே நிற்கிறாய்’’? ஒரு பெரியவர் கேட்டார். ‘‘எப்படி இவரிடம் சொல்வது? சொன்னால் உதவி ஏதும் செய்வாரா’’.? வினாக்கள் மனதில் தோன்றின. ‘‘தம்பி பயப்படாமல் சொல்’’ என்றார். அவன் தனது கதையைச் சொன்னான். அவருக்கு இரக்கம் பிறந்தது.

‘‘தம்பி, எனது இருப்பிடம் மட்டக்களப்பு. மாலையில் இந்த வாவியில் மீன்பிடிப்பேன். தோணியிலேதான் வருவேன். விடியுமுன் மட்டக்களப்பு போய்விடுவேன். இன்றைக்கு கொஞ்சம் பிந்திவிட்டது. இப்போது மட்டக்களப்பு போகிறேன். அங்கே ஒரு பணக்காரர் இருக்கிறார். நான் அவரது வீட்டைக் காட்டுவேன். அவரிடம் சேர்ந்தால் நீ பிழைத்துக் கொள்வாய். வருகிறாயா’’? என்றார். கந்தவனத்துக்குச் சந்தோசம். ‘‘சரி வருகிறேன்.’’ என்றான். தோணியில் ஏறும்படி கூறினார். அவன் ஏறிக்கொண்டான். தோணி மட்டக்களப்பை நோக்கி விரைந்தது. தோணியில் இருந்தவாறே அவர் மீனையும் பிடித்தார். அவன் சவளை எடுத்து வலித்தான். அதிலே ஒரு சந்தோசம் பிறந்தது. தோணி தண்ணீரைக் கிழித்துக் கொண்டு பறந்தது.

‘‘நீயும் மீன் பிடித்துப் பார்க்கிறாயா? இப்படி தூண்டிலை எறியவேணும்’’ என்று காட்டினார். அவன் அப்படியே செய்தான். அவன் எறிந்ததும் மீன் தூண்டிலைக் கெளவியது. இழுத்தான். மீன் துள்ளிக் கொண்டு தோணிக்குள் விழுந்தது. அவனை உற்சாகப் படுத்தினார். மட்டக்களப்பை அடையும் போது பல மீன்களைப் பிடித்துக் கொடுத்தான். அவனது முகத்தில் பசி தெரிந்தது. ‘‘தம்பி இதைச் சாப்பிடு.’’ அவர் தன்னிடம் இருந்த பாணை வெட்டி அரைவாசியைக் கொடுத்தார். உண்டான். தோணிக்குள் மண்ணெண்ணை அடுப்பு இருப்பதைக் கண்டான். அடுப்பில் பானையிருப்பதையும் பார்த்தான். பானையிலிருந்து தேநீரை ஊற்றிக் கொடுத்தார். குடித்தான். நன்றி கூறினான். வாவியிலிருந்து நீர் கடலுக்குச் செல்லும் நேரம். தோணி விரைந்து சென்றது. ‘‘தம்பி இதை வைத்துக் கொள். உனக்குத் தேவைப்படும்’’. பார்த்தான். ஐந்து ரூபா அவனை முழுசிப் பார்த்தது. நன்றியோடு பெற்றுக் கொண்டான். வற்றுப் பெருக்கைப் பற்றிச் சொன்னார். பயணம் சுவாரஸ்யமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது.
மட்டக்களப்பு நகர் வந்து விட்டது. ''அங்கே பார்''. வாவியோரமாகச் செல்லும் வீதியைக் காட்டினார். ''அந்த வீதியில் ஐந்தாவது வீடு தெரிகிறதல்லவா? அதனை நினைவில் வைத்திரு. இன்று பின்னேரம் நீ அங்கு போய் அந்தப் பெரியவரைப் பார். சரியா. இப்பொழுது அந்தப் பெரியவர் இருக்கமாட்டார். நீ இவ்விடத்தில் இறங்கு. தேவைப் பட்டால் சந்தைப் பக்கம் மத்தியானத்தில் வா. நான் இன்னும் தூரத்துக்குப் போகவேணும்.'' சொல்லி இறக்கி விட்டார். அந்த வீட்டை நினைவில் இருத்தினான்.தோணி போய்விட்டது. எங்கே போவது.? கால் போன போக்கில் நடந்தான். மட்டக்களப்பு நகரைச் சற்றிப் பார்த்தால் என்ன? பார்த்து விடலாம். மனம் பேசியது. நடந்தான். எத்தனை கட்டிடங்கள். பலவிதமான வாகனங்கள். தெருக்களில் சுற்றி வந்தான். எவ்வளவு அழகான நகரம்? இங்கு கொஞ்ச காலம் வாழ்ந்தால் என்ன? யோசித்தவாறே ஒரு கடையின் முன்னால் நின்றான். அவனுக்குக் களைப்பாக இருந்தது. கடையில் ஏதாவது சாப்பிடலாம். பல வகையான உணவுப் பண்டங்கள் இருந்தன. என்னிடம் உள்ளது ஐந்து ரூபா மட்டுந்தன். இடியப்பம் சாப்பிட்டான் மூன்று ரூபாய் முடிந்து விட்டது. புறப்பட்டான். பகல் பொழுது போய் இருட்டியது.

''எப்படி அந்த வீதிக்குப் போவது? மறந்து விட்டேனே. சரி. அந்த வாவிக்கரைக்குப் போனால் கண்டு பிடிக்கலாம்''. வந்து விட்டான். ''எங்கே அந்த ஐந்தாவது வீடு. காணவில்லையே''. தேடினான். முதல் பார்த்த அடையாளங்களைக் காணவில்லை. வந்த வழியில் திரும்பி நடந்தான். சுற்றிச் சுற்றி வந்தான். தான் இறங்கிய அதே இடத்துக்கு வந்து விட்டான். இருட்டி விட்டது. களைத்தும் விட்டான். தனக்குத் தானே நண்பனாகக் கதைத்துக் கொண்டான். எப்படி உள்ளே போவது. யாரையும் காணவில்லையே. கூப்பிட்டான். யாரும் வரவில்லை. வாசலோரமாக இருந்த திண்ணையில் குந்தியிருந்தான். களைப்பு அவனை நித்திரைக்கு அழைத்தது. அப்படியே உறங்கிவிட்டான்.

அந்த வீட்டு வேலைக்காரி வெளியே போய் வந்தாள். வாசலில் படுத்திருப்பது யார்?. ''ஏய் யாரடா நீ. எங்கே வந்தாய். உனக்கு இந்த இடந்தானா கிடைத்தது. எழும்படா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும்பி ஓடு. ஐயா வந்தால் எனது சீட்டைக் கிழித்துப் போடுவார்". சத்தமிட்டாள். அவன் எழுந்திருக்க வில்லை. ''ஐயா வாறநேரம். சனியன். இங்கே வந்து படுத்திருக்கு'' அவள் அவனது தலையில் ஒரு குட்டு விட்டாள். அவனது தூக்கம் கலைந்து பறந்தது. அவன் திடுக்குற்று விழித்தான்.'' என்னடா பார்க்கிறாய்.? ஐயா வாறநேரம். ஓடு கெதியாய். ''ஐயாவைப் பார்க்கவேணும்.'' பரிதாபமாக் கேட்டான். ''ஐயாவைப் பார்க்க முடியாது. கெதியாய் இங்கிருந்து ஓடு''. சத்தமிட்டாள். ''என்ன இங்கே சத்தம். யாரிந்தப் பையன்.'' கூறியவாறே ஒரு பெரியவர் வந்தார். ''யாரென்று தெரியாதையா. நமது வாசற்படியில் நித்திரை கொண்டான். எழுப்பி கெதியாக ஓடு. என்று சொன்னேன்''. ''அப்படியா? தம்பி நீ யார்? எங்கு வந்தாய்''? அன்போடு கேட்டார் ''ஐயா நான் உங்களைத் தேடித்தான் வந்தேன். எனக்குத் துணை யாருமில்லை.'' தனது கதையைக் கூறினான். ''சரி உள்ளே வா''. அழைத்துச் சென்றார். ''அம்மணி இந்தப் பையன் நம்மோடு இருக்கட்டும். உனக்கு உதவிக்கு ஆள்தேவை என்று சொன்னாய். அல்லவா.? இவன் உனக்குத் துணையாய் இருக்கட்டும். நமது களஞ்சிய அறையில் இடம் கொடு''. அவருக்கு நன்றி சொன்னான். ''தம்பி நல்ல பிள்ளையாக இருக்க வேணும். நல்ல பெயரைச் சம்பாதிக்க வேணும். சொன்ன வேலைகளைச் சரியாகச் செய்யவேணும். சரியா''? அவர் சொல்வதைக் கைகட்டி அமைதியாக் கேட்டான். ''சரி. அம்மணியோடு போ''. சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

''டேய் பொடியா! ஒழுங்கா வேலை செய்யவேணும். வா என்னோடு.'' நடந்தாள். பின்னால் கந்தவனம் போனான். ''டேய் சாப்பிட்டாயா''? ''இல்லை அம்மா'' என்றான். கேட்டதும் அவள் ஆடிப்போனாள். ''அம்மாவா..'' அவளுக்கு இரக்கம் உண்டாயிற்று. அவள் பார்வைக்குத்தான் அப்படி. ஆனால் உண்மையில் இரக்கமுள்ளவள். ''வா.. இந்தா சாப்பிடு''. உணவு கொடுத்தாள். நன்றி கூறிச் சாப்பிட்டான். ''அம்மணி'' பெரியவர் கூப்பிட்டார். ''ஐயா'' குரல் கொடுத்தாள். ''அந்தப்பையன் சாப்பிட்டானா.? அவனுக்கு படுக்க இடம் ஒதுக்கிக் கொடு.'' பெரியவர் கூறினார். ''ஓம் ஐயா.'' அதே பதிலைக் கூறினாள்.''தம்பி பின்னால் வா.'' என்றாள். போனான். ''இதுதான் உனது அறை. அந்தக் கட்டிலில் படுக்கலாம்.'' குளியல் அறை, கழிவறை அனைத்தையும் காட்டினாள். ''தேவையென்றால் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைக் கூப்பிடு. களைச்சுப் போய்விட்டாய் தூங்கு'' என்றாள். பின் தனது வேலையில் மூழ்கினாள். கட்டிலில் படுத்தான்.தூங்கி விட்டான்.

நல்ல உறக்கத்தில் இருந்தான். அவன்மேல் எலிகள் பாய்ந்து விளையாடின. விளக்கை ஏற்றினான். எலிகளை விரட்டினான். அவை பாய்ந்து ஓடின. தூக்கம் கெட்டது. விளக்கை அணைத்துத் தூங்கினான். பாய்ந்து எலிகள் வந்தன. அவற்றின் தொல்லை தாங்க முடியவில்லை. எலிகளை விரட்டினான். அவை ஓடின. விளக்கை அணைத்ததும் தொல்லை கொடுத்தன. அவனால் தாங்க முடியவில்லை. நித்திரை குழம்பி அவன் கண்கள் சிவந்தன. எலிகளின் தொல்லை தொடர்ந்த வண்ணமே இருந்தது. என்ன செய்வது? அம்மணியிடம் ஆலோசனை கேட்டான். ''இந்த வீட்டில் எலித்தொல்லைதான் பெரிய தொல்லை. ஐயாவுக்கும் தொல்லைதான். எலியின் தொல்லை தாங்கமுடியாது'' என்றாள். இதற்கு ஏதும் வழியில்லையா? கேட்டான். ''இதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு''. என்றாள். ''என்ன வழி''? என்றான். ''பூனை வளர்த்தால் எலியின் தொல்லை நீங்கும்''. குறி சொல்பவள்போல் சொன்னாள். பூனைக்கு எங்கே போவான்.

நாட்கள் நகர்ந்தன. கந்தவனம் பெரியவரின் நம்பிக்கையைப் பெற்று விட்டான். அதிகாலையில் எழுந்து விடுவான். வீட்டு வேலைகளைச் சொல்லாமலே செய்வான். வீடு பளிச்சென்று இருக்கும். பூமரங்களுக்குத் தண்ணீர் ஊற்றுவான். வகைவகையான பூக்கன்றுகளை நடுவான். அவை அழகான பூக்களோடு சிரித்தன. பெரியவரின் வீட்டுக்குப் பலர் வருவார்கள். பூக்களைப் பார்த்து மகிழ்வார்கள். வரவேற்பறையைச் சுத்தமாக வைத்திருப்பான். அவரது மகள் பூமணி அழகானவள். அவள் சிரித்தால் பூக்கள் பூப்பது போல் இருக்கும். பூமணியின் சிரிப்பு அவனைக் கவர்ந்தது. அவள் விரும்பியவற்றைச் செய்து கொடுத்தான். காலையில் அவள் எழுந்து குளிப்பாள். குளித்துவிட்டுப் பூக்களைப் பறிப்பாள். மல்லிகைப் பூ அவளுக்கு விருப்பமானது. பூமாலை தொடுப்பாள். சாமி படத்துக்குச் சூட்டுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் குளித்துவிட்டு வந்தாள். வாசலில் மல்லிகைப் பூமாலையைக் கண்டாள். அப்படியே மாலையை எடுத்துச் சாமியின் படத்தில் வைத்தாள். சாமி கும்பிட்டு முடிந்தது. வெளியில் வந்தாள். கந்தவனத்தை அழைத்தாள். நன்றி கூறினாள். ஒவ்வொரு நாளும் மாலை கட்டிக் கொடுப்பான். பூமணி அன்பாக இருந்தாள். வீட்டின் பின்புறம் காய்கறித் தோட்டம் வைத்தான். காய்கனி மரங்கள் நிறைந்திருந்தன. பழங்களைத் தோட்டத்தில் இருந்தே பெற்றார்கள். மரக்கறி வகைகள் தோட்டத்திலேயே கிடைத்தன. பெரியவர் அவன் செயலில் மகிழ்ந்து போனார்.

ஒருநாள் பொருட்கள் வாங்க சந்தைக்குப் போனான். பொருட்களை வாங்கினான். ஒரு கருவாட்டுக் கடையில் பூனைக்குட்டியைக் கண்டான். அந்தக்கடைக்காரியிடம் சென்றான். ''அம்மா அந்தப் பூனைக்குட்டியை எனக்குத் தருவீர்களா?'' என்றான். ''தம்பி. நான் அருமையாக வளர்க்கும் பூனைக்குட்டி. இதற்கு நீ ஐந்து ரூபாய் தந்தால் உனக்காகத் தருவேன்'' என்றாள். கந்தவனத்துக்குச் சந்தோசம் பொங்கியது. ''எனக்குத் தாருங்கள். மிகவும் நன்றி அம்மா''. ஐந்து ரூபாயைக் கொடுத்துப் பூனைக்குட்டியைப் பெற்றுக் கொண்டான். பெரியதொரு அதிர்ஸ்ட்டம் கிடைத்தது போல் சந்தோசப் பட்டான். பூனைக்குட்டியை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனான்.

பூனைக்குட்டியைக் களஞ்சிய அறையில் விட்டான். தனது கட்டிலில் அதற்கு இடம் ஒதுக்கிக் கொடுத்தான். அதற்கு உணவை ஊட்டினான். தனது படுக்கையில் விட்டான். உறங்கினான். விளக்கை அணைத்ததும் எலிகள் பாய்ந்து வந்தன. பூனை விளையாடத் தொடங்கியது. எலிகள் வேட்டையாடப் பட்டன. எலித்தொல்லை களஞ்சிய அறையில் நீங்கியது. கந்தவனம் நிம்மதியடைந்தான். பெரியவருக்குத் தெரியாமல் அவரது அறையிலும் பூனையை விட்டான். பூமணி அறையிலும் பூனை புகுந்து விளையாடியது. வீட்டில் எலித்தொல்லை நீங்கியது. அம்மணி சந்தோசப் பட்டாள். பூனைக்குட்டி கந்தவனத்தைச் சுற்றித் திரியும். அவன் செல்லும் இடமெல்லாம் செல்லும்.

ஒருநாள் பெரியவர் ஒரு தனவந்தரை அழைத்திருந்தார். அவர் பலநாடுகளுக்கும் செல்பவர். அவரிடம் கப்பல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதில் பொருட்களை ஏற்றிச் செல்வார். மக்கள் தங்கள் பொருட்களை அவரிடம் கொடுப்பார்கள். அவர் வெளிநாடுகளில் விற்பார். வந்ததும் பணத்தை உரியவர்களிடம் கொடுப்பார். பெரியவரும் பொருட்களைக் கொடுப்பார். அவர் விற்று வந்து பணத்தைக் கொடுப்பார். விருந்துபசாரம் நடந்தது. இம்முறை பொருட்களைக் கொடுத்தார். வீட்டில் உள்ளவர்கள் ஒவ்வொரு பரிசுப் பொருள் கொடுப்பது வழக்கம். எல்லாரும் கொடுத்தார்கள். கந்தவனத்தை அவர் பார்த்தார். அவனிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. "கந்தவனம் அந்தப் பூனைக்குட்டியைக் கொடு" பூமணி கூறினாள். அவனுக்கு மனமில்லை. பூமணி கூறிவிட்டாள். அவளுக்காக எதனையும் இழக்கத் தயாரானான். மெதுவாகப் பூனைக் குட்டியைத் தூக்கினான். அதனை மெதுவாகத் தடவிக் கொடுத்தான். தனவந்தரின் கைகளில் கொடுத்தான். ஒருவகைப் புன்னகையோடு அவர் பெற்றுக் கொண்டார். விருந்து முடிந்தது. பொருட்களோடு பூனைக்குட்டியும் போய்விட்டது.கந்தவனம் கவலையில் ஆழ்ந்து விட்டான். என்ன செய்வது? அருமையாக வளர்த்த பூனைக் குட்டியல்லவா?.

தனவந்தரின் கப்பல் ஒரு துறைமுகத்தில் நங்கூரமிட்டது. அது திருகோணமலைக்குத் தெற்காக உள்ள புறாமலைத் தீவு. அது அழகான சிறிய நாடு. மலையும் மலைசார்ந்த நிலமும் உள்ள வளமான நாடு. அந்த நாட்டை அழகிரி மன்னன் ஆண்டு வந்தான். அந்த நாட்டுக்குப் பலநாட்டுக் கப்பல்களும் வரும். கடற்கரையில் பெரிய சந்தை கூடும். கப்பல்களில் ஏற்றி இறக்கல் நடைபெறும். அங்கு வரும் தனவந்தர்களை அரசன் அழகிரி வரவேற்று விருந்தளிப்பது வழக்கம். தனவந்தருக்குத் தனியான அழைப்பு விடுக்கப்பட்டது. அன்று மாலை விருந்துக்குச் செல்ல ஆயத்தமானார்கள். தனவந்தரும் அவரது கூட்டாளிகளும் சென்றனர். அரசன் அன்போடு வரவேற்றான். மேசைகள் நிறைந்து உணவுவகைகள் இருந்தன. விருந்துபசாரம் தொடங்கியது.

சந்தோசம் அங்கே குடிகொண்டிருந்தது. அவை யாவும் அரைநொடியில் சிதைந்தன. பாய்ந்து வந்த எலிகள் யாவற்றையும் விளையாடின. காவலாளிகள் தடியெடுத்துத் துரத்தினார்கள். அவை பாய்ந்து ஒளிந்து விளையாடின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனவந்தர் தனது கூட்டாளியின் காதுகளில் இரகசியம் பேசினார். "இதோ ஒரு நொடியில் வருகிறேன்". என்று வெளியில் சென்றார். போன வீச்சில் வந்தார். எடுத்து வந்த பூனைக்குட்டியைத் தனவந்தரிடம் கொடுத்தார். தனவந்தர் பூனைக்குட்டியை விட்டார். பூனை விளையாடத் தொடங்கியது. எலிகள் வேட்டையாடப்பட்டு வீழ்ந்தன. இது என்ன மிருகம்.? அரசன் ஆச்சரியத்தோடு கேட்டான். அந்த நாட்டில் அவர்கள் பூனையைப் பார்த்ததில்லை. அங்கு பூனையே இல்லை. மாளிகையில் உள்ளவர்கள் அதிசயம் நடப்பதைக் கண்டார்கள். இப்படியும் ஒரு விலங்கா? எப்படி எலிகளை வேட்டையாடுகிறது.? பூனையின் வெற்றி விளையாட்டு அந்த நாடெங்கும் பரவியது.

அந்தப் பூனையைத் தருமாறு அரசன் கேட்டுக் கொண்டான். "எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் தருகிறோம்" அரசன் தொடர்ந்தான். கூடியிருந்த அனைவரும் சேர்ந்து கொண்டார்கள். "இல்லையென்று சொல்ல வேண்டாம். எலிகளிடம் இருந்து எங்களைக் காப்பாற்றுங்கள். எங்கள் வாழ்வில் உங்களை மறக்க மாட்டோம்" என்றார்கள். "நீங்கள் இப்படிக் கேட்டபின் நாங்கள் மறுக்க முடியாது. நீங்கள் தருவதைத் தாருங்கள். ஏனென்றால் இந்தப் பூனைக்குட்டியின் சொந்தக்காரன் எங்கள் ஊரில் இருக்கிறார்". தனவந்தர் பதிலளித்தார். பெரிய சாக்கு நிறையப் பணத்தினைத் திணித்தார்கள். "இதற்குள் உள்ளவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள்". அரசன் கூறிக் கொடுத்தான். அவர்கள் பூனைக்குட்டியை அரசனிடம் கொடுத்தார்கள். அரசன் அன்புடன் பெற்றுக் கொண்டான். தனவந்தர் விடைபெற்றுக் கொண்டார். அவருக்குச் சந்தோசம்.

பூனைக்குட்டியின் வீரதீரச் செயல்கள் தீவு எங்கும் பரவியது. அதிசயமான விலங்கைப் பார்க்க மக்கள் திரண்டு வந்தனர். பிள்ளைகளுக்கு வேடிக்கையாக இருந்தது. அதிசயமாகப் பார்த்தார்கள். பாடசாலைப் பிள்ளைகள் ஆசிரியர்களோடு வந்தார்கள். எல்லாருடைய பேச்சுக்களிலும் பூனை உலா வந்தது. புறாமலைத் தீவு எலித்தொல்லையில் இருந்து விடுதலை பெற்றது. மக்கள் சந்தோசமாக வாழ்ந்தனர். கந்தவனத்தின் பூனைக்குட்டி புறாமலைத் தீவின் கதாநாயகனாக உலா வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவனம் கவலையில் வாழ்க்கையைக் கழித்தான். அவனுக்கு வெறுப்பாக இருந்தது. ஒருநாள் யாருக்கும் தெரியாது வீட்டை விட்டுப் புறப்படத் தயாரானான். அன்று அவனுக்கு உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தான். விடியற்சாமக் கோழி கூவியது. மெதுவாக வெளிக்கதவினைத் திறந்தான். வெளியில் கால்போன போக்கில் நடந்தான். கோயில் மணி ஒலித்தது. அதன் நாதம் காற்றில் பரந்து அவன் காதுகளில் ஒலித்தது.

'மட்டுநகர் முதல்வனே போகாதே
மாகரக் காவலனே போகாதே
தொட்டுன்னைத் தேடிவரும் அதிர்ஷ்டம்
திரும்பி வந்த வீட்டை நோக்கியோடு'.

இது என்ன பிரமை. எனக்குப் பைத்தியம். தொடர்ந்து நடந்தான். மீண்டும் மணி ஒலித்தது.

'மட்டுநகர் முதல்வனே நீதான்
மாநகரக் காவலனும் நீதான்
மட்டுநகர்த் தலைவனாய் இருப்பாய்
மறந்திடாமல் வீட்டை நோக்கியோடு'.

அதே செய்தி. அதிசயித்தான். ''நான் சொல்லாமல் போவது பாவம். என்னை ஆதரித்த பெரியவர் மனது நோகும்.'' மனதைத் திடப்படுத்தினான். அவனது கால்கள் திரும்பி நடந்தன. மெல்லக் கதவைத் திறந்து வழமையான வேலைகளில் ஈடுபட்டான். பெரியவர் எழுந்து வெளியில் வந்தார். ''கந்தவனம்'' பெரியவர் அழைத்தார். ''நீ ஏன்மகன் கவலைப் படுகிறாய். உனக்குப் பூனைதானே வேண்டும். வாங்கிக் கொள். கவலைப் படாதே. நீ கவலைப் பட்டால் நான் தாங்குவேனா? சொல்'' என்றார். ''இதோ உன் பெயரில் வங்கிக் கணக்கு. உனக்குரிய பணத்தினை இந்தப் புத்தகத்தில் போட்டுள்ளேன்.'' கூறிக் கொண்டு அவன் கைகளில் புத்தகத்தைக் கொடுத்தார். அவன் அழுதே விட்டான்.

தனவந்தரின் கப்பல் மட்டக்களப்பை அடைந்தது. அவரை வரவேற்கப் பலர் திரண்டிருந்தார்கள். அவர்களை அன்போடு விசாரித்தார். அவரவர்களுக்குரிய பணத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது வீடுகளுக்கே கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம். எல்லோரது பணத்தினையும் கொடுத்தாகி விட்டது. பெரியவரின் வீட்டுக்கு விரைந்தார். அன்போடு பெரியவர் வரவேற்றார். தனவந்தரின் கண்கள் சுழன்றன. பெரியவருக்கு விளங்கிவிட்டது. அவர் கந்தவனத்தை அழைத்தார். அவன் வந்தான். தனவந்தர் அவனை அரவணைத்துக் கட்டிப்பிடித்தார். எல்லோருக்கும் பெரிய அதிசயம். கந்தவனத்தின் பூனைக்குட்டியின் கதையைக் கூறினார். அவர் கொண்டு வந்த பணத்தினை அவர்கள் முன் கொட்டினார். "இவை எல்லாம் கந்தவனத்தினால் வந்தவை. அவனது பூனைக்குட்டி என்னைப் பெரிய மனிதனாக்கிவிட்டது." பெருமையோடு சொன்னார். "இந்தப்புகழ் எல்லாம் கந்தவனத்துக்குத்தான். கந்தவனம் வாழ்க!" பலமாகக் கூறினார். பெரியவர் வாயடைத்து நின்றார். பூமணி ஓடோடி வந்தாள். "கந்தவனம். நான் பூனையைக் கொடுக்கச் சொன்னதால்தான் கொடுத்தாய். அல்லவா? எனக்குத் தெரியும். உன் முகம் காட்டிக் கொடுத்தது. என்னை மன்னித்துக் கொள். அவள் அழுதாள். அவனுக்கு ஆறதலாக இருந்தது.

அன்று மாலை தனவந்தர் வீட்டில் பெரிய விருந்து நடந்தது. பலர் கூடியிருந்தனர். கந்தவனத்தைக் கூட்டி வருமாறு பெரியவருக்கு அழைப்பு வந்தது. அவர் குடும்ப சகிதம் வந்தார். தனவந்தர் அவர்களை வாசல்வரை வந்து வரவேற்றார். விருந்து உபசாரம் நடந்தது. தனவந்தர் எழுந்தார். கந்தவனத்தின் பக்கத்தில் போய் நின்றார். "உங்கள் அனைவருக்கும் மிகவும் முக்கியமானவரை அறிமுகம் செய்யப் போகிறேன்." என்றார். அங்கு கூடியுள்ள அனைவரும் உசாரானார்கள். "நமது நாட்டுக்குப் பெருமை சேர்த்த கந்தவனம் இவர்தான்" அறிமுகம் செய்தார். பெரியவர் மகிழ்ந்து போனார். மிகவும் சந்தோசப் பட்டவர் ஒருவர் இருந்தார். அவர் பூமணிதான். கந்தவனத்தின் முகம் நாணத்தால் கவிழ்ந்திருந்தது. பெரியவர் கந்தவனத்தைப் பாசத்தோடு அரவணைத்தார். அனைவரும் கந்தவனத்தைப் பாராட்டினார்கள். அவர்கள் ஏகமனதாக கந்தவனத்தை மட்டுநகர் மேயராக ஏற்றுக் கொண்டார்கள். கந்தவனம் இப்போது பெரிய புள்ளியாக உயர்ந்து சேவைசெய்யப் புறப்பட்டு விட்டான். அவனது மனைவியாக பூமணி இணைந்து கொண்டாள். இப்போது கந்தவனம் மட்டுநகர் முதல்வன் ஆகிவிட்டான். அவனது உள்ளத்தில் அந்தப் பூனைக்குட்டி குடியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆசிரியரின் நூல்கள்

1. இன்பக் கனிகள் - சிறுவர் பாடல்கள்
2. பாட்டுப் பாடுவோம் - சிறுவர் பாடல்கள்
3. காகமும் தம்பியும் - சிறுவர் பாடல்கள்
4. பாடி ஆடுவோம் - சிறுவர் பாடல்கள்
5. கடலும் காவேரியும் - சிறுவர் பாடல்கள்
6. சின்னச் சின்னப் பாட்டு - சிறுவர் பாடல்கள்
7. மனதுக்கினிய பாட்டு - சிறுவர் பாடல்கள்
8. ஆனந்தமான பாட்டு - சிறுவர் பாடல்கள்
9. சகோதரராய் வாழ்வோம் - சிறுவர் பாடல்கள்
10. ஆடி மகிழ்வோம் - சிறுவர் செயல் விளையாட்டு
11. பூஞ்சிட்டுக்கள் - சிறுவர் கதைகள்
12. சின்னத்தேவதைகள் -சிறுவர் கதைகள்
13. கண்ணனும் இராமனும். சிறுவர் கதைகள்.
14. தங்க மாம்பழம் - சிறுவர் கதைகள்
15. பளிங்குத் தீவு சிறுவர் நாவல்
16. பயங்கொள்ளலாகாது பாப்பா சிறுவர் நாவல்.
17. காட்டில் கலவரம்.- சிறுவர் நாவல்
18. உல்லாசப் பயணம் - சிறுவர் நாவல்
19. மனதில் உறுதி வேண்டும் - சிறுவர் நாவல்
20. வாக்கினிலே இனிமை வேண்டும் -இளைஞர் நாவல்
21. கேணிப்பித்தன் கவிதைகள் - கவிதைத் தொகுதி.
22. அந்த ஆவணி ஆறு சிறுகதைகள்
23. வம்மிப் பூ - சிறுகதைகள்
24. கேணிப்பித்தன் கதைகள்
25. அற்புதமான வானம் - சிறுவர் கதைகள்
26. சிறகு வைத்த கதைகள் - சிறுவர் கதைகள்.
27. துணிச்சல் மிக்க சுந்தரி சிறுவர் நாவல்
28. சுனாமி தந்த உறவு. சிறுவர் நாவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்காக எழுதுகிறேன்



உங்களுக்காக இந்நூலை எழுதியுள்ளேன். சிறுவர்களாகிய நீங்கள்தான் உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வல்லமை உடையவர்கள். நீங்கள் வல்லவராக உலாவரவேண்டுமானால் நன்றாக வாசிக்க வேண்டும். உங்களை யாரும் இலகுவில் ஏமாற்ற முடியாத அளவுக்குப் புத்திக் கூர்மையுடையவர்களாக ஆகவேண்டும். எதற்கும், ஏன்? எப்படி? எதற்காக? என்ற வினாக்களை உங்களுக்குள்ளேயே கேட்டுத் தெளிந்து கொள்ளும் வல்லமையைப் பெறவேண்டும். இதனை நான் சொல்லவில்லை. கிரேக்கநாட்டுப் பேரறிஞன் சோக்கரற்றீஸ் கூறியுள்ளான்.

இன்று சிறுவர்கள் ஏமாற்றப் படுகிறார்கள். அவர்களது சுதந்திரம் பறிக்கப் படுகிறது. அதற்குக் காரணம் நமது கல்வித்திட்டம்தான். உதவாக்கரையான கல்வித்திட்டத்தால் சிறுவர்கள் ஏமாற்றப் படுகிறார்கள். அரசியல்வாதிகளின் பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள். பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் அரசு கொடுக்கிறது. உங்களுக்கு இலவசமாகக் கற்பிக்கப் படவேண்டிய பாடங்களைப் பாடவேளைகளில் ஆசிரியர்கள் கற்பிப்பதில்லையா? நீங்கள் தனியார் கல்வி நிலையங்களை நாடுகிறீர்கள். ஏன் அப்படிச் செய்கிறீர்கள்.? சிந்தித்துப் பாருங்கள். நல்ல நூல்களை வாசியுங்கள். நன்றாக விளையாடுங்கள். சுதந்திர வீரர்களாக உலா வாருங்கள். உங்களை நீங்களே புரிந்து கொள்ளுங்கள். வாழ்க்கையில் வெற்றிபெற்று வாழுங்கள். உங்கள் வாழ்வு சிறக்க வாழ்த்துகிறேன்.

கேணிப்பித்தன்~ ச. அருளானந்தம்

ISBN: 955-98211-6-4

Nisaan Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org